விவேக போதினி.

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 1 | 1908-ஞு செப்டம்பர் மீ | பகுதி 3

ஹிந்துமதத்தின் விரிவு
THE EXTENT OF HINDUISM

நமது மதமாகிய ஹிந்து மதமென்று சொல்லப்பட்டது ஒரு ஞான சாஸ்திரமாகும். அது எடுத்துரைக்கும் விஷயங்களெல்லாம் மூடத்தனமாக நம்பவேண்டியவைகளல்ல; பின்னும் ஆராய்ச்சி செய்து அவைகளின் உண்மையையறியத்தகாத கோட்பாடுகளுமல்ல. ஹிந்துமதத்தில் அடங்கி இருக்கும் விஷயங்களாவன:-(1) உண்மையை உணரவேண்டுமென்று உள்ளங்கனிந்து பாடுபட்ட மஹான்களுடைய அநுபூதி விசேஷங்கள்; (2) இவ்வநுபூதிகளை நம் போன்ற பாமரர் அடைவதற்கு வேண்டிய ஸஹாயமான விதிகளும் மார்க்கங்களும் ஆகிய இவைகளே. ஹிந்து மதத்தினுடைய ஸ்வபாவத்தை அறியாதவர்களும், மத விஷயங்களை மூடத்தனமாய் நம்பப் பழகி இருக்கிறவர்களும், மத விஷயங்களை எவ்வாறு ஒழுங்கான சாஸ்திரமென்று சொல்வது என்று சங்கிக்கலாம். "மனவாக்கினிற் றட்டாமனின்ற" வஸ்துவை நாம் மூடத்தனமாய் நம்பவேண்டியதேயொழிய, அதை சாஸ்திர விஷயங்களைப்போல் புத்தி பூர்வமாக ஒழுங்காய் அறியமுடியாதென்பது இவர்களுடைய கொள்கை. இப்படிப்பட்டவர்களுக்கு ஹிந்துமதம் ஒரு ஒழுங்கான ஞானசாஸ்திரமென்பது யுக்திக்குப் பொருந்தாது. ஆகவே இவர்கள் ஹிந்து மதத்தை ஒரு சாஸ்திரமென்று அங்கீகரிக்கமாட்டார்கள். பிரகிருதி சாஸ்திரங்களின் உண்மையான மூல விஷயங்களை, இவ்வாறுதான் இருக்கவேண்டுமென்று ஒழுங்காய் உற்றுநோக்கல், சோதனை, அநுமானம் முதலியவைகளால் நாம் ஒருவாறு தெரிந்து கொள்ளுவதைப்போலப் பெரியோரால் அனுபவிக்கப்பட்ட "மனவாக்கெட்டாச்சித்துருவாய்" இருக்கும் பரம்பொருளானது அவர்கள் வருணித்தவாறு இருக்குமா இல்லையா என்று முன்சொன்ன ஒழுங்காய், அநுபூதி இல்லாத நாம் ஒருவாறு தெரிந்துகொள்ள முடியும் என்பதை அவர் மறந்துவிட்டார்போலும். உண்மையை உணரவேண்டுமென்ற ஆவலுடைய ஒருவன், ஒரு மதவிஷயக் கொள்கையையும், முன் சொன்ன ஒழுங்காய்ப் பரிசோதித்துத் திருப்தியடைந்தாலல்லது, மூடத்தனமாய் நம்பவேமாட்டான். இதற்கேற்ப ஞானவாஸிஷ்டத்தில் வஸிஷ்டமகாமுனி ஸ்ரீராமபிரானை நோக்கி "உண்மையானது பாலர்களிடத்திலிருந்து வந்தாலும் சந்தோஷமாய் அதை அங்கீகரிக்கவேண்டும்; சந்தேகத்திற்கிடமானது பிரம்மதேவனிடத்திலிருந்து வந்தாலும், அதைத் தைரியமாய் நிராகரித்து விடவேண்டும்," என்று

உபதேசித்தருளி இருக்கிறார். முன் சொன்ன மாதிரியாய் மதவிஷயங்களையும் சாஸ்திர ஒழுங்கையும் பிரிக்காமல், ஒன்றுக்கொன்று ஸஹாயமாய்ப் பொருந்தி இருப்பதுதான் ஹிந்து மதத்தினுடைய ஒப்புயர்வற்ற மேன்மைக்கும் விரிவிற்கும் காரணமாகும்.

ஹிமாசலம் முதல் ஸேதுவரையிலுள்ள மதவாதிகளால் ஸித்தாந்தப்படுத்தப்பட்ட ஹிந்துமதத்தினுடைய பாகங்களாகிய மதவிசேஷங்களை உற்று நோக்கின், அவைகளுடைய அனந்தபேதத்தைக் கண்டு திடுக்கிட்டு, இவைகளை எல்லாம் எப்படி ஹிந்துமதமென்று சொல்வது என்று சங்கிக்கவேண்டி வருகிறது. இந்த மத விசேஷங்களுள் சிற்சில தம்முள் விரோதமாகவும் காணப்படுகின்றன. இந்த பேதத்தை நோக்கியே தாயுமானவரும் "செய்யும் வினையனந்தம், கருத்தோ வனந்தம், ஸ்வர்க்க நரகமு மனந்தம், நற்றெய்வமு மனந்தபேதம் திகழ்கின்றசமயமு மனந்தம்" என்று சொல்லி, பின்பு மதவாதிகளெல்லாரும் "பிறவுமே மொழிவ ரிவையாற்பாத ரஸம்போல் மனது சஞ்சலப்படுமலாற் பரமஸுக நிஷ்டை பெறுமோ" என்று பரிதபித்திருக்கிறார். இம்மாதிரியான மாறுபாடுகள் இருந்தபோதிலும் இவைகளெல்லாம் ஹிந்து மதத்தின் பாகங்களே என்றுசொன்னால், ஹிந்துமதம் ஒருவித்யாமண்டலம்போல் பல மாறுபாடான விஷயங்களடங்கிய மதமென்று சொல்லுதல் வேண்டும்.

ஹிந்து மதத்தில் அடங்கிய விஷயங்களை எல்லாம் நன்றாய்ப் பிரித்துப் பார்த்துப் பின்வரும் மூன்று பாகங்களுள் அதனை அடக்கிவிடலாம். முதல் பாகத்திற்கு பக்திமார்க்கமென்று பெயர். இதில் மூன்று உட்பிரிவுகள் உண்டு; அவையாவன:-பயத்தால் பக்திசெய்தல்; ஸ்வர்க்காதிபோகங்கள் வேண்டுமென்று பக்திசெய்தல்; கைம்மாறொன்றும் கருதாது பக்திசெய்தல்; ஆகிய இவைகளே. இரண்டாவதுபாகத்திற்குக் கர்மமார்க்கமென்று பெயர். இது இரண்டு உட்பிரிவுகளையுடையது; அவையாவன:- போகங்கள் ஸுகங்கள் முதலியவைகளைக் கருதி கர்மம் செய்தல்; கைம்மாறு கருதாது நிஷ்காம்யகர்மம் செய்தல்; ஆகிய இவைகளே. மூன்றாவதாயும், மேலானதாயும் இருக்கிற பாகத்திற்கு ஞானமார்க்கமென்று பெயர். நமது தேசத்தில் வழங்கிவரும் மதங்களில் இந்தப் பாகங்களெல்லாம் காணப்பட்ட போதிலும் சிலவற்றில் சில பாகங்கள் அதிகமாகக் காணப்படும். இதனால் தான் ஹிந்துமதத்தில் இம்மாதிரியாயுள்ள விசித்திர மதங்கள் காணப்படுகின்றன.

முதற் பாகமாகிய பக்தி மார்க்கமே உலகில் ஸாதாரணமாகக் காணப்படும் மதங்களில் முக்கியமான பாகம். அதிலும் காம்யபக்தியே எல்லோரும் ஸாதாரணமாக அனுஷ்டித்து வரும் மதம். இந்த மார்க்கத்தை இங்கு விசாரிக்கப்புகுந்தால் மிகவும் விரியும். ஆதலால் அடுத்த ஸஞ்சிகையில் இந்தப் பாகத்தைப்பற்றி விஸ்தாரமாக எழுதுவோம். இப்பொழுது கர்மமார்க்கத்தையும் ஞானமார்க்கத்தையும் இங்கு விசாரிப்போம்.

சிலர், மஹா தீவிரமாய்த் தங்கள் ஜாதிக்குரிய கர்மங்களாகிய ஸ்நானம், நித்யகர்மானுஷ்டானம், வேதாத்யயனம், புராண படனம், யக்ஞயாகாதிகளைச் செய்தல், பொது நன்மைக்குப் பாடுபடுதல் ஆகிய இவற்றைத் தினந்தோறுமாவது, மாதந்தோறுமாவது, வருடந்தோறுமாவது, இஹலோக பரலோக ஸுகம் ஸித்திக்க வேண்டுமென்ற ஆவலோடு, செய்கிறார்கள். இதற்கே காம்யகர்மம் என்று பெயர். இவர்களுக்கும், காம்ய பக்தி செய்கிறவர்களுக்கும் கிடைக்கும் பலன் கொஞ்சம். அதுவும் நீடித்து நிற்கமாட்டாது. இவர்கள் தாம் செய்த புண்ணியம் இருக்கிற வரையில் ஸ்வர்க்கத்தில் வசித்து, அப்புண்ணியம் முடிந்த உடன் இவ்வுலகத்துக்கு வந்துவிடுகிறார்கள். அதனாலே மறுபடியும் அவர்கள் பிறப்பு இறப்

பாகிய 'புனரபிஜனனம் புனரபிமரணம் புனரபி ஜனனீ ஜடரேசயனம்' என்கிற பவஸாகரச் சுழலில் அகப்பட்டுக் கொள்கின்றனர்; ஆதலின் அவர்களுடையும் பலன் நீடித்து நிற்பதல்ல.

முன் சொன்ன ஸ்நானம் முதலிய கர்மங்களை பலத்திலிச்சை விட்டு ஈசுவரார்ப்பணம் செய்து கொண்டு, சிலர் அநுஷ்டிக்கிறார்கள். இந்தக் கர்மத்திற்கு நிஷ்காம்ய கர்மம் என்று பெயர். பலத்திலிச்சை இல்லாமலிருப்பதினாலே அவர்களுக்குத் துக்கமும் பயமும் நிவிருத்தியாகின்றன. இதற்கேற்ப மஹான்களும் "ஆசையே பரமதுக்கம்; நிராசையே பரமஸுகம்" என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த நிராசையால் கர்வம் நமது மனதில் தலை எடுக்கவே மாட்டாது. ஈசுவரார்ப்பண புத்தியானது வரவர அதிகரித்து "அவனன்றி ஓரணுவு மசையாது" என்ற புத்தியை உண்டாக்கிக் கடைசியாய், "எல்லா முனடிமையே, யெல்லா முனுடைமையே, யெல்லாமுன்னுடைய செயலே, எங்கணும் வியாபி நீ," என்று நமது மனதில் நன்றாய்ப்படும்படி செய்யும். ஆகையால் இந்த ஈசுவரார்ப்பண புத்தியானது ஸ்வயநயம் கருதலாகிய அகங்காரத்தை மாய்ப்பதற்குத் தகுந்த மருந்தாகும். ஆகவே நிஷ்காம்ய கர்மத்திற்கு இரண்டு விஷயம் அவசியம் இருக்க வேண்டும்; அவை (1) நிராசை (2) ஈசுவரார்ப்பணபுத்தி, ஆகிய இவையிரண்டுமே. இந்த மாதிரியான கர்மாநுஷ்டானம் பண்ணினதற்கு தேவவ்ருதர் என்னும் பெயர்பெற்ற பாரதசிரேஷ்டராகிய பீஷ்மரே உதாரணம். இவ்விரு திறத்தார்களுக்கும் கர்மமார்க்கிகளென்று பெயர்.

வேறு சிலர் இவ்விரு மார்க்கங்களிலும் சேராதவர்களாய், உண்மைப்பொருள் இன்னதென்று அறிய மனதை நிஷ்காம்ய கர்மத்தால் சுத்தப்படுத்தி குரு ஈசுவரன் ஆகிய இவர்களுடைய கிருபையை முன்னிட்டுக் கொண்டு, முயல்கிறார்கள். இவர்களே ஞானமார்க்கிகள். இந்த ஞானத்தின் ஸ்வரூபத்தை, "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் எடுத்துக் காட்டி இருக்கிறார்.

நாம் அஞ்ஞானத்தால் படவேண்டிய பாடுகள் எல்லாம் பட்ட பின்பே, நமக்கு ஞானம், அதாவது கடவுளோடு இரண்டறக் கலத்தல், என்கிற நிலைவந்து கூடும். "கடவுள் அகண்ட ஸச்சிதானந்தமாய்க் கிரகணத்திலிருந்து விடுபட்ட சூரியனைப்போல் பிரகாசிக்கிறார். அவரைவிட மஹத்தாயும், நுட்பமாயும், புராதனமாயும் உள்ள வஸ்து ஒன்றுமே கிடையாது" என்றிருக்கும் பரம்பொருளின் உண்மை நிலையை உபநிஷத்துக்களில் எடுத்துக் காட்டியவாறு, உள்ளபடி அறிபவன் இந்நிலையை அடைந்த ஒருவனே. இவனுக்கே ஞானி எனப்படுவது. இவன் இருக்குமிடமே மஹாபுண்யஸ்தலம். இவனால் நமக்குண்டாகும் நன்மைகள் மிகச் சிறந்தவை. ஞானி செய்யும் உபகாரமாகிய பந்த நிவிருத்திக்கு ஈடான உபகாரம் ஒன்றும் இல்லை. ஏழைகளுக்கு உபகாரமாகச் சத்திரம், வைத்தியசாலை முதலியவைகளைக் கட்டி அன்னதானம் ஔஷத தானம் முதலாகச் செய்யும் மஹாதர்மங்களும் ஞானி செய்யும் உபகாரத்திற்குத் தாழ்ந்தவைகளே; ஏனெனில் பசி பிணி ஆகிய இவைகள் திரும்பித் திரும்பி வருபவை; ஆதலால், அவைகளை வராமலே இருக்கும்படி செய்யமுடியாது. இந்நிலையிலிருப்பவன், தான் கற்க வேண்டியவைகளை எல்லாம் கற்று, தனக்கும் உபாத்தியாயருக்கும் பேதமே தெரியாத மேன்மையான நிலையிலிருக்கும் மாணாக்கனுக்கு ஒப்பாவன். இந்நிலையில் இருக்கும் ஞானிக்குத்தான் நமது மதத்தின் விரிவும், அதன் உபயோகங்களும், அதன் ஒழுங்கும் நன்றாகத் தெரியவரும். ஞானிகளாகிய பெரியோர்களது ஏற்பாட்டின் பிரகாரமே நமது மதம் எல்லோரையும் கரை ஏற்ற இம்மாதிரியான விரிவுகொண்டு விளங்குகின்றது.

இந்த விரிவின் நோக்கம், அதனால் நமது மதத்திற்கு உண்டாகும் சிறப்பு சக்தி முதலியவைகளைப் பின்வரும் ஸஞ்சிகைகளில் முன்னோரான நமது ஞானிகள் எடுத்துக்காட்டியபடி நன்கு விவரிப்போம்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன், B.A., L.T.

ஈச்வர சந்திர வித்யா ஸாகரர்

ISWARA CHANDRA VIDYASAGAR

(A Life-Sketch)

தற்காலத்தில் நாம் பள்ளிக்கூடங்களில் படிக்கும்பொழுது நமக்கு ஐரோப்பாவில் புகழ் பெற்று விளங்கின பிட் (Pitt) ஹேம்டன் (Hampden) முதலியவர்களின் சரித்திரங்களை சவிஸ்தாரமாகப் போதிக்கிறார்களே தவிர நம் பரதக் கண்டத்திலேயே பிறந்து வளர்ந்து, கீர்த்தியும் சிறப்பு மெய்தி ஆத்மத்தியாகம் என்பதையே கடைப்பிடியாகக் கொண்டு பரோபகார சிந்தனையே மேலிட்டு வசித்தவர்களது சரிதைகளை நமக்கு விளக்கிக் காட்டுகிற தில்லை. இதற்குக் காரணங்கள் பல கூறலாம். அவைகள் எவ்வாறிருப்பினும், நாம் நம் முன்னோர்களின் சரித்திரங்களை அறிய வேண்டிய தவசியம் என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுவார்களென்பதற்கைய மில்லை. சிறுவர்களும் சிறுமிகளும் இம் மாதாந்திர சஞ்சிகையைப் படித்து பெரியோர்களின் வாழ்நாட்களைக் கவனித்து அவர்களைப்போலத் தாங்களும் தங்கள் வாழ்நாட்களை வீணாக்காமல் தேச நன்மைக்காகச் சிறிதேனும் உழைப்பார்களெனக்கருதியே அவர்களின் சரித்திரத்தை எழுதத் துணிந்தனன்.

நம் தேசத்தைச் சீர்திருத்தி நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வர முயன்றவர் சிலருள் ஈச்வர சந்திர வித்யாஸாகரர் என்பவரும் ஒருவர். இவர் ஹூக்ளி (Hoogli) ஜில்லாவில் பர்ஸிங்கா (Birsinga) என்னும் ஊரில் 1820-ம் வருஷம் பிறந்தார். இவர் தகப்பனாருக்குத் தாகூர்தாஸ் பேனர்ஜி என்றுபெயர்; அவர் மிகவும் ஏழையாயிருந்தபோதிலும், கல்வி விஷயத்தில் மிகவும் சிரமமெடுத்து 1829-வருஷத்தில் அப்பொழுது பிரசித்திபெற்று விளங்கின கல்கத்தா ஸம்ஸ்கிருத கலாசாலையில் சேர்ந்தார். அவ்விடத்திலேயே 1841-வருஷம் வரை கடத்தியதில், படிப்பைப்பொருத்த மட்டில் வெகு சுறுசுறுப்பும், சுலபமாய் கிரஹிக்கும் சக்தியும் இவரிடம் நிரம்பியிருந்தன. படிப்பு முடிந்ததும் போர்ட் வில்லியம் காலேஜில் பிரதம பண்டிதராய் மாதம் ஒன்றுக்கு ரூ 50 சம்பளத்தில் நியமனம் பெற்றுப் பின்னர் 1846 வருஷத்தில் அக்காலேஜுக்கே உதவி சூப்பிரண்டெண்டாக அமர்ந்தார் எனினும் அவ்வேலையை ஒருவருஷத்திற்கெல்லாம் ராஜினாமாக் கொடுத்துவிட நேர்ந்தது. 1849-ம் வருஷம் அக்காலேஜுக்கே மாதம் 80 ரூ சம்பளத்தில் தலைமை குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டு 1850ம் வருஷம அக்கலாசாலையில் ரூ 90 சம்பளத்தில் ஒரு உபாத்தியாயராகவே நியமிக்கப்பட்டார். இவரது கல்விப்பயிற்சியையும் மாணவர்க்குக் கற்பிக்கும் வன்மையையும் கண்ட கலாசாலை அதிகாரிகள் 1851-ம் வருஷத்தில் மாதம் ரூ 150 சம்பளத்தில் அக்கலாசாலையின் பிரதம உபாத்தியாயராக வித்யாஸாகரரை நியமித்தார்கள். அவர் அக்கலாசாலையினுபாத்தியாயராயிருக்கும்பொழுது தம்மால் கூடியவரை சிரமப்பட்டு அனேக ஸம்ஸ்கிருதப் புஸ்தகங்களெழுதியும், சிலவற்றை

வங்காளிபாஷையில் மொழி பெயர்த்தும் படிக்கும் சிறுவர்களுக்கு நல்ல ஞானத்தைப் புகட்டினார். நான்கு வருஷங்களுக்குப்பிறகு, அதாவது 1855ம் வருஷத்தில்இவர் மாதம் ஒன்றுக்கு ரூ 500 சம்பளத்தில் ஹூக்ளி ஜில்லா பள்ளிக்கூடம் இன்ஸ்பெக்டராக நியமனம் அடைந்தார். இவ் வுத்தியோகத்திலும் இவர் பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமான அநேக புஸ்தகங்களைப் பிரசுரஞ் செய்து போதனா முறையைச் சீர்திருத்தி, பெண்கல்வியை விருத்தி செய்யவேண்டு மென்று கங்கணங் கட்டிக் கொண்டு அநேக பெண் கலாசாலைகளையும் பல இடங்களில் ஸ்தாபித்தார். 1858-ம் வருஷம் இவருக்கும் இவர் மேலதிகாரிக்கும் ஏதோ அபிப்பிராயபேதமுண்டானதன்மேல் தன் வேலையைத் தக்ஷணமே இராஜீனமாக் கொடுத்து விட்டார். இவருக்கு முக்கிய சிநேகிதரான பங்காள மாகாண கவர்னர் இவரை ராஜீனமா கொடாமலிருக்கும்படி வேண்டிக் கொண்டும் வித்யாஸாகர் தாம்கொண்ட மனவுறுதியைமட்டும் மாற்றவில்லை. இவர் உத்தியோகத்திலிரா விட்டாலும் இவர் வரும்படி குறைந்ததோவெனின், அல்ல, மாதம் ஒன்றுக்கு இவர் எழுதிய அநேக புஸ்தகங்களின் விற்பனையினாலேயே இவருக்கு ரூ 5000 கிடைத்து வந்தது.

இளமைப் பருவத்தில் இவரது தகப்பனார் இவரைக் கோபமாய் அடித்துவிடுவது வழக்கம். அவ்வளவடியையும் பொறுத்துக் கொண்டு 'இவர் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று நம்பி அவர்களுக்குவேண்டிய உபசாரங்களைச் செய்வார். வித்தியாஸாகர் இன்ஸ்பெக்டாயிருந்தபொழுது அவரது அருமை அன்னையிடமிருந்து அவரை உடனே வரும்படி ஒரு தந்தி கிடைத்தது. போகு மார்க்கத்திலோ பிரவாகமிருந்த நதி; காலமோ காரிருள் கவ்விய ஸமயம்; நாள்முழுவதும் நதியில் உழைத்து வருத்தந்தீரப் படகுக்காரர்களெல்லாம் தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். இவர் ஒன்றும் தோன்றாது சற்றுமயங்கி, எப்படியாவது தன்னை யீன்றெடுத்த தாயை அன்றிரவே போய்ப்பார்க்க வேண்டுமென்று தீர்மானித்து, மேல்சட்டையைக் கழற்றிக்கரையில் வைத்து நதியில் குதித்து நீந்தி, அக்கரையேறி வீடுபோய்ச் சேர்ந்தாரென்பதை வாசிக்குங்கால், இவர் கொண்ட மாதுர்பக்தி எத்தன்மையது பாருங்கள்!

'மகன்தந்தைக் காற்று முதவி இவன் தந்தை என்னோற்றான்கொ லென்னுஞ் சொல்' என்றார் திருவள்ளுவ நாயனாரும். இவர் தாய் தந்தை உயிரோடிருக்குமளவும் தன் சம்பளத்தை அவர்கள் கையில் கொடுத்து நமஸ்காரஞ் செய்த பிறகே வேண்டியதைப் பெற்றுக் கொள்வார் என்றும் சொல்லப்படுகிறது.

இவரது கீர்த்தியோ புவியெலாம் புகழ்மிகுந்து விளங்கியது. இவர் உண்மையையே சத்தியமாகக் கொண்டு போலிமதஸ்தர்களைக் கண்டித்து சாஸ்திரார்த்தங்களை எடுத்து விளக்கி நம் தேசம் முன்னுக்கு வரவேண்டிய முக்கிய சீர்திருத்தங்களை எடுத்துக் காட்டினார். நம் வருணத்தில் நாம் சாஸ்திரார்த்தங்களை யறியாமல் பால்யத்தில் விவாகம் செய்து அதனால் ஸ்திரீகள் விதந்துவானவுடன் அவர்களை எவ்வெவ் விதமாய் சுகமறியாமல்செய்யவேண்டுமோ அவ்வவ்விதமாய்ச் செய்து அவர்கள் பூமியில் ஜனித்ததே ஜன்மாந்தர பாபமென்று சொல்லி வீணான ஜீவஹிம்சை செய்து வருகிறோமே. இவ்வழக்கம் பங்காளத்தில் குடிகொண்டிருந்தது. இவர் பால்ய விவாகத்தைக் கண்டித்தார். இவ்விஷயத்தில் 1854-வருஷம் பங்காளி பாஷையில் துண்டுப் பத்திரிகைகளையும் அச்சிட்டு நாடெங்கும் பரவச்செய்தார். தற்காலத்தில் பொதுக் கூட்டங்களில் எல்லாம் உறக்கப் பேசிப் பின் வீடுபோய்ப் படுத்துறங்கிவிட்டு பேச்சோடு நின்றுவிடுகிற சீர்திருத்தக்காரர் போன்றவரல்லரிவர். ஜனங்களுக்கு உபதேசித்து வந்ததையே தாம் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தார். தம் குமாரத்திகளுக்கு 13-ம் வயது வரையில் கல்யாணம் செய்யவில்லை. அனேகருக்கு இவ்விஷயத்தில் பொருளுதவியும்

செய்தார். தமக்கு வரும் 5000 ரூ போதாமல் அதிகமாகக் கடன்வாங்கியும் செலவுசெய்தார். இவர்பெரிய உத்தியோகத்திலிருந்த பொழுதுங் கூட வீட்டுவாசற் படியில் சேவகர்களிருந்தால் நாடிவரும் யாசகன் போய்விடுவானோ என்றெண்ணி சேவகர்களைப் பாராக்கொடுக்கச் செய்வதில்லை. 'கருணை வள்ளல்' என்றால் இவருக்கே தகும். தம்மூரிலேயே ஒரு தர்ம இங்கிலீஷ் பள்ளிக்கூடமும் வைத்தியசாலையும் ஏற்படுத்தினார். இவ்வளவு மனோதிடத்துடன் இவர் முன்வந்த போதிலும் பொது ஜனங்கள் இவரைத் தொந்திரவு செய்தது, இப்பக்கங்களிலிருக்கிற நமக்கு நன்குவிளங்கும். கொழும்புக்குப் போய் இரண்டுநாள் தங்கி பின் வந்தவர்களை ஜாதிக்கட்டிலிருந்து விலக்கிவைக்கிற நம் பண்டிதர்கள் பால்ய விவாகம் செய்யாதவரை எவ்வளவுகொரூரமாய்நடத்தியிருப்பார்கள்? இதுபோன்ற சமயங்களில், மனச்சாட்சிக்கு விரோதமில்லாது நடந்து தன் காரியத்தைச் சாதிக்கிறவனே உண்மையான தேசபக்தனாவான். இவர் ஸம்ஸ்கிருத வங்காளி பாஷைகளி லெழுதிய புஸ்தகங்கள் இப்பொழுதும் பாடங்களாகவே யுபயோகிக்கப்படுகின்றன. 1877ம்வருஷம் கல்கத்தாவில் நடந்த தர்பாரில் இவருக்கு ஒரு யோக்கியதா பத்திரம் கொடுக்கப்பட்டது. 1890-ம் வருஷத்தில் இவர் C.I.E., பட்டத்தையும் பெற்றார். ஸ்ரீ மான் ஸ்வாமிவிவேகாநந்தரின் குருவும் ஈச்வர அவதாரமென்றே பலரால் கருதப் படுபவரும் வங்காளத்தில் சென்ற நூற்றாண்டிலிருந்தவருமான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரே நேரில் இவர் வீடு சென்று இவருடன் மதவிஷயங்களை விவகரித்து இவரைப்பற்றிப் புகழ்ந்து பேசியுமிருக்கிறா ரென்றால் இவரது பிரதாபத்தைப்பற்றி இங்கு நாமின்னும் விரித்தெழுதவும் வேண்டுமோ ? * இம்மஹான் தன் தேசத்தாரின் ஊக்கமின்மைக்காக மிகவும் மனம் நொந்து 1891-ம் வருஷத்தில் தேகவியோகமானார்.

இப்பொழுதும் வருஷத்திற்கொருமுறை இவர் பிறந்தநாளில் ஒரு பெருங்கூட்டம் கூடி அநேக பெரியவர்கள் அக்கிராசனம் வகித்து இவர் வாழ்நாட்களைப் பற்றியும், இவர் நன்கொடையைப்பற்றியும், இவர் செய்த நூல்களைப் பற்றியும் இவரது மனோதிடத்தைப்பற்றியும் உபந்நியஸம் செய்கிறார்கள். இவர் போன்ற பெரியோர்களால் நம்தேசம் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமே ஒழிய, வீண்பேச்சு முதலியவைகளால் நல்ல ஸ்திதிக்கு வராதென்பதை எல்லோரும் அறிந்து நம் தேசாசாரங்களைச் சீர்திருத்த முயன்றால் மட்டும் நாம் இப்புவியில் பிறந்தது வீணல்லவென்பதை விளக்கியவர்களாவோம்.

ஜீ. ஸுந்தரேசய்யர், B.A., L.T.

---

* ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கும் ஈசுவர சந்திர வித்யாஸாகரருக்கும் நடந்த ஸம்பாஷணை:

பரமஹம்ஸர் :—எனக்கு இன்றைக்கு ஸாகரத்திற்கு வரும்படியான அதிர்ஷ்ட மிருந்ததுபோல் இருக்கிறது. இதுவரையில் கால்வாய்கள், சதுப்புநிலங்கள், நதிகள் முதலியவைகளில் நான் தடுமாறிக்கொண்டிருந்தேன்.

வித்யாஸாகரர் :-அப்படியானால் ஸாகரத்திலிருந்து உமக்கு வேண்டுமான அளவு உப்புஜலம் கொண்டுபோகலாம். தடையொன்றுமில்லை. ப:—நீர் லவணஸாகரமல்ல. உம்மிடத்தில் அவித்தையா குடிகொண்டிருக்கிறது? நீர் வித்தையாகிய ஞானம்நிறைந்த க்ஷீரஸாகரம். வி:—நீர் வேண்டுமாகில் அப்படிச் சொல்லிக்கொள்ளலாம். எனக்கு அதை அங்கீகரிக்க மனம் வரவில்லை. ப:—உமது குணம் ராஜஸம்பந்தமான ஸத்வமே. அதனால் தான் நீர் பொதுநன்மைக்கு இவ்வளவு பாடுபடுகின்றீர். பற்றின்றியும் கடவுள் பக்தியோடும் தானம் தயை முதலியவைகளில் பழகிவந்தால் பரமபதம் ஸித்திக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம்! மேலும் நீர் ஸாதாரணமாக ஒரு உபயோகமுமின்றி புத்தகப் பூச்சிகளாக இருக்கும் பண்டிதர்களைப்போலவா? தயை தானம் முதலியவைகளால் உமது மனம் கனிந்திருக்கவில்லையா? ஆகையால் உமக்கு ஸித்தர் (அதாவது வேகவைத்த பதார்த்தத்தைப்போலப் பக்குவமானவர்,)என்ற பெயர் தரும்.

ஊக்கம்

TRY, TRY, TRY AGAIN

பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் படித்து வரும் பாடல்களிலெல்லாம்,

> "உறுதிபயப்ப கடைபோகா வேனும்
> இறுவரை காறும் முயல்ப—இறும் உயிர்க்கும்
> ஆயுள் மருந்து ஒழுக்கல்தீது அன்றால் அல்லன
> ஆவனவும் உண்டு சில" [போல்

என்னும் நீதிநெறிவிளக்க வெண்பாவிலுள்ள இனிமையாகிய சுவையை உடையன மிகவும் சிலவேயாகும். மனம் முறிந்து, இனிமேல் நாம் செய்து முடிக்கக்கூடியது ஒன்றுமில்லை என்று தளர்ச்சியடையும் ஆண்மக்களுக்கும் இப்பாடல் தக்க ஊக்கத்தை உண்டாக்கும் மந்திரமாகும். எவனொருவனுக்கும் தான் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கிய பிறகுதான் தனக்கு எவ்வளவு ஆற்றலுண்டென்று கண்டறியக்கூடும். புதிது புதிதாய்த் தொடங்குங் காரியங்கள் எவையும் மிக்க அருமையும் பெருமையு முடையவைகளாகவே தோன்றும். ஆனால் அடுத்து முயன்று ஒரு காரியத்தைச் செய்யப் பழகியபின் மனமும் உறுதியடைந்து எத்தனைய பெரியகாரியத்தையும் வருத்தமின்றி செய்து முடிக்கத் துணிவு உண்டாகும்.

ஒரேவழி செல்லுமிருவரில் "நான் என்ன செய்வேன்" என்று ஏங்கி நிற்பவன் சேற்றில் காலழுந்தி வழிப்போக்கர்களுக்கும் இடைகேட்டையாய் நிற்பான். வருத்தம் பாராமல் முன்னேக்கிச் செல்லும் துணிவோடு செல்பவனே தான் இழுத்துச்செல்லும், நிரம்ப மூட்டையடுக்கிய, வண்டியைக்கூட கொடிவழிகளிலு மிழுத்துச் செல்வான். பிராணனுக்கு வந்தபோது ஒட்டமெடுக்கத் தயங்கலாமா? முயற்சியானது அதிமாயமான விநோதங்களை வெளிப்படுத்தும். . சிறு தேனீக்கள் ஒன்றுகூடி 'முயல்வோம்' என்றன. மலையிலும் காட்டிலுமுள்ள பூக்களெல்லாம் மதுரமான தேனாக மாறின. மிக்க அற்ப ஜந்துக்களாகிய அணில்கள் 'முயல்வோம்' என்றன. அவை நீள்கடலில் வானரவீரர்கள் கட்டிய சேதுவின் மேடுபள்ளங்களெல்லாம் மணல்தூவிச் சமனாக்கின வென்பது ஓர் பழங்கதை. ஆகாயத்தினின்று விழும் சிறு மழைத்துளி யொன்று 'முயல்வேன்' என்றது. கடலில் ஆழவமுந்திக் கிடக்கும் சிப்பி வயிற்றிற் புகுந்து பலநாள் தவஞ்செய்து பிறகு பெருகொளி முத்தாய் மேம்படலாயிற்று. கண்ணளவில் அடங்கும் உருவமுள்ள சூரியன் 'முயல்வேன்' என்றான். மலையின் கொடுமுடிகளிலுள்ள பனிப்பாறையெல்லாம் தண்ணீராய்க் கரைந்தோடிற்று. முட்டையை விட்டு வெளியேவந்த சிறுபறவைக்குஞ்சுகள் மெள்ளப்பறந்து பார்த்தன. இருக்க இருக்க தங்களிறகுகள் தங்களை வெகுதூரம் தாங்கிச் செல்லும் வலிமையுள்ளனவென்று கண்டுகொண்டன. ஏரில் கட்டிய கடா 'உம்' என்றது. பாழ்நிலமெல்லாம் பாங்குபட்டுப் பயிர் விளையலாயிற்று. முயற்சியின் மாயமே மாயம். பறக்கின்ற பறவைக்கு எது தூரம்? ஏறிச்செல்லத் துணிந்தவனுக்கு எந்த மலைதான் உயரம்? உழுகிறவன் களிமண்ணென்று விட்டுவிடுகிறானா? இறைக்கத் துணிந்தவனுக்கு வற்றாத கிணறும் உண்டோ? அல்லது தைத்து நிரப்பும் வேலைசெய்வோனுக்கு இணங்காக் கந்தைத்துணிதானுமுண்டோ? எறும்பூரக் கல்லுங்குழியும். அடிமேலடி யடித்தால் அம்மியும் நகரும். ஆற்றுக்கு அணை மலைமலையாய்ப் பிடுங்கிப் போடுகிறார்களா? கூடைமண் கூடைமண்ணாய்த்தானே கொட்டுகிறார்கள். உலகத்தில் ஏதேனும் ஒரு காரியத்தை ஒருவன் செய்து முடிப்பானேயானால் அக்காரியம் மற்றவர்களும் செய்து முடிக்கக்கூடியதே; செய்து முடியாத காரியம் கூட ஒருவேளை அடுத்து முயல்வோனுக்குப் படிந்து வரலாம்.

சலப்பையைக் கைப்பற்றிக் காடுகளை உழுவோர் கோழை படாச் செல்வம் அடைதலும், குயக்கலம் வனைவோர் குபேரனாவதும், திரைகடலோடித் திரவியந்தேடுவோர் அரசரோடிருந்து அரசு ஆள்வதும் இம்முயற்சியின் மாயமே யன்றோ? மேலுக்கு வரவேண்டும் என்னும் முன்னேக்க முள்ளோர் இடுப்பில் துணிவை எடுத்துக் கட்டுதல் நலம். தொங்கவிட்டுக் கட்டுபவன் தொங்கியே போவான்.

"உறுவினைகாய்வோன் உயர்வு வேண்டல் பொய்"

விருப்ப மிருந்தால் வேரிலும் காய்க்கும். மன உறுதியுள்ளவழி காரியம் கைகூடும் வழியு முண்டு. சூரியன் பிரகாசித்தல் பெரியோர்க்கும் சிறியோர்க்கும் ஒருங்கே. ஆதலால் கடவுளை நம்பித் தொடுத்த காரியத்தைத் தளராது கைப்பிடித்து சோர்வில்லா தூக்கமுடையவரைக் குன்றும்வழி தடுப்பதில்லை. கோழை செஞ்சடையோன் கோமளவல்லியைக் கைக்கொள்வது முண்டோ? மக்களே! தங்களிரு

தோள்களையே தனித்துணையாகக் கொள்ளுவோர்களுக்கே பரம்பொருள் பக்கத்துணையாய் நிற்கும். அதிர்ஷ்டம் என்னும் பேச்சை ஆற்றில் விடுங்கள். அது கண்காணாததாகவே போகட்டும். அல்லது உண்டு, உடுத்து, குடித்து, மயங்கும் குண்டுணிகளிடத்திலேயே குடிகொள்ளட்டும். நன்மையை வேண்டுவோன் செய்துவைத்த புண்ணியம் அசராத ஆண்மையே.

மனிதர்களுக்கு உயர்வு அவரவர்களுடைய உள்ளம் எத்தனை நீட்டமுடையதோ அத்தனையே. திருவினை ஆக்குவது முயற்சிதான். ஊக்கமும், மிக்க உரமும், ஒன்றிய சூழ்ச்சியும் உள்ளவனை விட்டு ஆக்கம் அகலாது. 'அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்த கருமங்களாகா' என்று பாடிக்கொண்டு முயற்சி செய்யாமலேயிருந்தால் முடியுமா? கருமங்கள் மனிதர் கருதியவாறு ஆகா, பிரமன் எழுதியபடியே என்னும் மடநெஞ்சோடு இரங்கி நிற்பார் இரங்கியே நிற்க. புண்ணியம் வந்தெய்தும் போதல்லாமல் எண்ணியொரு கருமமும் செய்ய வொண்ணாது, என்பாரும் ஏங்கி நிற்க. 'வருந்தி அழைத்தாலும் வாராத வாரா' என்பாரும் வாளா நிற்க. 'மாத்திரைக் கோலெறிந்தாலன்றி மாங்காய் விழாது' என்பாரோடு இணங்குவோம் யாம். வித்து இல்லாவிட்டால் சம்பிரதமும் இல்லாதது போல, கைவினை இல்லாதவிடத்துக் கருமங்களும் ஆகா. 'எழுதினவன் ஓலை பழுது' என்பது எழைமை. அங்காடித் தெருவில் அலைந்து மேய்ந்த பழங் கன்றும் பின்னுக்குப் பெரிய எருதாவதில்லையோ? காற்றுக்கு அசையும் சிறிய செடியும் காலஞ் சென்று காழடைந்து யானைகள் கட்டும் கட்டுத்தறியாகும் பலம் அடைதலில்லையோ? வீணுக்கு விதியே வலிது என்று வாதாடாதேயுங்கள். அனுதினமும் முயற்சி செய்பவர்க்கே கடவுளும் கடாக்ஷிப்பார். செய்யவேண்டிய முயற்சிகளையெல்லாம் செய்திட்டாலே செய்யவள் மணாளனும் வேண்டும் யாவையும் விருப்பொடு கொடுப்பான். முயற்சி செய்யானேல் நயத்தகு போகம் அளித்திடான் என்பது அறிஞர்கூறிய அரும்பத உரை. "முயற்சியில்லாமலே நினைத்தகாரியம் பூர்வ புண்ணியத்தால் கைகூடும் என்றிருப்போர்க்கு அரிசியும் சாயும் சமைக்காமலே சாப்பிடத்தகும் பக்குவம் பெறலாமே. கலத்திலிட்டதைக் கையாலெடுத்து வாயில் போட்டுக் கொண்டாலொழிய தானாகவே வாயில் புகுந்து வயிற்றிலிறங்கிப் பசித்தழலை அவிக்குமோ? விதியே வலிது என்பார்க்கு மாறுகோளாக:—

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்."—என்றும்
"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்".—என்றும்

வற்புறுத்தினர் வள்ளுவனார். ஆகையால் உடையவர்கள் என்னும் பட்டம் பெறவிரும்புகிறவர்கள் யாவரும் ஊக்கம் உடையவர்கள் ஆதல் அவசியம். ஊக்கமில்லாதார் உடையவராதலில்லை. இசையாத காரியமாயினும் எவ்விதத்தேனும் தன் ஆற்றல் கொண்டு இயற்றி அசையாது நிற்பதே ஆண்மையாகும். அரியதே யாயினும் சிறு முயற்சி செய்து உறுபயன் கொள்ளப் பெறுமாகில் ஒள்ளிய ஒழுக்கமுடையோர் அவ்வினை செய்யத்தாழ்வரோ? தாழார். கருமமே கண்ணாயினவர்கள் மெய்வருத்தம் பார்ப்பரோ? யானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, பெண்ணாசை ஆகிய பத்தையும் பறக்கடிக்கும் பசியைத்தான் பொருட்டாக்குவரோ? கண்தஞ்சுவரோ? தமக்குமாறாய்ப்பிறர் இழைக்கும் தீமையைத்தான் மேற்கொள்ளுவரோ? தம்முடைய செவ்வியையேனும் தொடுத்த கருமத்தின் அருமையையேனும் கருதுவரோ?

"பெருமை யுடையதன் அருமை பழியார்"
"அருமை யுடையதன் பெருமை பழியார்"
"நிறையச்செய்யார்க்குறைவினை பழியார்"

என்ற ஆன்றோர் முதுமொழியின் உண்மை தெரியாத வன்மைமிக்க வம்பர் செய்யும் அவமதிப்பைத்தான் பொருட்டாய்க்கொள்வரோ? ஊக்கமுடைமையே ஆக்கத்திற் கழகு. "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்" என்பது பழமொழி. பகீரதன் கங்கை கொணர்ந்ததும், கொலம்பஸ் அமெரிக்காவின் இருப்பைக்கண்டு பிடித்ததும், ஆகிய இவை போன்ற பலவும் இப்பழமொழிக்குச் சாக்ஷிபூதமான திருஷ்டாந்தங்கள்.

பக்கத்துணைபார்த்திருத்தல் பயனற்றது. தங்கள் தங்கள் தடக்கைகளே எக்காலத்திலும் உற்றதுணையாகும். அவைகளை இடுப்பில்கட்டிய துணி கலையும் பொழுது உதவுவதுபோலத் தப்பாமல் உதவுவன. தானுந்தனியுமாய் முயல்வதே உறுபயன் கொள்ளுதற்கு உலையா உபாயம்.

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி"

என்றது பழமொழிவெண்பா. ஆளை அனுப்புதல் அதமம்; மகனைப்போகவிடுத்தல் மத்திமம்; உடையான்செல்லல் உத்தமம் என்ப. விளைந்த வயலில் கூடுகட்டிக் குஞ்சு பொரித்த வானம்பாடி வயலறுத்தற்குப் பிறருதவியை உடையவன் எதிர்பார்த்துப்பேசிய நாள் தன் குஞ்சுகளை இடம்பெயராமல் படுத்திருக்கச் சொன்னதும், தானும் தன்மக்களுமே கதிரறுக்கத் துணிந்தது செவியிற்படவும் வேற்றிடம் தேடிச்சென்றதும், இவ்வுண்மையை வெளிப்படுத்துதற்கு இயற்றப்பெற்றகதை. 'உதட்டு வாழைப்பழத்தை உள்ளேதள்ளுவாருண்டோ' என்றிருப்பார் பசியாலிறக்க வேண்டியவர்களே. பிறன்கைபார்த்து நிற்பவன் பேதையிற் பதர். பொய்க்கால் கட்டிப் பத்தடி நடப்பதற்குள் வெறுங்கால் வெகுதூரஞ் செல்லும். ஏனையோரை எதிர்பார்த்து ஏமாந்து போகாமல் கடவுளை நம்பிக் கைவினைகரவாமல் கருமம் புரிவோர் கைவிடப்படார்.

கையில்பொருள் மிகுந்திருந்தாலன்றோ காரியங்களைத் தொடங்கவாய்க்கும், என்று ஏங்கி நில்லற்க. வினைவல்லானை வீசியெறிந்தாலும் கீழே விழாமல் குதித்து நின்று வேலைசெய்து வருவாய் தேடவாய்த்தவழி விஞ்சுவன். கைம்முதல் கனத்தவர் கடைசியில் கந்தை உடுத்தலுமுண்டு.

'முன்பெருகலின் பின் சிறுகாமை சிறந்தன்று'

தான் தேடிய பொன்னுக்கே மாற்றும் உரையும் உண்டு. தந்தை தேடிவைத்த மணிகளும் கல்லாம், பொன்னும் மண்ணாம். இன்மையோடு தொடங்குவோன் இனிமையோடு முடிப்பான் தன் வாழ்நாளை. பசித்தவனுக்கே புசித்தல் சுவையுடைத்து. கடுத்தின்றோனே கட்டியின் சுவை கடிதில் காண்பன். காணி முதலாளி கோடீசுவரன் ஆவதும் உண்டு

இடத்தாழ்வால் இழிவுபெற்றோம், ஆதலால் ஏற்றமடைதல் எமக்கு ஏலாது, என்றல் ஏழைமை. தாழ்ந்த கள்ளியின் வயிற்றில் பிறந்த அகில் கட்டையை அரசரும் ஆதரிப்பர். குப்பையில் கிடந்தது காற்றடித்துக் கோபுரத்தில் ஏறுதலில்லையோ? கைதேர்ந்த வினையாளன் தன் கூர்ந்த புத்தியையும் செலுத்துவானேல் மற்றவர்கள் இழக்கும் எந்தக் காரியத்திலும் தான் பயன் பெற்றுப் பணக்காரனாவான்.

"சிருடை ஆண்மை செய்கையின் அறிப"

ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணுடையவர்களாய்ப் பொருளைப்போற்றி வாழ்வோர்கள் ஏற்றமடையாத நிலம் எந்த நிலம்?

கருமம் செய்வுழி மெய்வருத்தம் கண்டு கலுழுவோர் கசடர். கனியில் கொட்டையுண்டென்று கழிப்பரோ? முள் உண்டென்று முழுமணம் கமழும் ரோஜாப் பூவை மோப்பதில்லையோ?

துன்பம் வெய்யோர்க்கே இன்பம் எளிது?
'மிகுதி வேண்டுவோன் தகுதி தண்டான்'
'இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்'
'சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்'.

அசைவில்லாத ஊக்கமுடையாரிடம் ஆக்கம் அடையும்வழி தேடிச்செல்லும். உள் அடைபட்டுப் படுத்து உறங்கும் நாயைத்தான் உண்ணி உறிஞ்சும். வேட்டைநாய் அதை அறிந்ததுமில்லை. வெறுஞ் சோம்பேறி வெள்ளம் வடியும்வரை வழிபார்த்து வீண்போது போக்குவான். முயற்சியுடையானோ வெள்ளம் நீந்திக்கடந்து பட்டினத்தில் பண்டம் மாறிப் பயனெல்லாம் பெறுவன்.

பல்லோர் போட்டியால் பயனிழந்தோம் என்பர் பொருள் ஈட்டும் முயற்சியில்லாதார் எவரும்: தென்னை மரத்தில் தேள் கொட்டிற்றென்றால் பனைமரத்தில் நெறி ஏறிற்று என்பவரும் இவரும் ஒருவரே. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினதே சாக்கு. பொய்யோ பிழையோ பழிசுமக்கப் பிறர் உண்டு. ஊர் நிறைந்திருந்தாலும் வேலைசெய்வோனுக்கு வெளியிடமில்லாமற் போகாது. பத்துப்பூனை பதுங்கிக் காத்திருந்தாலும் தப்பிப்பிழைத்து நுழையும் எலிக்கு வளை எப்படியாவது ஏற்படும். நல்ல வினையாளனை நாட்டோர் நாளும் நாடுவர். நல்ல மாடு தன்னூரிலேயே விலைப்போகும். பஞ்சைக்கடையிலும் பத்துக்காசுக்கு விற்கும். மழுங்கச் சிரைத்த தலையிலும் மற்றொருவன் கத்திக்கு மயிருமகப்படும். சிறக்கச்செய்த காரியங்களையும் மேன்மேலும் சிறப்பிக்கலாகும். ஒப்பற்ற வேலைத்திறமை உடையவன் எவனோ அவனையே ஊராரெல்லாம் வேண்டுவார்கள். ஆகையால் ஊதியம் எல்லாம் அவனதே. ஆங்காங்கு பஞ்சுமுதலிய ஆலைகள் அடர அமைக்கப்பெற்று

தால் ஆள்களுக்கு அலுவல் அழிந்து அறக்கூழ்ச்சாலை அடையல் ஆயிற்று என்பார்கள், அந்தியில் அடையக் கூடிய ஆக்கம் அழிக்கும் கள் உண்ணும் அறிவிலிகள். இவ்வாலைகளால் பண்டங்கள் நயத்து பண்டைக் காலத்தில் பத்துப்பொன் பெற்றதெல்லாம் பின்னுக்கு பத்துப்பணத்துக்குப் பெறல் அநேகருக்கு ஒருங்கே அலுவல் அளிக்கல் ஆனதும் முதலிய பெரும்பயன்கள் அவர்கள் மயங்கிய கண்களுக்கு புலப்படாவாயின. குப்பைமேடு குப்பைமேடாய்த் திரிவதே மணியமாயிருப்பவன் காலமெல்லாம் கந்தைகட்டிக் கழிக்க வேண்டியவனே. அப்படிச்செய்வதை விட்டு சற்றே புத்திசெலுத்தி இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாய்க் கைவினை கற்பானாகில் காட்டாளும் வீட்டாளாகலாம். 'காலங் கெட்டுப்போச்சுது, என்பார்கள் கசடர்கள். கொட்டாவி விட்டுக்கொண்டு குணம் இல்லாதவனாய்த் திரிவோனுக்கு எந்தக் காலமும் கெட்டுப்போன காலமே. நல்லகாலம் வரவே வராது.

எந்த விதத்திலும் காரியத்தைச் செய்து முடித்தே தீரவேண்டும் என்ற மனத்துணிவோடு தொடங்காமையாலேயே மக்களிற் பலர் மேன்மையடைவதில்லை. அரைப்பணம் சேமிப்பதுதான் கஷ்டம்; பிறகு ஆயிரம் சேமித்தலெளிது. 'முதல்போடு போட்டதும் பாதிப்போர் முடிந்தது' என்பார்கள். கள்குடுவையை கண்காணாத்தூரம் கடாசிவிட்டு 'முயல்வேன்' என்னும் கொடியை யுயர்த்தி வினை செய்வதையே நாடிச் செல்வானாகில் சிறிது சிறிதாக மீத்துவைத்து நிதிகளில் ஈட்டிக் கடைசியில் நிகரற்ற நிதிக்குவையுடையோனாகலாம். என் தலை விதி நான் தரித்திரனாகவே யிருக்கவேண்டும் என்று எண்ணி எங்கிசிற்போன் என்றைக்கும் ஏழையாகவே தானிருப்பான். ஆனால் கடையரிற் கடையனாகிய வறியனுக்கும் வளவனாக வாய்த்த வழியுண்டு; பவளம் பார்த்து விழித்தகடை; பெண்டாட்டியென்ற கால் விலங்கும் பெற்ற பிள்ளைகள் என்ற சுள்ளாணிகளும் கட்டுப்படுத்தாமுன், இவ்விலங்கங்கள் ஏற்பட்ட மேல் சுமையின் பளுவைச் சுமக்க முடியாமல் வாழ்வென்னும் வழிச்செலவில் பின்னிட்டவனாய், பசியாறக்கஞ்சியும் கட்டக்கந்தையும் கிடைத்தால் அதுவே கோடி பாக்கியம் என்று கொள்ளவேண்டியவனே. ஆனால் அப்படியும் சொல்வதற்கில்லை. குஞ்சுகள் பிஞ்சினால் கோழிகுப்பைகிளறுவதும் அதிகம் தான். நெஞ்சழுத்தமுள்ள நெடியோன் குன்றின் நெடுமைகண்டு உள்ளம் அழிவனோ? மலையேறிச் செல்லல் எவ்வம் உடைத்தே. ஆயினும் படிபாங்காயிருந்தால் போதாதோ? அது கண்டு மனத்துணிவோடு மலையேறும் ஊக்க முடையோன் தப்பாமல் உச்சியடைவான். பட்டபாடெல்லாம் நினைப்புக்கு இனிப்பு. சிறுகாலையிலேயே இளையோர்கள் செய்வி பாராமல் மெய்வருந்தி, கடிது முயன்று, கூழ் குடித்து, காசு மீத்து வைப்பாரேல், காலத்துக்கும் கஷ்டப்பட்டுக் கஞ்சிகுடிக்கக் காரணமிராது. சிக்கனத்தைக்கருதியேனும் கள்குடியைக்கழிப்பாராக. கண்ணிற்சிறந்த உறுப்பு இல்லாதது போல தண்ணீரிற் சிறந்த உண்ணீருமில்லை. அதுவோ இயந்திரங்களையும் இயக்கும் வலிமையுள்ளது. அரிமாவும் பரிமாவும் பருகுவதும் அதுவே. கள்ளுக்கடைக்காசுக்கு கதவுவைத்த வீடு கடிதிற் கட்டலாம். 'கள்ளுண்போன் சோர்வு இன்மை பொய்.'

இம்மையில் நன்மை புரியவேண்டும் இச்சையுடையோர்க்கும் 'முயல்' என்னும் அச்சிறுமொழியே முன்னிற்கும். தெய்வத்துக்குத் தொண்டு செய்யப் பல்வேறு துறைகளுண்டு. அவற்றிலொன்றேனும் ஒருவர்க்கு ஏற்றதாய் அமைவது திண்ணம். பல்லோர் குழாத்தில் பரக்கப்போதிக்கப் பேராற்றல் இல்லையென்று ஒன்றும் செய்யாமல் ஓயவேண்டியதில்லை. பக்கத்திலுள்ள பாமரர் பத்துப்பேர்க்கேனும் போதித்தலே போதும். சிறு புலத்திலும் பெருங்கதிர் விளையும். பெரியபானையில் காய்ச்சினால்தான் பால் உருசிக்கும் என்பதில்லை. சிறு குடிசைகளிலும் பெருந்தவசிகளிருக்கலாம். திருடன் வந்தானென்று தட்டியெழுப்பச் சிறுநாயும் போதும். சிறுபொறியேனும் உள்ளிருப்பது நெருப்பே. சிறு குறளிலும் விழுமியபொருள் ஆழ்ந்து கிடக்கும். செய்வனவற்றைத் திருத்தமாகவும் செவ்வையாகவும் செய்து, மனதார மாயோனை வாழ்த்தி நிறுத்தினால், பயன் கொடுக்கும் பாரம் பரம்பொருளுடையது ஆகும்.

அந்தோ! விழலுக்கிறைத்த நீர்போலும், காட்டுக் கெரித்த நிலவுபோலும், அநேகர்க்குப் புகட்டும் அரிய புத்திமதிகள் ஆற்றிற்கரைத்த புளியாம். கழுதைக்குபதேசம் காதிலே சொன்னாலும் அழுகைக்குரலொழிய அங்கொன்றுமில்லை. பருவத்தில் பயிரிடாமல் தூங்கினால் அறுவடைக்காலத்தில் அழவேண்டியவனே. முன்யோசனையின்றிக் கண்டதே காக்ஷி, கொண்டதே கோலம் என்று அன்றுகொண்டதை அன்றே துய்த்து அழிப்பார்க்கு மறுநாள் மருந்துக்கும் சோறின்றி மடியவேண்டிவரும் என்பது ஒருதலை.

மணியே பொன்னே மண்ணே பொருளே
அணியே துணிவே அகமே நவனே
இகமே சுகமே இவைதாமெல்லாம்
ஊக்கமே யுன்னை யுரைகுறி யன்றே!

ஜ. வே. சுப்பிரமண்யம்

சுகாதாரவிளக்கம்

HYGIENE

(பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது)

மூன்றாவது அத்தியாயம்

உத்ஸிருஷ்டங்களை யகற்றல்

REMOVAL OF EXCRETA

28. உத்ஸிருஷ்டம் என்றால் வெளியில் விடப்பட்டவைகள் என்று அருத்தம். அதாவது மலம் மூத்திரம் முதலியனவாம்.

நகரங்களிற் பெரும்பாலும் விளையும் பெரும் நோய்களுக்கு அந்நகரங்களிலிருக்கும் உத்ஸிருஷ்டங்கள் செவ்வையாக அகற்றப்படாமலிருப்பதே காரணம்.

அதிக ஜனஸங்கமில்லாத கிராமங்களில் வசிக்கும் ஜனங்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு வெளியில் தூரத்திற்சென்று தங்கள் தேகபாதைகளைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். இக்காரணத்தால் உத்ஸிருஷ்டத்தின் தீமை அவர்களுக்கு உண்டாகிறதில்லை. அது மட்டுமல்ல, நகரத்தில் நோயை விளைவிக்கும் உத்ஸிருஷ்டம், கிராமத்தில் நிலங்களைச் செழிக்கச்செய்யும் எருவாகின்றது. அதிக ஜனத்தொகை நெருங்கிய நகர வாசத்திற்றான் உத்ஸிருஷ்டம் அந்நகரத்துக்கு விஷமாய் முடிகின்றது. அதை அப்போதைக்கப்போது அகற்றிவிடாமலிருந்தால் அந்நகரத்தின் நிலம் நீர், வாயு, எல்லாம் கெட்டுப் பெருநோய்கள் விளையவும் இடங்கொடுக்கின்றன.

29. உத்ஸிருஷ்டங்களை உபயோகித்தல்.—நகரவாசிகளுக்கு இவ்வண்ணம் நோயை விளைவிக்கும் உத்ஸிருஷ்டம் பூமியைச் சீர்திருத்திப் பயிர்செய்து பிழைப்பவர்களுக்கு வெகு உபயோகமாகின்றது. உத்ஸிருஷ்டத்தை பூமியில் எருவாகப் போட்டால் அதைவிட அப்பூமியைச் செழிக்கச் செய்யும் எரு வேறொன்றுமில்லை. ஆகையால் உத்ஸிருஷ்டங்களை அப்போதைக்கப்போது நகரத்தைவிட்டு அகற்றி, அவைகள் தேகத்துக்கு நோயை விளைவிக்காமல் பூமியிற் புதைக்கப்பட்டு பூமியைச் செழிக்கப்பண்ணக்கூடிய ஸாக்ஸந்தர் சனவிதிகள் எவையோ அவற்றை நாம் எப்பொழுதும் கவனிக்கவேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் ஸராஸரி தினந்தோறும் தனது தேகத்தைவிட்டு 7 அவுன்ஸ் மலத்தையும் 50 அவுன்ஸ் ஜலத்தையும் மூத்திரத்தையும் கழிக்கிறான்.

30. சாக்கடை.—நமது வீடுகளிலும் வாஸஸ்தலங்களிலும் அழுக்கு முதலியவைகளை அலம்பிவிட்டால் அக்கழிவு ஜலத்தையும், மழை ஜலத்தையும், இன்னும் ஒருவீட்டில் அசுத்தமாகச் செய்யப்பட்டுக் கழித்துவிடப்பட்ட ஜலத்தையும், வெளியிற் கொண்டுபோகக் கட்டப்பட்டிருக்கும் சாதனங்கள் சாக்கடைகளாம். இவ்வாறு அகற்றப்படும் சாக்கடை ஜலத்தில் மல மூத்திரங்களும் கொஞ்சமாவது கலந்திருக்கும். இவ்வண்ணம் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அகற்றப்படும் ஜலத்தை நாம் சிறு சாக்கடைகள்வழியாக அகற்றிப் பொதுவாகத் தெருவிற்போகும் பெருஞ்சாக்கடையில் கொண்டுபோய் விடுகின்றோம். இவ்வாறு சிறு சாக்கடைகளும் பெருஞ் சாக்கடைகளும் ஒவ்வொரு பட்டணத்திலும் இருந்தே தீரவேண்டும்.

31. சாக்கடைகளின் உற்பத்தி.—முதல் முதல் சாக்கடைகளெல்லாம் சாதாரணமாக பூமியில் சிறு வாய்க்கால்களாக வெட்டப்பட்டு உண்டாயிருக்கவேண்டும். அதன்பிறகு நாகரிகம் அதிகரிக்க அதிகரிக்க இச்சிறுவாய்க்கால்கள் நமது தேகசௌக்கியத்தைக் கெடுக்காமலிருப்பதற்காகவும் பார்வைக்கு அழகாகத் தோன்றுவதற்காகவும் செங்கல், கருங்கல், சுண்ணாம்பு, சிமிட்டி முதலிய சாதனங்களாற் கட்டப்பட்டதுமன்றி அதிக நாகரிகம் பொருந்திய லண்டன் முதலான நகரங்களில் இரும்புக்குழாய்களாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பலதுளி பெருவெள்ளம் என்றபடி ஒவ்வொரு வீட்டிலிருந்து சேரும் சாக்கடைத்தண்ணீர் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒருபெரும் சாக்கடை ஆறாகப் பெருகுகின்றதை நாம் நமது பிரதான நகரமாகிய சென்னையிலேயே பார்க்கின்றோம். இச்சாக்கடையில் பலவித துர்க்கந்தங்கள் பலவிதமாக நமது தேகசௌக்கியத்தைக் குறைக்கின்றபடியால் இவ்வாறு விளையும் தீங்கை நாம் எவ்வளவு சீக்கிரமாக அகற்றுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்குச் சௌக்கியம்.

32. சாக்கடைத் தண்ணீரை உபயோகித்தல்.—மலம், மூத்திரம், சாக்கடைத்தண்ணீர் இவைகள் நமக்கு எவ்வளவோ தீங்கை விளைவிக்கின்றவைகளாயிருந்தபோதிலும் புற்பூண்டுகளுக்கு இவைகளே தாம் முக்கியமான எருவாகின்றனவென்பது சாஸ்தி

ரப்பிரகாரம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. உத்விருஷ்டங்கள் புற்பூண்டுகளுக்கு ஆகாரமாகின்றன. அப்புற்பூண்டுகள் மிருகங்களுக்கும் மானிடர்களுக்கும் உதவுகின்றன. ஆனதுபற்றி நமக்குப் பெருந்தீங்காக முதன்முதல் ஏற்படும் இவ்வுத்விருஷ்டங்களை நகரத்தை விட்டு அகற்றி அவைகளைப் பயிர்களுக்கு எவ்வாறு உபயோகிக்கலாம் என்ற வழியை நாம் தேடவேண்டும். அவ்வழிகளில் வெகுமுக்கியமானதும் சுலபமானதும் சாக்கடைத் தோட்டங்கள்தாம்(Sewage Farms). ஒவ்வொரு நகரத்திலுமுண்டாகும் மலஜலங்களையும் மற்ற கழிவுகளையும் பெருஞ்சாக்கடைவழியாக அந்நகரத்துக்கு வெளியே கொண்டுபோய்த் தேக்கி அச்சாக்கடை ஜலத்தை பூமியில் இறைத்துப்பாயும்படிசெய்து தோட்டங்களை உண்டுபண்ணுவதுதான் நமது தேகசௌக்கியத்திற்கு நாம் செய்துகொள்ள வேண்டிய முக்கிய முறை. நாம் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் கிராமங்கள் உள்பட எந்த ஊரிலும் குப்பைமுதலிய எருப்போடாமல் ஒரு பயிரும் விளைகின்றதில்லை என்பது விளங்கும். எந்த நிலமும் நமக்கு இரண்டொருதடவை மாசூலைக் கொடுத்துவிட்டு அதன்பிறகு நன்றாக விளையும் சக்தியை யிழக்கின்றது. அவ்வாறு குன்றும் சக்தியை மறுபடி அந்நிலத்திற்குக் குப்பைகூளங்களைப்போட்டு நாம் திரும்பிவரச்செய்து பயிரிடுகின்றோம். இக்குப்பைகூளங்களில் எச்சக்தியிருக்கின்றதோ அதே சக்தி சாக்கடை நீரிலிருக்கின்றது. அப்படியிருக்கும் சாக்கடைநீரை நாம் ஏன் தோட்டத்துக்கு உபயோகித்து அவ்வாறு செய்வதால் இருவிதலாபத்தை அடையக்கூடாது? முதல் லாபம் அச்சாக்கடை ஜலம் நகரத்தில் நின்று நமது தேகசௌக்கியத்தைக் கெடுக்காமலப்போதைக்கப்போது அகற்றப்படுவது. இரண்டாவது லாபம், அதே ஜலம் நமக்கு அதி அவசியமான எருவாக உபயோகப்படுவது. எவ்வளவு தூரம் நாம் இச்சாக்கடைநீரை நகரத்துக்கு வெளியே கொண்டுபோகலாமோ அவ்வளவு தூரம் கொண்டுபோய் அங்கு அதைத் தேக்கி அது எவ்வளவு தூரம் ஓடிப் பாயுமோ அவ்வளவு தூரம் தோட்டமுண்டாக்கி அந்த ஜலத்தை அத்தோட்டத்திற் பாய்ச்சி பயிருண்டாக்கவேண்டும். சென்னை முனிசிபாலிடியார் இவ்வாறுண்டாக்கியிருக்கும் தோட்டங்களைப் பார்த்தால் இதன் ஸித்தாந்தம் விளங்கும்.

33. சாக்கடைகளின் ஸந்திப்பு:— வீட்டிலிருந்து நாற்றத்தை அகற்றிக்கொண்டு ஓடும் சிறு சாக்கடை, வீட்டிற்கு முற்றிலும் வெளியிற்கடந்து சென்று பெருஞ் சாக்கடையிற் கலக்கவேண்டும். இதின் முக்கியக் கருத்து பெருஞ்சாக்கடைக்குள்ளுண்டாகிவீசும் நாற்றம் சிறு சாக்கடையிற் பிரவேசித்து வீட்டுக்குள் திரும்பிப்புகுந்து அங்கிருக்கும்வாயுவை விஷவாயுவாக மாற்றக்கூடாதென்பதாம். இதற்காகவே ஒவ்வொருவீட்டுச் சிறு சாக்கடையும் பெருஞ்சாக்கடையில் தனித்தனியே கலப்பதும் அவ்வாறு கலக்கப்படுமிடங்கள் பெருஞ்சாக்கடைக்கும் சிறு சாக்கடைக்கும் நடுவிற் கொஞ்சம் இடைவெளியிருக்கும்வண்ணம் பிரிந்திருக்கவேண்டும். பெரும் சாக்கடைகள் ஜலம் கசியாதவண்ணம் பெரும்பாலும் குழல்களால் கட்டப்பட்டிருக்கின்றன. நன்றாகச் சிமிட்டுபோட்டு கட்டுவதால் ஜலம் பூமிக்குள் கசிவது நின்றுவிடுகின்றபடியால் சிமிட்டாலும் கட்டுகின்றார்கள். பல குழல்களைக்கொண்டு பெருஞ்சாக்கடைகள் கட்டப்பட்டிருக்கின்றபடியால் அக்குழல்களிணைக்கப்படும் இடங்கள் ஜலம் கசியாத வண்ணம் நன்றாக ஈயம் காய்ச்சிவிடப்பட்டு இணைக்கப்படவேண்டும். சிறுசாக்கடை பெருஞ்சாக்கடையிற் கலக்குமிடங்கள்தோறும் இடைவெளியிருப்பதற்கும் அவ்விடைவெளியிற் கிளம்பும் நாற்றம் வீட்டு ஜனங்களை வருத்தாமலிருப்பதற்கும் தற்காலம் நமது சென்னையின் ஒரு பாகமாகிய மைலாப்பூரில் அச்சந்திகளிற் குழல்களை நிறுத்தி அக்குழல்களை ஆகாயம் பார்த்து ஓங்கிநிற்கச்செய்து ஒவ்வொரு வீட்டு உயரத்திற்குத் தக்கபடி உயரம் வைத்து அதின் வழியாகப் பெருஞ்சாக்கடையிலுண்டாகும் நாற்றத்தை வீட்டுக்குள் புகவிடாமல் ஆகாயத்தைநோக்கிச் செல்லும்படி செய்திருக்கின்றார்கள். தற்காலம் கண்டுபிடிக்கப்படுகின்ற சுகாதார முறைக்குள் இது வெகு உயர்ந்த முறையென்றும் இதனால் தேகசௌக்கியத்தைப் பாதுகாப்பதற்குக் கொஞ்சமேனும் ஸந்தேகமேயில்லை என்றும் நிச்சயிக்கப் பட்டிருக்கின்றது. அக்குழல்கள் வழியாக பெருஞ்சாக்கடைக்குள்ளுண்டாகும் நாற்றம் வீட்டின் உயரத்துக்குமேலாகக் கிளம்பி ஆகாயத்திற் கலக்கின்றது. வெகு உயரக்கிளம்பிக் கலக்கும் விஷவாயு நமது தேகசௌக்கியத்துக்கு ஒருவித தீமையையும் செய்யாமல் பலவாறு மாறிவிடுகின்றது.

34. சாக்கடைகளைக் கழுவுதல்:-இரும்புக் குழல்களாலும், சுண்ணாம்பு, சிமிட்டு, செங்கல் இவைகளால் வெகு கெட்டியாகக் கட்டப்பட்ட வாய்க்கால்

களாலும் அமைக்கப்படும் பெரும் சாக்கடைகள்தாம் தேகசௌக்கியத்திற்கு ஓர்விதக் குறைவையுமுண்டாக்காமலிருக்கின்றன. இக்குழல்களும் இக்கட்டிடங்களும் வட்டவடிவமாகவே யிருக்கவேண்டும். அப்பொழுதுதான் தண்ணீர் தங்காமல் ஓடும். இவ்வாறு அமைக்கப்படும் சாக்கடைகளை அப்போதைக்கப்போது பரிசோதித்துப் பார்க்க அங்கங்கு சிறு துவாரங்கள் ஒருமனிதன் இறங்கிச் சோதிக்க இடங்கொடுக்கும் வண்ணம் ஏற்படுத்த வேண்டும். இதை(Man-hole) மனிதனிறங்கும் துவாரம் என்று சொல்லுகிறார்கள். இத்துவாரங்கள் இரும்புக் கதவுகளால் அழுத்தமாகச் சாத்தப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதபக்ஷத்தில் அதன்வழியாக எப்பொழுதும் நாற்றமுள்ள விஷக்காற்று வீசிச் சுகக்குறைவை விளைவிக்கும். முதன்முதல் நன்றாகத் தண்ணீரை விட்டுச் சாக்கடைகளைக் கழுவி கடகடவென்று ஓடச்செய்யவேண்டும் மனிதனைக் கொண்டு சோதிப்பதற்குமுன்னமே இவ்வாறு தண்ணீரால் நாம் சாக்கடைகளைச் சோதிக்க வேண்டும். வீட்டிலிருந்து ஓடிக்கலக்கும் சிறுசாக்கடைகளைச் சுண்ணாம்பு கலந்த ஜலத்தை ஊற்றிக் கழுவவேண்டும். பெருஞ் சாக்கடைகளை ஸமிருத்தமாகத் தண்ணீர் ஓடச்செய்து கழுவ வேண்டும். இதைத்தான் (flushing) நிரம்பவிட்டுக் கழுவுதல் என்பார்கள். அவைகளிலுள்ள கெட்டகாற்று வெளியே செல்லுவதற்கும் நற்காற்று உள்ளே புகுவதற்கும் ஆங்காங்கு வழிகளை அவசியம் வைத்தே பெருஞ்சாக்கடைகளை நாம் கட்டவேண்டும். இவ்வண்ணம் வழி வைப்பதற்கு ஒரு முறையை எடுத்துக்காட்டுவது சாத்தியமல்ல, ஏனெனில் பெருஞ்சாக்கடைகள் அவைகள் ஓடுகின்ற இடங்களுக்குத் தக்கபடி கோணலாகவும் நேராகவும் கட்டப்பட்டிருக்குமாகையால், எவ்விடத்தில் நாற்றம் அதிக ஸுலபமாக வெளிக்கிளம்பலாம் என்று தோன்றுகின்றதோ அவ்விடங்கள்தோறும் அந்நாற்றம் வெளிப்போக வழியும் அமைக்கவேண்டும். இதில் நாம் எப்பொழுதும் மனதில் கவனிக்கவேண்டிய ஒரு பிரதான முறையாதெனில் நீரோட்டம் ஓடும் திசையேயாம். அத்திசையை அனுசரித்தே நாற்றம் வெளிக்கிளம்ப வழியை நாம் அமைக்கவேண்டும்.

பெருஞ்சாக்கடையைக் கழுவிவிடப் போதுமான ஜலமில்லாததாலும், ஏதாவது சாக்கடையிலடைத்துக்கொண்டு ஆங்காங்கு சாக்கடை ஜலம் எதிர்த்துத் தேக்கமாய் நிற்பதாலும் சாக்கடை சரியாகக் கழுவப்படாமற்போகலாம். அக்காரணங்களால்உண்டாகும் அசௌக்கியத்திற்கு அளவேயில்லை. அப்பொழுது சாக்கடை கழுவுகின்றவன் சாக்கடையிலிறங்கி அதிலிருக்கும் அசுத்தங்களை வாரிவெளிப்படுத்தவேண்டும். ஸமிருத்தமாய் ஜலம் ஓடச்செய்து கழுவுவதுதான் உத்தமமென்பதும், மற்றவிதங்கள் அவ்வளவு சுத்தமல்லவென்பதும் ஸுக ஸந்தர்சன சாஸ்திரிகளின் கொள்கைகள்.

35. சாக்கடைத் தண்ணீரை அப்புறப்படுத்துதல்:—சாக்கடைத்தண்ணீரை யிறைத்துத் தோட்டமுண்டாக்குவதைப்பற்றி (Sewage farms) நாம் முன்னமேயே சொல்லியிருக்கின்றோம். சிலவிடங்களிற் பெருஞ்சாக்கடைத்தண்ணீரை சிமிட்டாலும் கல்லாலுங் கட்டிய பெரிய குளங்களிற் றேக்கி அந்நீரிலிருக்கும் கனபதார்த்தங்களை எல்லாம் அக்குளத்தினடியிற் படியச்செய்து நீரைமட்டும் அக்குளத்தின்வாயில் மற்றொரு சிறுகுளத்தில் வழியச்செய்து அவ்வாறு வழிந்தநீரை ஓர்வித பிரயோஜனத்துக்கும் உள்ளாக்காமல் வீணாய் இறைத்துவிடுவது வழக்கம். நீரை யிவ்வாறு அகற்றியபிறகு முதற்குளத்தினடியிற்படிந்த கனபதார்த்தங்களை வெளியிலெடுத்து உலர்த்தி மண்ணுடன் கலந்து விடுகின்றார்கள். இது சரியான முறையல்ல. இத்தண்ணீரை இதிலிருக்கும் கனபதார்த்தங்களுடன் தோட்டத்திற்காக உபயோகிப்பதே நேரான முறையென்று எல்லா ஸுக ஸந்தர்சன சாஸ்திரங்களும் வெளியிடுகின்றன.

36. சாக்கடைத் தண்ணீரைக் கடலிற் போக்குவது:—இம்முறையை சென்னையில் நாம் பார்க்கலாம். இவ்வாறு நாம் சீராகச் செய்யவேண்டுமானால் சமுத்திர நீர்மட்டத்திற்குக் கொஞ்சம் பள்ளமாகவே அச்சாக்கடை சமுத்திரத்திற் கலக்கும் துவாரத்தை நாம் ஏற்படுத்தி அத்துவாரத்தின் வழியாக சமுத்திர நீர் எதிர்த்துச் செல்லாத வண்ணம் கெட்டிக் கதவுகள்போட்டு கடல் உள்ளடங்கியிருக்கும் வேளைகளிற் சாக்கடைவாயைத் திறந்துவிட்டு சமுத்திரம் உயரும் வேளைகளில் அவ்வாயைமூட ஏற்பாடு செய்யவேண்டும்.

37. சாக்கடையை நதியிற் போக்குவது:—சாக்கடையை சிலவிடங்களில் நதியில் விடுகின்றார்கள். இவ்வாறு செய்யுமிடங்களில் சாக்கடைவாயிற் சல்லடைபோன்ற கதவுகளை யமைத்து அக்கதவுகளின் உட்பக்கத்தில் கனபதார்த்தங்களைத் தேக்கி வெளியில் வாறி எறிந்து சாக்கடைநீரை மட்டும் ஆற்று

நீரிற் கலக்க ஏற்பாடு செய்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் செய்வது சாக்கடைநீரில் விஷமில்லையென்றும் அதிலுள்ள கனபதார்த்தங்களிற்றான் விஷமிருக்கிறதென்றும் அபிப்பிராயங் கொண்டதுபோலும். இது முற்றிலும் தப்பான அபிப்பிராயம். அதிக விஷம் சாக்கடை நீரிலேயே யிருக்கின்றது. நதிசலத்தில் சாக்கடைநீர் கலக்க இடங்கொடுக்கவே கூடாது.

38. சாக்கடைத் தோட்டம்.-நாம் சாக்கடைநீரை தோட்டங்களுக்குப் பாய்ச்சி எருவாகப் பண்ணிப் பயிரிடுவதுதான் எல்லாவிதத்திலும் உயர்ந்த முறை. இவ்வாறு உண்டாக்கப்படும் தோட்டம் அச்சாக்கடைநீர் ஓடிப்பாயும் காலின் இருபக்கங்களிலேயும் சரிவாய் (sloping) இருக்கவேண்டும். நாம் இறைக்கும் சாக்கடை நீர் சரேலென்று எங்கும் ஒரே அளவாக ஓடிப்பாயவேண்டும். அப்பொழுதுதான் அதிலிருக்கும் எரு பூமியின்மேல் எங்கும் சம்பந்திக்கும். இவ்வெருவால் சில புற்கள், கிழங்குகள், பருப்பு இனத்தைச் சேர்ந்த காய்கறிகள் முதலியன வெகுசெழிப்பாய் விளைகின்றன. சென்னையில் விசேஷமாய் இச்சாக்கடை ஜலத்தாற் பைம்புற் பயிரிடுகின்றார்கள். அப்புல் வெகு ஏராளமாயும் வெகு செழிப்பாயும் விளைகின்றது. இவ்வாறுண்டாகும் புல்முதலிய பதார்த்தங்களால் உடம்பிற்கு ஓர் வித தீங்குமில்லை. பூமி அடிக்கடி எருவை வாங்கிக்கொள்ளுவதால் அதின் செழிப்பு குறைவுபடாமல் எப்பொழுதும் மாகூலைக் கொடுக்கின்றது.

இத்தோட்டங்களை உண்டாக்குவதில் நாம் கவனிக்கவேண்டியது முக்கியமாக ஒன்றுண்டு. இத்தோட்டங்கள் ஜனங்கள் குடியிருக்குமிடங்களுக்குச் சமீபத்திலிருந்தால் அச்சாக்கடை நீர் இறைபடும்பொழுது உண்டாகும் நாற்றம் ஜனங்களுடைய சுகத்தைக் கொஞ்சம் மாற்றும். பூமியிற் கலந்த பிறகு ஒருவித உபத்திரவத்தையும் உண்டாக்காது. ஏனெனில், அந்நாற்றம், அந்நாற்றஜலம், நாற்றமண் முதலியவையெல்லாம் பூமியிற்படிந்து ஒஷதிகள் ஆகர்ஷித்து வளரப் பெரும் எருவாகும். அத்தோட்டங்கள் கிணறுகளுக் கருகாமையிலிருந்தால் அத்தோட்டத்தின் மண்ணிற்பதியும் ஜலம் அடித்தரைமட்டும் பொசிந்து ஒருகால் அக்கிணறுகளின் ஜலத்தைக் கெடுக்கலாம். நகரத்துக்கு வெகுதூரம் சாக்கடைகளைக் கொண்டுபோவதால் இத்தீமையை நாம் முற்றிலும் அகற்றலாம். அல்லது தோட்டங்களை விசாலமாகப்பண்ணி பூமிக்குள் 4, 5, அடிகள் மட்டும் அச்சாக்கடைநீர் படியும்படிசெய்து, அதின்மேல் நாம் ஒஷதிவர்க்கங்களை உண்டாக்கிவரவேண்டிய ஜாக்கிரதையைச் செய்துவந்தால் அந்நான்கு ஐந்து அடிக்குள்ளேயே இவ்வோஷதிவர்க்கங்கள், எல்லா மலத்தையும் அந்நீரிலிருந்து ஆகர்ஷித்துக்கொண்டு கூடியமட்டும் சுத்தஜலமே அடிக்கிணறுகளில் இறங்கும்படி செய்யும். இவ்வாறு ஜாக்கிரதையாகவிருப்பதால் இத்தீங்கு முற்றிலும் நீங்கும்.

39. மலத்தை யகற்றல் மூன்று விதம்.—(1) மலத்தை அவ்வாறே அகற்றி அப்புறப்படுத்துவது (2) மலத்தை அதிக ஜலத்தால் சாக்கடையிற் கலக்கச் செய்து சாக்கடை ஜலத்துடன் அப்புறப்படுத்துவது (3) மலத்திற் சாம்பல் அல்லது கரி அல்லது மரத்தூள் இவைகளைக் கலந்து அப்புறப்படுத்துவது.

(1) மூத்திரத்தைமட்டும் சாக்கடையிற் கலக்கச் செய்து, மலத்தைத் தனியே அப்புறப்படுத்தி அம்மலத்தால் மலபஸ்மம் "Poudrette" என்ற ஒரு எரு உண்டாக்குவார்கள். இது வெகு உயர்ந்த எரு. இம்மலபஸ்மம் உண்டுபண்ணுவதற்காக யந்திரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வியந்திரசாலையில் வேலை செய்கின்றவர்களுக்கு நாற்றத்தால் உபத்திரவம் கொஞ்சமிருக்கலாமென்றாலும் அவர்களுடைய தேகசௌக்கியத்திற்கு ஓர்விதக் குறைவுமில்லை.

(2) அதிக ஜலமிருக்கும் நகரங்களில் சாக்கடைகளிலேயே மலத்தையும் மூத்திரத்தையும் முற்றிலு மலம்பிவிட்டு அகற்றி நகரவாசத்துக்கு 500 கஜங்களுக்கு அதிகமான தூரத்தில் அவ்விதச் சாக்கடைகளைக் கொண்டுவந்து தேக்கி, அவ்வாறு தேக்கப்பட்ட சாக்கடைநீரை வெளியே யிறைத்துத் தோட்டங்கள் உண்டுபண்ணுவதால் வெகு செழிப்பான தோட்டங்கள் உண்டாவதுடன் ஜனங்களுடைய தேக சௌக்கியத்திற்கு ஓர்விதக் குறைவுமுண்டாகின்றதில்லை. இவ்வாறுசெய்ய ஏராளமான தண்ணீர் வேண்டும். இவ்வித சாக்கடைகளிலிருந்து கெட்டகாற்று வீட்டுக்குட் புகாதவண்ணம் பெருஞ்சாக்கடைகள் வெகு கெட்டியாகவும் கொஞ்சங்கூட தேக்கங்களின்றி ஓடுகின்றவைகளாகவும் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

(3) அடுப்புக்கரிப் பொடி, சாம்பல், சாதாரணமான ரம்பத்தூள், நாற்றத்தை மாற்றும் தூள்கள் (Deodorising Powders) இவைகளை மலத்துடன் கலந்து மலத்தை வீட்டைவிட்டு அகற்றி அவ்வண்

ணம் குவிக்கப்பட்ட மலத்தை அப்படியே பூமிக்குள் புதைத்து எருவாக்கவேண்டும். இம்முறைதான் நமதுதேசத்தில் இப்பொழுது அதிகமாக வழங்கிவருகின்றது.

40. குப்பை, கூளம், முதலியவை.—உத்விருஷ்டங்கள் மட்டுமேயன்றி பலவித குப்பைகள் நமது வாஸஸ்தலங்களைச் சுற்றிலும் வாஸஸ்தலங்களிலும் எப்போதும் உண்டாய்க்கொண்டிருக்கின்றன. வீட்டுச்சாம்பல், அடுப்புக்கரி, கஞ்சி, கழுநீர், லாயம் மாட்டுப்பட்டி இவைகளிலிருந்து வெளியே கொட்டப்படும் குப்பை, கசாப்புக்கடையிலிருந்து அகற்றப்படும் அசுத்தங்கள், வீடுவாயில்களை அடிக்கடி கூட்டிச் சேர்க்கப்படும் குப்பை இவைக ளெல்லாவற்றையும் நாம் அகற்றக் கடமைப் பட்டவர்களாக விருக்கின்றோம். அதே மாதிரிதான் சவங்களையும்.

சாம்பல், சருகு, எச்சிலிலை இவைகள்போன்ற குப்பைகளை எல்லாம்கூட்டி குப்பைத்தொட்டியிற்கொட்டி வண்டிகளால் அகற்றி புலங்களுக்கு எருவாக்க வேண்டும். சிலவிடங்களில் இக்குப்பைகளை நகரத்துக்கப்பால் பள்ளங்களில் கொட்டி நிரவி, அதின்மேல் அரை அடிமண் இழுத்துவிட்டு மூடுகின்றார்கள். இவ்வாறு மூடப்படும் குப்பை மண்ணோடு மண்ணாய் மாறி தேகத்துக்கு ஓர்விதத் தீங்குஞ்செய்யாமலிருக்க குறைந்தபட்சம் ஏழு வருஷங்களாக வேண்டும். இவ்வண்ணம் குப்பைகொட்டி மூடிய யிடத்தையே பெரும்பாலும் சாக்கடைத்தோட்டங்களாகப் பண்ணிப் பயிரிடவேண்டும்.

41. தகனஸ்தம்பங்கள் (cremators).—நகரத்திற் குவியும் குப்பைகளை பூமியிற்கொட்டி மூடுவதைக்காட்டிலும் நெருப்பில்கொடுத்து நீறுக்குவது எல்லாவிதத்திலும் மேலானது. தகனஸ்தம்பங்கள் (cremators) கட்டி எல்லாவிதக் குப்பைகளையும் அவ்விடங் கொண்டுவந்து உடைந்த ஓடுகள், கண்ணாடிகள், இரும்பு, தகரம் முதலிய கனக்குப்பைகளை வேறாகவும் இலேசான குப்பைகளை வேறாகவும் எரிக்கவேண்டும். கனக் குப்பைகளை எரித்து ஒருவித சாள் உண்டாக்கி ரஸ்தாக்களுக்குப்போட்டுக் கட்டிக்கலாம். இலேசான குப்பையால் உண்டாக்கும் நீற்றை உயர்ந்த எருவாக உபயோகிக்கலாம்.

இவ்வாறு குப்பையை எரிக்க உண்டாக்கப்படும் தகனஸ்தம்பம் வெகு சாஸ்திரோக்தமாய்க் கட்டப்படவேண்டும். இல்லாவிடில் அவைகளிலிருந்து குப்பை எரியுங் காலத்தில் உண்டாகும் நாற்றம் அசௌக்கியத்தைவிளைவிக்கும். சென்னையில் இத்தகனஸ்தம்பங்கள் கொஞ்சவருஷங்களுக்கு முன்னற் பிசகாகக்கட்டப்பட்டு உபயோகிக்கப்படாமலிருந்தன. இப்பொழுது இரண்டு ஸ்தம்பங்களை சாஸ்திரப்பிரகாரங் கட்டி அவைகளில் குப்பைகளை எரித்து வருகின்றார்கள். நமது நாட்டில் இம்மாதிரியான ஸ்தம்பங்கள் கல்கத்தா நகரத்தில் விசேஷமாய் வெகு சாஸ்திரோக்தமாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

42. பிணத்தை யகற்றல்.— பிணமும் ஓர் உத்விருஷ்டம். ஆனால் ஒவ்வொருவரும் தமது மதாசாரப்பிரகாரம் பிணத்தை அடக்கஞ்செய்கின்றார்கள் அல்லது எரிக்கின்றார்கள். பாரஸீகஜாதியார் கழுகுக்கும் பருந்துக்கும் விருந்திடுகின்றார்கள். இம்மூன்று விதங்களுள் பிணத்தை எரிப்பதே எப்பொழுதும் சிலாக்கியம். ஜர்மனி, இத்தாலி தேசங்களிலும் பிணத்தை எரிப்பதை வழக்கத்தில் கொண்டுவந்து அதுவே உத்தமம் என்று ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். பிணத்தை எரிப்பதால் ஒருமணிக்குள்ளாக அதை நீறுக்கிவிடலாம். அக்காரணத்தால் பிணத்தால் உண்டாகும் நாற்றம் நோய் முதலியவைகளை பிழைத்திருக்கும் நமக்கு உண்டாக்கமாட்டா.

43. பிணத்தைப் புதைத்தல்.—ஒவ்வொரு பிணத்தையும் நாம் புதைப்பதாயிருந்தால் நமது நாடு முழுமையும் பிரேத பூமியாகவே மாறிவிடும். சில மண்ணில் சவம் சீக்கிரம் அழுகும், சிலமண்ணில் நாட்பிடிக்கும். பிணம் புதைத்தவிடங்களிலிருந்து கிளம்பும் விஷக்காற்று பிழைத்திருக்கப்பட்டவர்களுடைய தேகசௌக்கியத்திற்குப் பெருந்தீங்கை விளைவிக்கின்றது. நூறு வருஷங்கள் அழுகிக்கிடந்து நோயை விளைவிக்கும் பிணம், எரிப்பதால் ஒரு மணிக்குள் நீறாய்விடுகின்றது. மதாசாரங்களை நாம் எளிதில் மாற்ற முடியாததலால் புதைக்கும் வழக்கமுள்ளவர்கள் குழியை ஆழமாகத்தோண்டி சவத்தை வைத்து அத்துடன் சுண்ணாம்பு அல்லது மரக்கரி இவைகளைக் கொட்டி மூடுவதால் இவ்வித அசௌக்கியம் கொஞ்சம் நீங்கும்.

44. நோயால் சாகும் சவங்கள்.—நோயில் வருந்திச் சாகும் மிருகங்கள் மகாமாரி முதலிய் தொத்துநோயால் மாண்டுபோகும் மனிதர்கள் இப்பிணங்களை எப்பொழுதும் எரிப்பதே நலம். இவைகளை யகற்றிவெளியே கொண்டுபோகும்பொழுது தொத்துநோய் மற்றவர்களைப் பற்றாமலிருக்க துணியை ஒருவித திராவகத்தில் நனைத்து அத்துணியால் இச்சவங்களை நன்றாக மூடி வெளியிற் கொண்டுபோக வேண்டும்.

45. மயானங்கள்.—பிணத்தைப் புதைக்கும் இடம், எரிக்கும் மயானம் இவைகள் நமது வாஸஸ்தலங்களுக்கும் நாம் நீர் எடுக்கும் இடங்களுக்கும் வெகுதூரத்தில் ஒதுங்கி யிருக்கவேண்டும்.

புளிய மரம்

THE TAMARIND TREE

இந்தியாவிலுள்ள பயன்தரு மரங்களுள் புளிய மரமும் ஒன்று. அது இந்தியாவில் நெடு நாளாயுள்ளது. வெப்பமான நிலங்களிலுள்ள மரங்களில் புளிய மரத்தைப் பார்க்கினும் பயன் படுவன வேறு இல்லை. புளியமரத்தின் குணங்களை முதலில் இந்துக்களிடமிருந்து அரபியர்கள் கற்றுக் கொண்டார்கள்; அவர்களிடமிருந்து ஐரோப்பியர் கற்றுக்கொண்டார்கள். அரேபியா தேசத்திலும் பாரசீகத்திலும் புளியமரம் ஒரு காலத்தில் இந்து நாட்டுப் பேரீந்து என்னும்பேரால் வழங்கினது. புளி இந்தியா தேசத்தில் எல்லா விடங்களிலும் உண்டாகின்றது. சென்னை இராஜதானியிலும் நடு இந்திய காடுகளிலும் அது அதிகம். புளி நடுவதற்கு மாரிகாலமே தகுந்தது. புளியங்கொட்டைகளை நல்ல ஈரமுள்ள இடத்தில் முளைக்கப் போடவேண்டும்; முளைத்து இரண்டு மூன்று வருஷங்களில் அவை பெரிய கன்றுகளாய் விடும். காடுகளிலும் மலை சார்ந்த இடங்களிலும் புளியமரங்கள் பெருந் தொகையாக வளருகின்றன. அவை சில வருஷங்களில் பெரிய மரங்களாகி நெடுநாளைக்கு அழியாமல் நிற்கும். புளியமரம் எழுபத்தைந்து எண்பது அடி உயரம் வளரும்; அதன் கிளைகள் நான்கு புறத்தும் விரிந்து படர்ந்து மிக அழகாகத் தோன்றும்; அதன் பாரை இருபத்து நான்கடிச் சுற்றுள்ளதாக விருக்கும். அது சித்திரை வைகாசி மாசங்களில் பூத்து, ஐப்பசி கார்த்திகை மாசங்களில் பழுக்கும். ஒரு பெரிய மரத்தில் ஐந்தாறு மடங்கு பழம் பறிக்க முடியும். புளியம்பழம் கறிகள் துவையல்களுக்கு உபயோகமாகும்; அது பெருந் தொகையாகப் பிறதேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றது. இந்தியாவிலுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் புளி இன்றியமையாத உணவுப்பொருள். மாங்காய் பலாக்காய் இல்லாமல் காலந் தள்ளினாலும், புளியில்லாமல் ஒருவர் காலந் தள்ள மாட்டார்கள். புளியமிலைமுதல் புளியம்பழக்கோது ஈறாக எல்லாம் உணவுப் பொருளாகப் பயன்படுகின்றன.

புளியின் பிரயோசனத்தைப்பற்றி வங்காளதேசத்தில் ஒருகதை வழங்குகின்றது. அது வருமாறு:--நாடியா என்னுமூரில் தருக்கசாஸ்திரி ஒருவர் இருந்தார். ஒருநாள் அவர் வீட்டில் சமைப்பதற்குச் சிறிது அரிசியேயன்றிக் கறிக்கு ஒரு பொருளுமில்லாதிருந்தது. அவர் மனைவி வந்து என்ன கறிசமைப்பது என்று அவரைக் கேட்டாள்; அதற்குத் தருக்கசாஸ்திரி திடீரென்று எழுந்து புளியமரத்தை உற்றுப்பார்த்தார். அதை அவள் அறிந்துகொண்டு, புளியமரத்தருகில் சென்று, சில இலைகள் பறித்துப்போய் ஒரு கறிசமைத்துவைத்தாள். தருக்கசாஸ்திரி வெளியே போய்த் தனது வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவந்து சாப்பாட்டிற்கு உட்கார்ந்தார். மனைவி சாதத்தைப்படைத்துப் புளியமிலைக்கறியை இட்டாள். அவர் அதைமிகவிருப்பத்தோடு சாப்பிட்டார். திருப்தியாகச் சாப்பிட்டபின் சாஸ்திரியார் "இந்த அமுத முதவும் புளியமரம் எங்கள் வீட்டில் நிற்கும் வரைக்கும் எங்களுக்கொருகுறைவுமில்லை" என்று சொன்னார். இது புளியமரத்தின்பிரயோசனத்தை நமக்கு அறிவுறுத்தற்பொருட்டு வழங்கிவரும் ஒரு கதையென்றாலும், நாம் புளியினது பயனின் மிகுதியை மறந்து விடுவதற்குச் சிறிதும் இடமில்லை.

புளியினிடத்து மனிதர்களுடைய உடம்பிற்குச் சுகஞ்செய்வனவாகிய மருந்தின் குணங்கள் பலவுள. புளியங்காயைத்தின்பது பித்தத்தைப் போக்குவதோடு வாதநோய்க்கும் மருந்துமாகும். புளியம்பழத்தின் புளியை உடம்பிலுண்டாகும் கட்டிகளுக்குப் பூசினால் அவைகள் விரைவில் பழுத்து உடைந்துபோகும். புளியிலிருந்து டார்டாரிக் ஆசிட் (tartaric acid) முதலிய பொருள்கள் செய்யப்படும். புளியம்பழத்தின் ஓடுகளைச் சுட்ட சாம்பலிலிருந்து மருந்திற்குரிய ஒருவகை உப்புச்செய்யப்படுகின்றது. புளியமிலையைத்துவைத்து உடம்பில் நோவுள்ள இடங்களுக்குப் பூச நோவுதணியும்; அதன் சாம்பலிலிருந்து செய்யப்படும் உப்பு உணவருமை நோய்க்கு நல்ல மருந்தாகும்.

புளியமிலையை வெந்நீரிலிட்டு நன்றாய் அவித்து நீல நிறமுள்ள ஆடைமேல் போட்டால் அவ்வாடை செந்நிறமாய் விடும். தக்கிண நாட்டுத்தட்டார் புளியைக் கொண்டு ஒருவகைப் புளிப்புச்செய்து வெள்ளிப்பாத்திரங்களை அழகுபெற மினுக்குவார்கள்.

புளியங்கொட்டையை ஒரு பயனுமில்லாததென்று பலரெறிந்து விடுகிறார்கள். அது பயன்படும் விதத்தை அவர்கள் அறியார்கள். பஞ்சகாலத்தில் வறிய சனங்கள் புளியங்கொட்டையைத் தின்பார்கள். அவர்கள் அதை முதலில் அரைமணி நேரம் நீரில் ஊறவைத்துப் பின்பு அவித்துச் சாப்பிடுவார்கள். சிலர்

புளியங்கொட்டையை முதலில் வறுத்துப் பின்னர் அவிப்பார்கள். புளியங்கொட்டையை அவித்து அதன் மேல்தோலை உரித்துவிட்டால், உள்ளிருக்கும் பருப்புத் தின்ன நல்ல ருசியுள்ளதாயிருக்கும். புளியம்பருப்பைச் சிலர் வெயிலில் காயவைத்து அல்லது வறுத்துப் பின்பு மாவாக அரைப்பார்கள். இந்த மாவிலிருந்து ரொட்டியும் பலகாரமும் செய்யலாம்.

புளியங்கொட்டையைத் தின்றதனால் சிலவிடங்களில் நோயுண்டானதாகச் சொல்லப்படுகின்றது. புளியங்கொட்டையைத் தின்றோர் சிலர்க்கு மலம்போகாது வயிற்றுவலி உண்டானதுமுண்டு. இவற்றிற்குக் காரணம் புளியங்கொட்டையை மேல்தோலை நீக்காது தின்றமையேயாம். புளியங்கொட்டையினுள்ளிருக்கும் வெண்ணிறமுள்ள பருப்புத் தேகவளர்ச்சிக் கேற்றதென்று பரீக்ஷித்துத் தெளியப்பட்டிருக்கின்றது. ஆயுர்வேதமுடையார் புளியங்கொட்டையைப் பொடிசெய்து வாதநோய்க்கு மருந்தாகப் பிரயோகிப்பார்கள்; யூனானிவைத்தியர் புளியங்கொட்டைத் தூளை அழுக்குத் தேமலுக்கு மருந்தாகப் பாவிப்பார்கள். வையிற்று என்னும் இங்கிலீஷ் வைத்தியர் (Dr. White) புளியங்கொட்டை மாவைப் புற்கை செய்து கட்டிகளுக்கு வைத்துக் கட்டலாமென்று சொல்லுவர்!

புளியங்கொட்டையை இடித்து அவித்து ஒருவகைக் கஞ்சி காய்ச்சுவார்கள். அந்தக் கஞ்சியைப் பெரும்பாலும் பட்டு நெய்வோர்கள் பட்டுநூலுக்கிடுவார்கள். புத்தகம் கட்டுவோரும் குதிரையுடுப்புத் தைப்போருங்கூட அந்தக் கஞ்சியை உபயோகிப்பார்கள். புளியங்கொட்டைப்பசை உடைந்த மரத்துண்டுகளைப் பொருத்த உபயோகமாகும். ஐம்பது வருஷத்துக்குமுன் எழுதிய ஒருவிவசாய நூலில் புளியங்கொட்டையிலிருந்து ஓர் எண்ணெய் எடுத்ததாகச் சொல்லியிருக்கின்றது. எண்ணெயெடுத்தற்குச் செய்யும் முயற்சிக்கீத்தக்க அளவு எண்ணெய் புளியங்கொட்டையில் இல்லாமையால் இந்தத்தொழில் கைவிடப்பட்டதுபோலும். எவ்விடத்திலாவது புளியமெண்ணெய் செய்து விற்பதாய் இப்போது கேள்வி இல்லை.

ஆயினும் புளியங்கொட்டையைக் கொண்டு ஒருவர் ஒரு விருத்தி எளிதில் செய்து கொள்ளலாம். அறியாமையால் நாம் நமது காலடியிற் கிடக்கும் பொருளை வீணாய் எறிந்து விடுகிறோம். புளியங்கொட்டையைக் கிராமங்களில் எளிதாகச் சேகரிக்கலாம்; அதைப்பின்பு மின்சாரத்தினாற்றலால் ஓடும் எந்திரத்திலிட்டு மாவாக அரைக்கலாம். புளியங்கொட்டையைக் கொண்டு ஒரு விருத்திசெய்து கொள்வதற்குக் கொஞ்சமுதல்போதும். இதைப் படிப்பவர்கள் யாராவது இவ்வகை ஒரு விருத்தி செய்துகொள்ளுவார்களாக.

[இது இண்டியன் எக்கானமிஸ்ற்று (Indian Economist) என்னும் பத்திரிகையில் கண்டது.]

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு.

பார்வதியின் பாதாங்குஷ்டந்தொடங்கி வருணனை

33. கொஞ்சம் மேலெடுப்பான நகங்களமைந்தவைகளாய், பூமியில் கால்வைக்கப்படும்பொழுதெல்லாம் சிவப்பு நிறத்தை வெளியில் கக்குகின்றவைகள்போல் தோன்றுகின்றவைகளாய், விளங்கிய பார்வதியின் பாதங்கள் பூமியில் சஞ்சரித்தபொழுதெல்லாம் வரம்பைவிட்டுப் பூமியின்மேல்வந்து நடமாடும் தாமரைமலர்களை ஒத்திருந்தன.

34. அவள் அழகாய் நடந்த நடையை பார்த்தபொழுதெல்லாம் அவள் கால் சதங்கை ஒலிக்கும் ஒலியைக் கற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக அவளுக்குவேறு ஒரு வித்தையைக் கற்றுக்கொடுத்த ராஜஅன்னங்களால் அந்நடை பயிற்சிசெய்து வைக்கப்பட்டாளோ என்று சந்தேகிக்க வேண்டியதாயிருந்தது. *

35. அவளுடைய இரண்டு முழங்கால்களும் வட்டமாய்ப்பரந்து அழகாய் அதிக நீளமில்லாமலும் வர்த்துலமாய் அமைக்கப்பட்டிருந்ததைப் பார்க்கும்பொழுது அவ்வுருவை அமைக்கப்பிரமதேவன் சேகரித்த எல்லா அழகுகளையும் அம்முழங்கால்களிலேயே செலவிட்டுவிட்டபடியால் மற்றை அவயவங்களை அமைக்க வேறு அழகுகளைத்தேட அவன் சிரமப்பட்டான் என்று எண்ணவேண்டியிருந்தது.

36. உலகத்தில் தொடைக்கு உபமானமாய் யானைத் துதிக்கையையும் வாழைமரத்தையும் சொல்லுவது வழக்கம் என்றாலும் யானைத்துதிக்கைத் தோல்

---

* வித்தையால் வித்தை என்ற சாஸ்திரப்படி நமக்குத் தெரிந்த வித்தையை நாம் ஒருவனுக்குக் கற்றுக்கொடுத்து அதற்குப் பிரதியாக அவனுக்குத் தெரிந்த வித்தையை நாம் அவனிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் என்பது விதி. அன்னப்பறவைகள் பார்வதியினிடமிருந்து அவள் சதங்கை ஒலியைக் கற்றுக்கொண்டு அவளுக்கு தங்களுடைய நடை என்ற வித்தையைக் கற்றுக்கொடுத்தனபோலும். இந்தச் சுலோகத்தால் பார்வதியின் நடை, சதங்கை ஒலி இரண்டும் வருணிக்கப்பட்டனபோலும்.

கரடுமுரடாயிருப்பதாலும் வாழை ஒரே சீதளமாயிருப்பதாலும் உமையின் தொடைக்கு அவையிரண்டும் உபமானமாகா.

37. வேறு ஒரு மடந்தையாலும் ஒருபொழுதும் மனத்தால்கூடக் கருதமுடியாத ஈசனுடைய மடியில் பார்வதியின் நிதம்பம் ஏற்றிவைத்துக்கொள்ளப்பட்ட தென்பதினாலேயே அதன் அழகை நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாமன்றோ!

38. அப்பார்வதியின் அழகான உந்தியில் புகுந்த அவளுடைய உரோமாவலி அவள் இக்கு முடிப்பைத் தாண்டி அவள் ஒட்டியாணத்தில் நடு நாயகமாய் விளங்கிய நீலக்கல்லின் ஒளிபோலும் சோபிக்கலாயிற்று.

39. யாகமேடைபோல் (மார்பு அகன்ற இடை சிறுத்து) விளங்கிய தனது வயிற்றில் பார்வதி அழகான மூன்று மடிப்பு விழப்பெற்றாள். அவைகள் காமன் நடந்து போகும்பொருட்டு யௌவனன் என்றகொத்தனால் கட்டப்பட்ட படிகள் போலும் காணப்பட்டன.

40. கருங்காம்பு பெற்று ஒன்றுடன் மற்றொன்று உரைந்துக்கொண்டுவளர்ந்த பார்வதியின் வெளுமையான மார்புகள் "இழையிடைபுகாத என்ற வண்ணம்" தங்கள் இடைவெளியில் தாமரைத்தண்டின் நூல்கூட புக இடமில்லாமல் அவ்வளவு நெருக்கமாய் விளங்கின.

41. அவளுடைய கைகள் சிரீஷ மலரைக்காட்டிலும் அதிகமிருதுவானவைகள் என்று எனக்குத் தோன்றுகின்றது. ஏனெனில் முதலில் தோற்ற மன்மதன் அவைகளையே சிவபெருமானுடைய கழுத்துக்குப் பாசங்களாய்ச் செய்தான் அன்றோ!

42. பார்வதியின் கழுத்தும் அவள் அக்கழுத்தில் அணிந்திருந்த உருண்டைமுத்தால் அமைக்கப்பட்ட மாலையும் ஒன்றையொன்று பரஸ்பரம் அழகுசெய்யும் மகிமை உண்டானபடியால் எதை எது சிறப்பாகக்காட்டியது என்ற பெருமை அதிகமாகத் தோன்றாமல் ஒன்றை மற்றொன்று சாதாரணமாய் அலங்கரித்ததாகக் காணப்பட்டது.

43. எப்பொழுதும் சஞ்சலித்துக்கொண்டேயிருக்கும் லட்சுமீதேவி சந்திரனிடமிருக்கும் பொழுதெல்லாம் தாமரைமலரின் சுகத்தை அனுபவிக்க முடியாதவளாகவும் தாமரை மலரிடமிருக்கும் பொழுதெல்லா சந்திரனுடைய சுகத்தை அடைய முடியாதவளாகவும் தவித்தாள். † ஆனால் உமையின் முகத்தை அவ்விலட்சுமி நாடிவந்தடைந்ததும் சந்திரன், தாமரை இவ்விரண்டினுடைய சுகத்தையும் ஒருங்கே அனுபவித்தாள்.

44. மாவிளந்தளிரின்மேல் வெண்மலரைவைத்துப் பார்த்தாலும் அல்லது பவளத்தின்மேல் நல்முத்தைவைத்துப் பார்த்தாலும் அக்காட்சி பார்வதி சிவந்த தனது உதட்டில் காந்தி பரவச்சிரிக்கும் புன்சிரிப்புக்கு ஒருவாறு ஒத்திருக்கும்.

45. வெகு மதுரமாய்ப் பேசும் அப்பார்வதி அமுதம்பொழியும் வண்ணம் பேசுங்கால், கோகிலத்தின் குரலுங்கூட தந்திகள் தப்பிதமாய் இயைக்கப் பட்டு வாசிக்கப்படும் வீணைபோல் நமது காதுகளுக்கு விகாரமாய்க்கேட்கும்.

46. அதிகக்காற்று வீசுமிடத்திலிருக்கும் கருங்குவளைமலரை ஒத்ததாக விளங்கிய அப்பார்வதியின் அழகான பார்வையானது அம்மாதால் மான் பேடுகளிடமிருந்து கற்றுக்கொள்ளப்பட்டதோ அல்லது அம்மான்பேடுகளால் அம்மாதினிடமிருந்து கற்றுக்கொள்ளப்பட்டதோ என்று சந்தேகிக்க வேண்டியதாக விருந்தது.

47. எழுதுகோலைக்கொண்டு மையால் எழுதப் பட்டவைகள்போல் விளங்கிய அப்பார்வதியின் விசாலமான புருவங்கள் எவ்வாறு சோபித்தனவென்றால் வெகு உல்லாஸத்துடன் விளங்கிய அவைகளைப் பார்த்தபிறகு மன்மதன் தன்னுடைய வில்லின் அழகே அழகு என்று அடைந்திருந்த கர்வத்தை விட்டான்.

48. கவரிமான்களுக்கு மனத்தில் சிறிதும் வெட்கமென்பது இருக்கும் என்கிற பட்சத்தில்

---

†. சந்திரன் இரவிலும் தாமரை பகலிலும் சோபிக்கின்றனவைகள். இரண்டையும்ஒரேகாலத்தில்இலட்சுமி அனுபவிக்காதகாரணம் இதுதான். பார்வதியின் முகம் தாமரைபோலும் சந்திரன்போலும் விளங்கிற்று என்றபடி.

* கவரிமான்களுக்குத் தங்கள் வால்களின்மேல் அதிக அன்பு என்றும் அவ்வாலினின்று ஒரு மயிர் உதிர்ந்தால் அவைகள் தங்கள் பிராணனை விட்டுவிடும் என்றும் அதை அறிந்தே கவரிமான்களைப் பிடிக்கச்செல்லும் வேடர்கள் அவைகளைத் தாங்கள் கொல்லாமல் முள்வேலி ஒன்று காட்டில் கட்டி அவ்வேலி வழியாய்க் கவரிமான்களை துரத்துகின்றார்கள் என்றும் அவ்வண்ணம் ஓட்டப்படும்பொழுது அம்மான்களின் வால்கள் முள்ளில் பட்டதும் மயிர் கலைந்த காரணத்தால் அவைகள் தங்கள் உயிரை மாய்க்கின்றன என்றும் சொல்லுகின்றார்கள்.

அவைகள் பார்வதியின் கூந்தலைப் பார்த்த பிறகு தாங்கள் தங்கள் வால்களின்மேல் வைத்திருக்கும் அன்பைக்குறைத்துவிடும்.

49. ஒப்பிடவேண்டிய எல்லாவஸ்துக்களையும் ஒருங்குசேர்த்து அவ்வவைகளுக்கேற்ற இடங்களில் அவ்வவ்வஸ்துக்களை வைத்து வெகுசிரமத்தால் பிரமனால் உண்டாக்கப்பட்டவள் போலவும், எல்லாவித அழகையும் ஒரேபடத்தில் பார்க்க ஆசைகொண்ட அப்பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டவள்போலவும் பார்வதி விளங்கினாள்.

50. (நாரதர் சொன்ன ஸந்தோஷ ஸமாசாரம்):— ஏதோ தன்மனப்போக்குப்படி சஞ்சரித்துக்கொண்டிருந்த நாரதர் ஒரு சமயத்தில் இமவானுக்கருகாமையில் பார்வதி நிற்கக்கண்டு அவள் சிவபெருமானுடைய பாதிசரீரத்தை அன்பால் கொள்ளைகொள்ளும் அவரது ஒரே மனைவியாய்ப் பின்னால் ஆகப்போகின்றாள் என்பதை அம்மலை மன்னவனிடம் சொல்லிப்போனார்.

51. (இமவான் தன் பெண்ணுக்கு வரந்தேடாமலிருந்தது).—இமவானும் பார்வதிக்கு மணத்துக்குத் தக்கவயது வந்திருந்தபோதிலும் நாரதர் சொன்ன சொல்லைக் கேட்டபிறகு வேறொருவரையும் தேட மனமில்லாதவராயிருந்தார். மந்திரமோதி ஓமஞ்செய்யப்பட்ட அவிஸை ஒப்புக்கொள்ள அக்கினியாலல்லாது மற்ற ஒளியாதல் முடியுமா ?

52. ஈசன் தன்னிடம் வந்து பெண்ணைக்கொடு என்று யாசிக்காதவரையில் தான் அவரிடம்சென்று என் பெண்ணை வாங்கிக்கொள் என்று சொல்ல மலைகள்மன்னவனுக்கு மனம் வரவில்லை ; ஏனெனில் நல்லோர்கள் தாங்களேபோய்க் கேட்டால் எங்கு காரியமே நிறைவேறாமற் போய்விடுமோ என்ற பயத்தால் தங்களுக்கிஷ்டமான காரியங்களிலும் உதாஸீனர்களாயிருக்கின்றார்கள் அன்றோ?

உழவுநூல்

AGRICULTURE

(48-ம் பக்கத்தொடர்ச்சி)

1837௵ வரையிலுள்ள வியவசாயக் கருவிகள்

சில இடங்களில் அதிகப்பளுவில்லாத உருளையோடுகூடிய கலப்பையை உபயோகித்து வந்தார்கள். ஆனால் நாட்டுப் புறங்களில் 'இரசல் நிலங்களிலும்' கூட (Light soils) பளுவான கலப்பையைக்கொண்டு உழுது வந்தார்கள். 1851-ம௵, முதல்முதல் நீராவியின் சக்தியினால் வியவசாயத்தை நடத்திப் பார்த்து 1857-ம௵ அதைக்கொண்டே நிலத்தை உழுதார்கள். ஜேம்ஸ் மிய்க்கிள் (James Meikle) என்கிற சாஸ்திரீய நிபுணர் 1710-ம௵ தானியத்தினின்று பலனைப்பற்றிப் பதரை நீக்கும் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். அவர் குமாரர் அண்டுரு (Andrew) என்பவர் வைக்கோலினின்று தானியத்தைப் பிரிக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடிக்கலானார். மனிதனுக்கு உணவையும், உடையையுந் தரத்தக்க பயிர்களையும், கால்நடைகளையும் விருத்திபண்ணுவதே வியவசாயத்தின் நோக்கமாகும்.

இயற்கையிலேயே நானாவிதக் காய்கறிகளும், மற்றுமுள்ள உயிர் ஜெந்துக்களும் செழித்து வளருகின்றன. மனிதன் தன் சாமர்த்தியத்தால் இயற்கையிலேயே கொடுக்கப் பட்டிருக்கும் சௌகரியங்களைத் தன் உபயோகத்துக்கும் தேவைக்கும் வேண்டியவாறு திருப்பி அமைத்துக்கொள்கின்றான். குடியானவன் தன் சாமர்த்தியத்தாலும் தொழிலாலும் சிறந்த மாதிரியான காய்கறிகளையும் கால்நடைகளையும் விருத்தி பண்ணி அவற்றை விற்றுப் பலனடைகின்றான். சூரிய வெளிச்சம் இல்லையெனின், ஒன்றுமே நடைபெறாது. அவனும் தன்னால் கூடியமட்டும் தனக்கு வேண்டியவாறு இயற்கையிலுள்ள சக்திகளை உபயோகப் படுத்திக் கொள்ளுகிறான். "எவனொருவன் முன் ஒரு

பயிர் வளர்ந்த இடத்தில் இரண்டு பயிர் வளரும்படி செய்கிறானோ அவனே தேசத்தாரது மேலான நன்றி பாராட்டற்குப் பாத்திரனாகிறான்.''

வியவசாயியினது நோக்கம் மேற்குறித்ததே. வியவசாய சாஸ்திரம் என்பது வியவசாயத்தை சாஸ்திர ரீதியாய் விருத்திபண்ணும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

சாஸ்திரீயமான கோட்பாடெல்லாம் பரிசோதனை அநுபோகங்களினின்றும் அநுமானிக்கப்பட்டவையே. 'தோட்பாடு' என்பது பலவிதமாய் இயற்கையால் அமைந்துள்ள உண்மைகளினின்றும் நிலைநிறுத்தப்படும் பொதுச் சட்டமேயாம். புத்திப் பிரகாசமுடையோராலும் விஷயங்களைச் சரிவர ஆராய்வோராலும் இயற்கையில் அமைந்துள்ள உண்மைகளைப் பொதுவாய்விளக்கும் சட்டமேயாகும். சித்தாந்தமும் அநுபோகமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. ஏனென்றால் 'அநுபோக'த்தினின்றுமே 'சித்தாந்தம்' கிடைத்தது. பரிசோதனைகள் செய்து நாம் புதிதாய் விஷயங்களைக் கற்றுக்கொள்ளுகிறோம். ஆகையால் அவற்றைப் பிழையற நடத்தினாற்றான் உண்மைகளைச் சரிவர அறியலாகும். நாம் பொதுவானமுடிவுக்குவந்து அதன் உண்மையை ஊகிக்குமுன் பரிசோதனைகள் பலவற்றைப் பலவிதமாகச்செய்து பார்க்கவேண்டும். இவ்வாறு எவ்வளவுக்கெவ்வளவு சாக்கிரதையுடன் பரிசோதனைசெய்கிறோமோ அவ்வளவுக்கேற்றபடியே உண்மையின் நிச்சயமும் தெரியலாம். வியவசாயிகள் தாமே தம்மாலியன்றவரை அதிகப் பணம்செலவின்றி வியவசாயப் பரிசோதனைகள் செய்து பார்த்துக்கொள்ளலாம். ஆனால் பொதுவாய் பரிசோதனைகளைத்தக்கபடி செய்வது அவர்களுக்கு சாத்தியமில்லை. ஆகையால் ஏற்கனவே கண்டு தெளிந்த பரிசோதனைகளின் பிரயோசனத்தைத் தாமே அறிந்துகொள்ள முயலவேண்டும்.

இவைகளையெல்லாம் உத்தேசித்தே நம் காருண்ய கவரன்மெண்டார் இதற்குமுன் சைதாப்பேட்டையிலும் தற்காலம் கோயமுத்தூரிலும் வியவசாயக் கலாசாலையும் ஏனைய முக்கியவிடங்களில் வியவசாயச் சோதனைப் பண்ணைகளும் ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். ஆதலால் ஆங்காங்கு நடக்கும் சோதனையின் பிரயோசனத்தை நாம் தக்கவாறு ஊகித்து பார்த்துப் பின்பற்ற முயலவேண்டும்.

பொதுவாய் மாதிரிப் பண்ணைகளின் முக்கிய நோக்கங்களாவன: —

(1) இந்தியாவில் பயிர்க்குப்பின் வேறொரு பயிரை அதாவது 'மாற்றுப்பயிர்முறை' (Rotation of crops) இடும் முறையைப் பரிசோதனைகளால் பரீக்ஷித்து நிச்சயித்துக்கொள்ளல்;

(2) கிழங்குப்பயிர் செய்வதா லுண்டாகும் நன்மையை யறிதல்;

(3) புதுமாதிரியான பயிர்களை விளைவித்தல்;

(4) புதிதான விதைகளைக்கொண்டு பயிர் செய்து பார்த்தல்;

(5) பலவிதமான பயிர் செய்வதில் ஒவ்வொன்றும் தனித்தனியே நீரினலடையும் பயனை உய்த்துணர்தல்;

(6) சுண்ணத்தையும், மற்ற உரங்களையும் உபயோகிப்பதால் கிடைக்கும் பலன்களை அறிதல்;

(7) கிராமாந்திரங்களில் புதுமையும் அதிக உபயோகமுமான வியவசாயக் கருவிகளை பழக்கத்துக்குக் கொணர்தல்;

(8) பொதுவாய்க் கால்நடைகளை விருத்திபண்ணி அவற்றிற்கு வேலைகொடுத்து, அதனின்றும் பிரயோசனத்தையடைதல்.

ஐரோப்பாவில் கிருஷி.—உழுது பயிரிடும் முறை, அதற்கு வேண்டிய கருவிகள் முதலியன—மிகவும் தேர்ச்சியடைந்து சாஸ்திரதிட்டத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் இந்தியாவில் கல்விகற்றவர்கள் வியவசாயத்தை இழி

வாய் எண்ணுகிறார்கள். அவர்கள் கற்றகல்வியை உபயோகப்படுத்தி வியவசாயத்தை விருத்தி பண்ண ஆவலற்றவர்களாயிருப்பதால் இத்தேசத்தில் பயிர்த்தொழில் மிகவும் கேவலமான நிலைமையி லிருக்கின்றது. உண்மையாகவே, ஜனங்கள் அத்தொழிலைப் பற்றிய சாதாரண முறைகளைக்கூடத் தெரிந்து கொள்ளவில்லை. பயிரிடுவதனால் நிலத்தின் செழுமை அடிக்கடி குறைந்துபோகும்; செழிப்புக்குறைவை திரும்பவும் நிலத்திற்கு ஊட்டும் முறையை நம் பரதகண்டத்தினோர் பெரும்பாலும் அநுஷ்டித்து வருவதில்லை; அதனாலே இந்தியா வரவரத் தரித்திரமடைந்தும் தேசத்திலுள்ளவீர்கள் தமக்கு போதுமான உணவை பெறுதற்கு இயலாமலும் இருக்கின்றது.

கீழேகாணும் அட்டவணையினால் தினே தினே பயிரிடும் நிலங்கள் நம்நாட்டில் அதிகரித்து வந்ததைக் காணலாம்.

1861	ஆ	1,96,000,000	ஏக்கரா
1871		2,40,000,000	ஷை
1881		2,53,000,000	ஷை
1891		2,87,000,000	ஷை
1901		3,00,000,009	ஷை

உணவைப் பெறும் முறைகள்

முற்காலத்தில் ஜனத்தொகை குறைவாயிருந்தது; சாகுபடிக்கு வேண்டியமட்டும் நிலம்கிடைத்தலும் அரிது; எனினும் ஜனங்கள் அவ்வளவு கஷ்டப்படவில்லை. ஆனால் தற்காலத்தில் ஏறக்குறைய நாட்டிலுள்ள நிலமுழுதும் சாகுபடிக்கு கொண்டுவரப் பட்டிருந்தும் ஜனத்தொகை முன்னிலும் பதின் மடங்காய்ப் பெருகியிருப்பதால் நவீன வியவசாய முறைகளை உபயோகித்து நிலத்தினின்றும் அதிகப் பலனைப்பெற வேண்டும்.

அக்பர் என்கிற மோகலாயச் சக்ரவர்த்தியினது அரசாட்சியில் மந்திரிஸ்தானம் வகித்திருந்த தோடர்மால் என்னும் நிபுணரால் தயாரிக்கப்பட்ட அயினி அக்பாரி (Ainy Akbari) என்னும் அரசிறை சம்பந்தமான கணக்கு புத்தகத்தில் இந்தியா முழுவதிலும் நிலத்தினின்று கிடைத்த பலனை ஒழுங்காகவும் திட்டமாகவும் குறித்திருக்கின்றது.

இந்தியாவில் ஒரு ஏக்ராவின் விளைபொருள்

	17-ம் நூற்றாண்டில்	19-ம் நூற்றாண்டில்
நெல் ...	1338 இராத்தல்	998 இராத்தல்
கோதுமை ...	1155 இராத்தல்	600 இராத்தல்
நயமானபருத்தி ...	223 இராத்தல்	52 இராத்தல்

அந்நிய தேசங்களில் தற்காலச் சராசரி விளைவு

நெல் 2500 இராத்தல். ஐரோப்பாவில் ஒரு ஏக்ராவுக்கு சராசரி கோதுமை விளைச்சல் 1500 இராத்தல். இங்கிலாந்தில் 30 புஷல் அல்லது 1800 இராத்தல். அமெரிக்காவில் நயமான பருத்தி ஒரு ஏக்ராவில் சராசரி 200 இராத்தல்; எகிப்து தேசத்தில் 300 முதல்400 இராத்தல் வரை பருத்தி விளைவாகிறது.

இந்தியாவில் வியவசாயம் முக்கியமாயிருப்பதேன்:—நாட்டுப் புறத்திலுள்ளவர்களில் 100-க்கு 90-பேரும் தேசஜனத்தொகையால் 100-க்கு 80-பேரும் தம் ஜீவனோபாயத்துக்கு நிலத்தையே சார்பாகக் கொண்டிருக்கிறார்கள். க்ருக் (Crooke) என்பவர் இத்தேசத்தாரையும் வியவசாயத்தையும் குறித்துப் பின் வருமாறு சொல்லுகிறார்:—

"வியவசாயிகளை மற்றெந்த தேசத்திலாவது, தேச சரித்திரங்களிலாவது கண்டும் கேட்டுமிருப்பதைவிட அதிகம் இத்தேசத்திலேதான் அவர்கள் அதிக பரிதாப நிலையிலிருப்பதைப் பார்க்கிறோம். தொன்றுதொட்டு வந்த பழக்கத்தைப் பின்பற்றித் தடுமாறுவதை இவ்விடத்திலேயே காண்கிறோம். இவர்கள் பழைய முறைகளையே கைக்கொண்டு பொறுமையுடன் வருந்தி உழைத்தும் வருவதை நோக்க பரிதாபமாயிருக்கிறது. பெரும்பாலர் அன்றன்று காய்ச்சிக் குடிக்கிற நிலைமையிலிருந்தபோதிலும் கொஞ்சமேனும் வருங்காலத்துக்கு மீத்துவைக்காததால் சந்ததி விருத்தி மேன்மேலும் ஆக முன்னிலும் அதிக கஷ்டம் அடையவேண்டி வருகிறது."

வியவசாயத்தின் பற்பல பகுப்புகள்

வியவசாயமாவது நிலத்தைப் பண்படுத்தி உழுவதும் அந்தந்த இடத்துக்குத் தகுந்த தானியங்கள், நார் வகை, எண்ணெய் வகை, சாயப்பயிர், சர்க்கரைப்பயிர் முதலியவற்றை

விளைவிப்பதும், கால்நடைப்பிராணிகளை விருத்திபண்ணி மேன்மைப் படுத்துவதும், கறவை ஆடுமாடு முதலியவைகளினின்றும் கறந்தபாலை பலவிதமாக உபயோகிப்பதும், கோழி வாத்து முதலானவற்றை வளர்ப்பதும், தேனீக்களை பலுகப்பண்ணி அதனின்றும் விஷயங்களை அறிந்துகொள்வதும் (Sericulture), மீன்களைத் தண்ணீரில் விட்டு அதின் உபயோகத்தை யறிவதும், பட்டுப்பூச்சி வளர்ப்பதும், மரஞ்செடி புஷ்பங்களைப் பயிரிடுவதும், ஆகிய இவைகளே பயிர்த்தொழிலின் பற்பல பகுப்புகளாம்; இன்னும் இவ்விஷயமாய்ச் சொல்வதற்கு எத்தனை யோவித அமிசங்கள் இருக்கின்றன, விரிக்கிற் பெருகும்.

அந்தந்த இடத்துக்கு ஏற்றபடி வெவ்வேறு விதமான பயிர் செய்வதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய குறிப்புகளாவன:—

(1) தேசமிருக்குமிடம்;

(2) சமுத்திர மட்டத்துக்குமேல் எவ்வளவு உயரத்திலிருக்கிறது என்பது;

(3) நிலத்தின் பாங்கு (தன்மை);

(4) சீதோஷ்ண வித்தியாசங்கள்;

(5) அவ்வவ்விடத்தின் தேவைகள்;

(6) வியவசாயம் நடத்துவதற்கு மூலதனம்;

(7) பாசனமுறை;

(8) ஜனங்களின் இயற்கை; இன்னும் இவை போன்றவைகள்.

நாம் வசிக்கும் சென்னை இராஜதானி 23 ஜில்லாக்களாகப் பிரிக்கப் பட்டிருப்பதில் 5-சுதேச இராஜ்ஜியங்களும் இருக்கின்றன.— திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, பல்லாரி ஜில்லாவிலுள்ள சாந்தூர், கர்நூலிலுள்ள பங்கனப்பள்ளி ஆகிய. இராஜதானி மொத்தம் 1,50,798 சதுரமைல் கொண்டது. 9,609 சதுரமைல் சுதேச ராஜ்ஜியமாகும். மீதம் 1,41,189 சதுரமைலில் 19,167 சதுரமைல் வடசர்க்காருக்குள்பட்ட ஏஜெண்டு துரைத்தன ஆளுகையைச் (Agency Tracts) சேர்ந்தது. 29,624 சதுரமைல் ஜமீந்தாரிகளைச் சேர்ந்ததாகும்.

By a Specialist.

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

அங்கம் I.

களம் 1. மதுரை நகர், தெரு வீதி.

(விஜயராகவ உடையாரும் சுப்பராயனும் வருதல்)

விஜயராகவ:— சுப்பராயா! இன்றைக்குத்தான் யான் உடம்பெடுத்த பயன் பெற்றவனானேன்; முத்தமிழ்ச்சங்கத் தெய்வப்பாவலர் வீற்றிருந்த பாண்டிநாட்டைக் காணப்பெற்ற பாக்கியத்தை என்னென்றுரைப்பேன்!

* "முருகன் சங்கத் திருப்பவனம் முக்கட்கடவுணிறப்பவன்வா
னரசன் புயலை விலங்கிட்டோ னன்னும் புனலூமியலறியும்
புரமு மதூர மான புரம் புல்வாய் புலியின் முலையுண்ணும்
நரியும் பரியா நதியிதழி மணக்குங் கன்னி நன்னாடு."

*"தாரணி மவுலிக் கொற்றத் தசரதன் மகனார் வந்து
கூறுகி ரெண்கு முன்னக் குரக்கின வெள்ளங் கொண்டு
வாரிகீள் குலைப்ப டுத்தி வலியவா ளரக்கர் காய்ந்து
காரண வானை யேத்தி யரும்பழி கழுவு நாடு."

என்று சான்றோர்களால் புகழ்ந்து போற்றப்பட்ட நாட்டில் பண்டை, நான்மறைக்குமெட்டாப் பராபரன் மனிதர்போலத் திருவிளையாடல் எட்டெட்டும் செய்திட்ட மதுரை நகர்க்கு இணையான வேறொரு நகருமுண்டோ? இப்புண்ணிய நகரைப் பார்க்கவேண்டுமென்று வெகுநாளாக என்னுள்ளத்திருந்த விருப்பம் இன்றுதான் நிறைவேறிற்று. எனது பிதாவின் கிருபையும் ஆசிர்வாதமும், உனது உயிர்த்துணையும் எனக்கிருக்கையில், நான் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை, சான்றோர் நிரம்பிய தஞ்சயம் பதியில் பெரு நிதியம் வைத்தபிரான் மரபில் தோன்றிய நல்லராபக உடையாரின் மகனை வதித்த நான், உறையூரில் கற்றகல்வியை இவ்விடத்தில் பூர்த்தி செய்வது பொருத்தமுள்ளதாகும். நீர் நசை

* திருவாலவாயுடையார் திருவிளையாடல்; நாட்டுச் சிறப்பு.

கொண்டவன், அற்பநீருள்ள குண்டத்தை நீத்து, நீர் நிரம்பிய தடாகத்தைத் தேடிவருவதுபோல, நானும் சமயக் கணக்கர் திறங்கேட்கவே இங்கு வந்திருக்கிறேன். இதில் உனது அபிப்பிராயம் என்ன?

சுப்பராயன்:—அய்யனே! என் கருத்தும் அதுதான்; தத்துவார்த்தத்தைக் கிரகிக்கவேண்டுமென்று தங்களுக்குப் பூர்ண பிரீதியுண்டென்பதைக் கேட்டுஅளவில்லாத ஆநந்தமடைகிறேன். ஆனால், கேவலம் வேதாந்தியாகவிருந்து லோகாநுபவமில்லாதிருப்பது மாத்திரம் நன்றன்று என்று தோன்றுகிறது. லோகாநுபவமில்லாத மகரிஷி ரிஷ்யசிருங்கரை இரண்டு ஸ்திரீகள் ஏமாற்றி விட்டனரல்லவா? ஒழிந்தநேரங்களில் லோகாநுபவம் உண்டாகும்படியான மற்றை நூல்களையும் பார்க்கவேண்டும். இடையிடையே, ஸங்கீதம், காவியம், கணிதம், தர்க்கம், முதலியவைகளை அப்பியஸிக்கவேண்டும். இல்லாவிட்டால் "கற்றறி மூடன்" என்ற பெயர் வந்துவிடும்.

விஜயராகவ:—பேஷ்! உனது புத்திமதி வெகு உபயோகமானதென்பதற்குச் சந்தேகமில்லை; கூடியவரையில் அவைகளையும் அப்பியஸிப்போம். இந்நேரம் கேசவன் வந்துவிட்டால் நாம் காரியத்தைத் துவக்கலாம். முதலில் நமக்கு ஒரு தனி விடுதி யமர்த்தவேண்டியது அவசியம். நாம் இருக்கிறது தெரிந்தால் நண்பர்களில் பலர் நம்மைக் காணவருவார்கள்:--இரு இரு இதென்ன! யார் யாரோ வருகிறார்களே!

சுப்பரா:—ஏதோ வேடிக்கை போலவிருக்கிறது. தனியாக நின்றுகொண்டு பார்ப்போம்.

(ரகுநாததேவர், கௌதமிதேவி, வநிதேசுவரி, பொன்னம்பலதேவர், பிரதாபருத்திரதேவர், வருதல்.)

ரகுநாத:—நண்பர்காள்! நான்தான் முன்னமேயே சொல்லிவிட்டேனே! அடிக்கடி கேட்பதில் என்ன பயன்? பெரிய பெண்ணுக்கு எங்கேயாவது வரன் நேர்ந்தால்தான் இளையபெண்ணின் கல்யாணத்தைப்பற்றி யோசிப்பேன் உங்களில்யாருக்காவது கௌதமியைக்கல்யாணம் பண்ணிக்கொள்ள இஷ்டமுண்டாகில், சொல்லுங்கள்.

பொன்னம்பல:— அதைவிடப் பிடாரியைக் கட்டிக்கொண்டு மாரடிக்கலாம். இந்த குணவதி யெனக்கு வேண்டாம்; பிரதாபருத்திரர் இருக்கிறார்; அவருக்கு விருப்பமிருக்கும்.

கௌதமி:—(ரகுநாததேவரைநோக்கி) அப்பா, இந்த இரண்டு குரங்குகளுக்கிடையில் என்னைத் தள்ளி விடப் பார்க்கிறீரோ?

பிரதாப:—நாங்கள் குரங்காகவிருந்தால் நீ கருங்குரங்காக விருக்கிறாய். உன்னைக் கல்யாணஞ் செய்து கொண்டால் போதும், வேறுவினை வேண்டிய தில்லை; உடனே ஏதாவது "காலி" யாகவிருக்கும் ஸந்நியாஸ மடத்திற்கு "மனு" செய்து கொள்ளவேண்டியதுதான்.

கௌதமி.—அப்படியெல்லாம் சந்தேகப்படவேண்டாம்; நான் உங்கள் ஜோலிக்கே வருகிறதில்லை; ஒருவேளை விதியிருந்து வந்துவிட்டால், இருக்கவே இருக்கிறது; என்னுடைய ஸாமர்த்தியம் எங்கே போய்விட்டது? எட்டேகால் மரியாதையுடனேயே நடத்துகிறேன்.

பிரதாப.—கிருஷ்ண! கிருஷ்ண! போதும்! போதும்! இப்படிப்பட்ட உத்தமி வேண்டவே வேண்டாம்.

பொன்னம்.—மஹாராஜியாய் உனக்கு இஷ்டமானவரைத் தேடியடை. நீ இல்லாத இடம் தேவலோகமாகவிருக்கும்.

சுப்பராயன்.—(மெதுவாய்) ஐடா! நல்லவேடிக்கை இது. இந்தப்பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும், அல்லது, பேய் பிடித்திருக்க வேண்டும்; இல்லாதபோனால் இப்படிப் பேசுவாளா?

விஜயராகவ.—ஆனால் பக்கத்தில் நிற்கும் மற்றொருத்தியைப் பார்த்தால், உத்தம ஸ்திரீகளுக்குள்ள நற்குணங்கள் எல்லாம் ஒருங்கே காணப்படுகின்றனபோல் தோன்றுகிறது. நீ பேசாதிரு.

சுப்பரா:---ஐயா! நான் பேசவில்லை; நன்றாகப் பாருங்கள்.

ரகுநாத:—அம்மா! வநிதை! நீ உள்ளேபோ; விசனப்படாதே. சீக்கிரத்தில் நன்மையுண்டாகும்.

கௌதமி:—அவளுக்கென்ன கேடு வந்திருக்கிறது; விசனம்! என்ன விசனம்?

வநிதேசுவ.:—அக்கா! நான் வருந்துவது உனக்குச் சந்தோஷமாக விருக்கிறதா?—ஐயா, தாங்கள் சொல்லியபடியே கேட்கிறேன். எனது புஸ்தகங்களும் விளையாட்டுப்பொருள்களும் எனக்குத் துணையாக விருக்கின்றன.

விஜயராகவ:—சுப்பராயா, கேட்டாயா? எவ்வளவு இனிய குரலுடன் பேசுகிறள், பார்;

பிரதாப:—ஐயா! ரகுநாததேவர்வாள்! தாங்கள் செய்வது அதிசயிக்கக் கூடியதாக விருக்கிறது. எங்களது நல்லெண்ணம் வசிதேசுவரிக்குத் துக்கத்தை புண்டு பண்ணுவதை நினைக்க, எனக்குத் துக்கமாக விருக்கிறது.

பொன்னம்ப:—இந்த ராக்ஷஸிக்காகவா, வசிதேசுவரியைச் சிறையிலடைக்கிறீர்? நீங்கள் செய்வது கொஞ்சங்கூட நன்றாகவில்லை.

ரகுநாத:—நீங்கள் சொல்வதெல்லாம் ஸரிதான்; ஆயினும் நான்தான் முன்னமேயே தீர்மானித்து விட்டதாகச் சொல்லி விட்டேனே! அடிக்கடி கேட்காதேயுங்கள்—வசிதை! நீ உள்ளேபோ (வசிதேசுவரி போதல்). அவளுக்குப் பாட்டிலும் வாத்தியங்களிலும், காவியங்களிலும், அதிகப்பிரீதி. அவைகளில் பாண்டித்தியம் பெற்ற உபாத்தியாயர் ஒருவரை வீட்டிலேயே வைத்துக்கொண்டு பாடஞ் சொல்லிக்கொடுக்கச் செய்கிறேன். உங்களில் யாருக்காவது தெரிந்த உபாத்தியாயர் இருந்தால் அழைத்து வாருங்கள்; சம்பளம் ஜாஸ்தியாகக் கொடுக்கிறேன்; குழந்தைகள் விருத்திக்குவரும் விஷயத்தில் செலவைப்பார்க்கக் கூடாது. ஸரி, நீங்கள்போய்வாருங்கள்.—கௌதமி! நீ இங்கேயே இரு; குழந்தை வசிதையிடம் சில வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது (போதல்.)

கௌதமி:—நானும் போகிறேனே. போகக் கூடாதா? எனக்குப் பள்ளிக்கூடம் போக வேண்டுமோக்கும்? வேண்டியதும் வேண்டாததும் இன்னதென்று தெரியாத சிறு குழந்தையோ நான்? நிரம்பவும் நன்றாகவிருக்கிறது! (போதல்.)

பொன்னம்பல:—போ, சனீசுவரன் கோவிலுக்கு, மூதேவிமுண்டை! உன்னை எந்த மடையன் கட்டிக் கொள்ளப் போகிறனே? பிரதாபருத்திரரே! நீர் போய் வாரும். வசிதேசுவரியிடம் எனக்குள்ள ஆசைக்காகவாவது, ஒரு கெட்டிக்கார உபாத்தியாயரை அழைத்துக்கொண்டு போய் அவள் தகப்பனுர்முன்பு விடவேண்டும்.

பிரதாப:—நானும் அப்படியே செய்யப் பார்க்கிறேன். உம்மிடம் ஒரே ஒருவார்த்தை பேச வேண்டியிருக்கிறது; நாம் இருவரும் வசிதேசுவரியைநேசிப்பதைப்பற்றி இதுவரையில் வாய்ச்சண்டை போட்டுக்கொள்ளவில்லை; என்றாலும் நாமிருவரும் சேர்ந்து ஒரு விஷயத்தை முடிக்க வேண்டும்.

பொன்னம்:—என்ன விஷயம்?

பிரதாப:—ஏன், எங்கேயாவது பார்த்து, அவள் அக்காளுக்கு ஒருவான் தேடவேண்டியதுதான்.

பொன்னம்:—உரனு? நாசமாய்ப்போயிற்று, ஓய்! அந்தக்கழுதையை யார் கட்டிக்கொள்வானென்கிறீர்? அவள் தகப்பன் மிகுந்த ஆஸ்திக்காரனுகவிருந்தாலுங்கூட, ஸர்வமுட்டாள்கூட அவளைக் கலியாணம் செய்துகொள்ளமாட்டானே! உமது யோசனை குருட்டு யோசனைதான்.

பிரதாப:—அவள் கடுமையாக வார்த்தை சொல்வதும் நடப்பதும் உமக்கும் எனக்கும் பொறுக்க முடியாதனவாயினும், எல்லா துர்க்குணங்கள் இருந்தாலும், அவைகளைப் பணித்தால் முடிக்கொடுத்தால் அவளைப் பெற்றுக்கொள்வதற்கு பாரேனும் ஒருவன் சித்தமாக விருப்பான்.

பொன்னம்:—அப்படி எவனுயினும் இருப்பானேன்று நான் நினைக்கவில்லை; ஆனல் தினந்தோறும் நாற்சந்தியில் காலைவேளையில் சவுக்கினுல் நூறடி அடிப்பதாக விருந்தால் மாத்திரம் நான் அவளுடைய சீதனத்தைப் பெற்றுக்கொள்வேன்.

பிரதாப:—நீ சொல்வது நிஜந்தான்; அழுகிய பூசணிக்காயை யார் விரும்புவார்? இருந்தாலும் அவளை எப்படியாவது ஸரிப்படுத்திவிட்டால் தான் நம்முடைய காரியம் கைகூடும். உமக்கு என்ன தோன்றுகிறது?

பொன்னம்:—ஸரி, பார்ப்போம்; இதுமுதல், அந்தப் பிடாரியைக் கட்டிக்கொள்பவன் யாவன் என்று பார்த்துத்திரிகிறேன்; அப்படியொருவன் அகப்பட்டானுனல், அவனுக்கு நூறுபவுன் இனமாகவும் கொடுப்பேன்; கலியாணம் பண்ணிக்கொண்டு வீட்டைவிட்டு அழைத்துக்கொண்டுபோய் விடட்டும்.

(பிரதாபருத்திரதேவரும் பொன்னம்பலதேவரும் போதல்.)

சுப்பராயன்:— ஐயா! இப்படி திடீரென்று காதல் உண்டாவது ஸாத்தியமா?

விஜயராக:—இது வரையிலும் ஸாத்தியமில்லையென்றுதான் நினைத்திருந்தேன். ஆனல் இப்போது என் ஸொந்த அநுபவத்தினுல் அஃது ஸாத்திய

மென்றுதான் நினைக்கிறேன். இதோ பார், நான் சும்மா பார்த்துக்கொண்டிருக்கையிலேயே என் மனம் மாறிவிட்டது. உயிர்த்துணையாயிருக்கிற உன்னிடம் உண்மையைச்சொன்னாலென்ன? நான் அந்தப்பெண்ணைப் பார்த்ததுமுதல் என் மனதில் ஒரு வழியாகவில்லை; அவளைப்பெற்றால்தான் உயிர் வாழ்வேன்; இந்த வேளையில் நீதான் மார்க்கந்தேடிக் காப்பாற்றவேண்டும்.

சுப்பரா:— இப்போது, உங்கள் மேல் குறை கூறுவதில் பயனில்லை, உங்களுக்குள்ள காதல் ஆழ்ந்ததாக இருந்தால்மாத்திரம் பின்னால் சுகமுண்டாகும். ஒருவேளை அந்தப்பெண்மணியை நன்றாய்க் கவனித்தீர்களோ இல்லையோ?

விஜயராக:—போடா, போ; அவள் முகத்தில் காணப்படும் சோபையின் அழகைப்போல நான் இதுவரையில் வேறொருவரிடத்தும் கண்டதேயில்லை. அவளைக் காமன் காண்பானாயின் படையிட்டு நடுங்குவான்; ஆடவர்கண்டால் அகறலுமுண்டோ? பேடியரன்றோ பெற்றியினின்றிடில்?

சுப்பரா:—இதைத்தானா தாங்கள் பார்த்தீர்கள்? பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அவள் அக்காள் கூச்சலிட்டுக் கர்ணகரேமாய்ப் பேசினதைக் கேட்கவில்லையா?

விஜயராக:—இவளும் பேசினதைக் கேட்டேன்; வெகு இன்பமாகவேயிருந்தது. இவளிடம் நான் கண்டவையெல்லாம் மனோரம்மியமாகவேயிருந்தன.

சுப்பரா:—ஐயா! கொஞ்சம் விழித்துக்கொண்டு யோசிக்கவேண்டும்; அவளுடைய அக்காள் ஒரு நீலியாகவிருக்கிறாள்; அவளை எங்கேயாவது தொலைத்த பிறகுதான் உமது காதலியின் கல்யாண யோசனை செய்யப்படும். இதற்காகவே, ஆடவர் அணுகாத கன்னியாமடம் போன்றதொரு விடுதியில் உமது காதலியை அவள் தகப்பனார் வைத்திருக்கிறார்.

விஜயராக:—அவர் வெகு பொல்லாதவர்போலும்! ஆனால், அவர் கெட்டிக்காரரான உபாத்தியாயரைக்கொண்டு தம் மகளுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்க வெண்ணுவதாகச் சொன்னதை நீ கவனிக்கவில்லையா?

சுப்பரா:—ஆமாம்; ஆமாம்; காரியம் வெகு எளிதில் கைகூடும் வழியொன்று கண்டுபிடித்துவிட்டேன்.

விஜயரா:—நானும் ஒருவழி யோசித்திருக்கிறேன்.

சுப்பரா:—ஐயா! நம்முடைய யோசனை இரண்டும் ஒரேமாதிரியாகத்தானிருக்கும் என்று தோன்றுகிறது.

விஜயரா:—உன் யோசனையை முதலில் சொல்லு.

சுப்பரா:—தாங்களே உபாத்தியாயராகவிருந்து அப்பெண்ணுக்குப் பாடஞ்சொல்லிக்கொடுக்கலாமென்று நினைக்கிறீர்கள், அதுதானே?

விஜயரா:—அதுதான்; அப்படிச் செய்யலாமா?

சுப்பரா:—அது முடியாதென்று தோன்றுகிறது. நல்லநாயக உடையாரின் மகனென்று சொல்லிக்கொண்டு, இங்கு படிப்பதும், நண்பர்களை வரவேற்பதும் செய்வது யாவர்?

விஜயரா:—இதற்கு வழிதெரியாதா? நம்மை இன்னாரென்று அறிந்தவர் இவ்வூரில் ஒருவருமில்லை; முகத்தைக்கண்டு அடையாளந் தெரிந்துகொள்ளக்கூடியவருமிங்கில்லை; நான் எஜமானனென்றும் நீ வேலைக்காரனென்றும் ஒருவருக்கும் தெரியாது; இப்பொழுது செய்யவேண்டியதென்னவெனில்:—நீ எஜமானனாகவிருந்து, எனக்காக எல்லாவேலைகளையும் செய்துகொண்டிரு; நான் வேறு யாதாயினும் ஒரு வேஷம் போட்டுக்கொண்டுவிடுகிறேன்; இந்தா, உடைகளை நீ தரித்துக்கொள், கேசவன் வந்தால் நீதான் எஜமானனென்று எண்ணி நடக்கவேண்டும்; அவன் வாயை மூடிக்கொண்டிருக்கும்வழி நான் செய்துவிடுகிறேன்.

(உடுப்புகளை மாற்றிக்கொள்ளல்.)

சுப்பரா:—ஐயா! எல்லாவிதத்திலும் தங்களுக்குத் துணை செய்யப்பட்டவனாகையால் இவ்விஷயத்திலும் தாங்கள் சொன்னபடியே கேட்கிறேன். நானே விஜயராகவ உடையாராக வேஷம் போட்டுக்கொள்ளுகிறேன்.

விஜயரா:—அப்படியேயிரு; நான் ஒரு வேலைக்காரன் வேஷம்பூண்டு என் மனத்தைக் கலக்கிய கண்மணியை அடையும் வழியைத் தேடுகிறேன்.—காமாட்டிப்பயல் இதோ வருகிறான்.

(சேசவன் வருதல்.)

எலே! எங்கடா போயிருந்தாய்?

சேசவன்—நான் எங்கேபோயிருந்தேனு? அது இருக்கட்டும்; நீங்கள் எங்கே யிருக்கிறீர்கள்? சுப்பாராயன் எஜமானர் உடையைத்திருடிக்கொண்டானு, அல்லது எஜமானர்தான் சுப்பாராயனின் உடையைத் திருடிக்கொண்டவரா, என்பது தெரியவில்லை, என்ன சங்கதி?

விஜயரா:—கழுதைப்பயலே! இப்போது தான் வேடிக்கை பண்ணுகிறதோ? நான் இந்த ஊருக்கு வந்ததும் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டேன்; அதற்காக என்னை ஊரார் தேடித்திரிகின்றனர்; எனது உயிரைக் காப்பாற்றுவதற்காக சுப்பாராயன் எனது உடைகளைத் தரித்துக்கொண்டு என் வேஷம்போட்டுக்கொண்டிருக்கிறான். நான் ஓடிப்போவதற்காக அவனுடையவேஷத்தைப் போட்டுக்கொண்டிருக்கிறேன்; என்னைப்போலப் பாவித்து, அவனிடம் அடங்கியிருக்க வேண்டும்; தெரிந்ததா?

சேசவன்:— தெரிந்தது, தெரிந்தது; அணுவளவும் கோணுமல் நடக்கிறேன், சாமி.

விஜயராக:— சுப்பராயன் என்றவார்த்தையே உன் வாயில் வரக்கூடாது; சுப்பராயன் விஜயராகவ உடையாராய் மாறிவிட்டான்.

சேசவன்:— அவனுக்கு நல்லது தான்; எனக்குக் கூட அவ்விதமாக மாற இஷ்டந்தான்.

சுப்பரா:— இன்னொருதடவை ஆகட்டுமே; உடையார் இப்போது ரகுநாததேவரின் இளைய குமாரியை அடையட்டும்;—அடே! நீ மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; நான் தனியாகவிருந்தால் சுப்பராயா என்று கூப்பிடு; கூட யாராவது இருந்தால் நான் உனது எஜமானர் விஜயராகவ உடையார் என்று நினைக்கவேண்டும். இதெல்லாம் எனக்காகச் செய்யவேண்டாம், உன் எஜமானருக்காகமாத்திரம் செய்.

விஜயரா:— சுப்பராயா! நாம் போவோம்; இன்னொரு விஷயம்: அந்தப் பெண்மணியைக் காதலித்த இருவரோடு நீயும் சேர்ந்துகொள்ளவேண்டும்; அதற்குத்தகுந்த காரணங்கள் இருக்கின்றன; பிறகு கூறுகிறேன்.

(போதல்)

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

தீவ்ரமோக்ஷாபேக்ஷை:—ஒரு சிஷ்யன் ஒரு குருவினிடத்திற்சென்று, 'எனக்கு மேலான நிலையை அடையவேண்டும் என்ற ஆவலிருக்கிறது, ஆகையால் அது வித்திக்கும்படி எனக்கு ஞானோபதேசம் செய்தருளவேண்டும்,' என்று வணங்கிச்சொன்னான். குரு ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்துவிட்டார். இச்சிஷ்யனோ பிரதிதினமும் வந்து குருவை முன்சொன்னபடி பிரார்த்தித்துக்கொண்டுவந்தான். சிஷ்யனைப்பார்க்கிலும் அக்குரு நன்றாகத்தெரிந்தவராகையால் பின்னும் மௌனமாக இருந்துவிட்டார். இச்சிஷ்யனோ பிரதிதினமும் வந்து இவரை மிகுந்த நயத்துடன் வேண்டிக்கொண்டு வந்தான். இப்படி இருக்கையில் மிக உஷ்ணமான ஒருநாள் குரு சிஷ்யனைநோக்கி, 'நதிக்குச்சென்று நீராடி வருவோம் வருகிறாயா?' என்றார். சிஷ்யன் நல்லது என்று குருவின் பின்சென்றான். இருவரும் ஸ்நானத்திற்காகத் தண்ணீரில் இறங்கினார்கள். உடனே குரு சிஷ்யனுடைய காலைப்பற்றி நன்றாக இழுத்துக்கொண்டு, அவனைத் தண்ணீரடியிலேயே கொஞ்சநேரம் வைத்திருந்தார். சிஷ்யன் சிறிதுநேரம் கஷ்டப்பட்டபிறகு அவனை வெளியேவிட்டார். இருவரும் கரை ஏறினபின்னர் குரு சிஷ்யனைப்பார்த்து, 'அப்பா! நீ தண்ணீரடியிலிருக்கும்பொழுது உனக்கு எது அவசியமாக வேண்டியிருந்தது?' என்று கேட்க, சிஷ்யன், 'கொஞ்ச வாயுதான் அவசியம்வேண்டி இருந்தது,' என்றான். உடனே குரு, 'எவ்வளவு ஆவலொடு அப்பொழுது வாயுவை விரும்பினாய் அப்பா! நீ அவ்வளவு ஆவலோடு மேலான நிலையை அடையவிரும்பினையானால் உனக்கு அது உடனே வித்திக்கும்,' என்றார். இதனால் ஒருவன் மனப்பூர்வமாகப் பாடுபட்டால் அவனுக்குஅஸாத்யமானகாரியம் ஒன்றும் இல்லை என்பதும், உண்மையாகப் பாடுபடுவது இத்தன்மையது என்பதும் தெரிய வருகிறது.

* *

பெரியோர் தரிசனவிசேஷம்.—ஒருகாலத்தில் நாரத முனிவருக்கு, பெரியோர்களது தரிசனத்தால் உண்டாகும் மேன்மையாது? என்ற சங்கை உண்டாக அதை கிருஷ்ண பரமாத்மாவைக்கண்டு தீர்த்துக் கொள்ளத் துவாரகை வந்து சேர்ந்தார். அப்

பொழுது பகவான் 'ஒரு ராஜக்கிரியினிடஞ்சென்று அந்தக் கேள்வியைக்கேட்டு தெளிவடையும்' என்று கட்டளையிட, நாரதர் அவ்வாறேசெய்தார். அவர் வார்த்தை அந்தக் கிரியின் காதில் விழுந்தவுடன் அது காலை உதைத்துக்கொண்டு இறந்தது. இதைக்கண்டு மிகவும் துக்கித்துப்பகவானிடம்வந்து நாரதர் நடந்தவைகளைச்சொல்ல, அதற்கு அவர், 'ஒரு கிளிப்பிள்ளையிடம் சென்று இக்கேள்வியைக்கேள்' என்று உத்தரவு செய்தார். முன் நடந்தது போல நாரதர் கேள்வியைக்கேட்டதும் கிளிப்பிள்ளை மறு மொழி ஒன்றும் சொல்லாது உடனே உயிர்விட்டது. முன்னிலும் அதிக துக்கத்தோடு பகவானிடம் நடந்தவைகளை விண்ணப்பம் செய்ததும், 'அதே கேள்வியை ஒரு மானிடம் சென்று கேள்' என்று அவர் சொன்னார். மானின் கதியும், கீரி கிளி முதலியவைகளது கதிபோலாக, 'பகவானது நோக்கம் எவ்வாறு இருக்குமோ? நாம் துக்கப்பட்டுப் பிரயோஜனம் இல்லை' என்று அறிந்துகொண்டு மறுபடியும் பகவானை அணுகித் தமது கேள்வியைக்கேட்டார். அப்பொழுதும் பகவான் நேரான மறுமொழி கூறாது, அவரை ஒரு கன்றினிடம் போகச்சொல்ல அந்த கன்றும் உடனே மாண்டுபோயிற்று. அவர் போகும் இடங்களில் எல்லாம் இவ்வாறு கொடிய மரணம் உண்டாவதைக்கண்டு மனம் பதறி, நாரதர் பகவானே தமக்கு கதி என்று வந்து சரணம் புகுந்தார். உடனே பகவான் புன்நகையுடன், 'ஒரு சக்கிரவர்த்தி அருகாமையில் இருக்கிறான். அவனுக்கு இப்பொழுதுதான் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அதனிடம் இந்தக்கேள்வியைக் கேட்டால் உமக்குத் தகுந்த பதில் கிடைக்கும்' என்று ஏவ, நாரதர் பகவத்வாக்கியத்தில் பூர்ண நம்பிக்கையுடன் மனங்கலங்காது அவ்வாறே செய்தார். அப்பொழுது அந்தக் குழந்தை நாரதரை நோக்கி, 'உத்தமரே! உமக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. ஆயினும் நானும் என்னால் கூடியமட்டும் உமது கேள்விக்கு விடைகொடுக்கிறேன். முன்னர் தாங்கள் முறையே பார்த்த கீரி, கிளி, மான், கன்று முதலியவைகள் யாவும் நானே. ஒவ்வொரு ஜன்மத்திலிருக்கும் பொழுதும் உம்மைப்போன்ற மஹானது தர்சன விசேஷத்தால் எனக்கு அடுத்த மேலான ஜன்மம் கிடைக்க இப்பொழுது மேலான மானிடஜன்மம் கிடைத்திருக்கிறது. இப்பொழுது எனக்கு உமது தர்சனம் கிடைத்துவிட்டது. இனிமேல் எனக்கு மாறுநிலையாகிய மோக்ஷம் கிடைக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம்' என்று சொல்ல நாரதர் மனமகிழ்ந்து நிஸ்ஸந்தேகராக லோகோபகாரத்திற்காக திரிலோக ஸஞ்சாரம் செய்யத்தொடங்கினர். இதனால் பெரியோர்களது தர்சனத்தால் நமக்கு மேன்மை உண்டாகி ஞானவைராக்யாதி நற்குணங்கள் அமைந்து முடிவில் மோக்ஷமே எளிதில் கிடைக்கும் என்பது விளங்கும்.

* * *

ஸ்வதர்ம அநுஷ்டானத்தின் சிறப்பு:—ஒருகாட்டில் ஓர் மரத்தடியில் ஹடயோகாதி அப்பியாசங்களை கௌசிகன் என்ற பிரம்மசாரி செய்துகொண்டு வந்தான். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் காலையில் அம்மரத்தின்மேலிருந்த ஒரு கொக்கு கௌசிகன் தலையில் எச்சமிட்டது. இதனால் அவனுக்கு அடங்காக்கோபம் உண்டாக அந்தக் கொக்கைக் கண் விழித்து அண்ணாந்து பார்த்தான். உடனே அது சாம்பலாய் விழுந்தது. இதைக் கண்டதும் கௌசிகப் பிரம்மசாரிக்கு முதலில் ஒரு உயிர்ப்பிராணியை அநியாயமாகக்கொன்றுவிட்டோமே என்ற துக்கம் வந்தபோதிலும், முடிவில் தனது தபஸ் இவ்வளவாவது பலித்ததே என்ற கர்வமே மேலிட்டது. மத்தியான்ன ஸமயம் வந்ததும் கௌசிகன் அடுத்த கிராமம் சென்று ஓர் வீட்டுவாசலில் 'பவதி பிக்ஷாம் தேஹி' (தாயே பிக்ஷையை யாசிக்கிறேன்) என்று சொல்லிக்கொண்டு நின்றான். அங்கு வெகு நாழிகை அவன் காத்திருக்கவேண்டிவந்தது. அதன் பின்பு அந்தவீட்டு எஜமானி அவனுக்கு பிக்ஷை கொண்டு வந்துபோட்டாள். அவளை இவன் வெகுகோபமாய்க் கண் விழித்துப்பார்த்தான். அதற்கு அவள் 'என் கணவனே எனக்குச்சிறந்த தெய்வம். அவர் பசியோடிருப்பதைக்கண்டு அவருக்கு வேண்டிய உபசாரங்களை செய்துவிட்டபின்பு உமக்கு பிக்ஷை கொண்டுவந்தேன். பிராம்மணர்களை நான் அவமதிப்பவள் அல்ல. என்னை மன்னிக்கவேண்டும்.' என்று எவ்வளவு சொல்லியும் பிரம்மசாரியின் கோபம் அடங்காதது கண்டு 'நான் கொக்கல்ல. என்னை இப்படி எரிப்பவர் போல் ஏன் நோக்குகிறீர்' என்று பரிஹாஸம் செய்தாள். அதன் பின்பு தான் தனது தர்மமாகிய கணவன் சிசுருஷையைத் தவறாது செய்ததால் தனக்கு கௌசிகன் காட்டில் செய்தது தெரிந்தது என்றும், கோபம் சண்டாளம் அதை ஸமயத்தில் அடக்காது விட்டுவிட்டால் அது கேடுவிளைக்கும் என்றும் இதைவிட மேலான விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமாகில் மிதிலாநகரத்திற்கு போய் அங்கு உள்ள கசாப்புக்காரனிடம்இருந்துதெரிந்துகொள்ள

லாம் என்றும் சொல்லி அந்த பதிவிருதை தனது வீட்டிற்குள் போய்விட்டாள். கௌசிகன் கர்வம் கொஞ்சம் அடங்கவும் கசாப்புக்காரனிடமிருந்தும் நாம் சிறந்ததைக் கிரஹிக்கலாம் என்று அவனுக்குத் தோன்ற, அவன் மிதிலாநகரம் சென்று தர்மவியாதன் என்ற கசாப்புக்காரன் கடையருகில் போய் நின்றான். உடனே அவன் இவனை உட்காரும்படி சொல்லி, 'நீர் ஒரு பதிவிருதா ஸ்திரீயினிடமிருந்து வருகிறீர். உமது எண்ணமும் எனக்குத் தெரியும். சற்றுப் பொறும், என்று சொல்லி தன் வேலையை முடித்துக்கொண்டு அவனைத் தனது வீட்டிற்கு அழைத்து சென்றான். அங்கு அநேக அரிய விஷயங்களை கௌசிகனுக்கு தர்மவியாதன் உபதேசித்தான். இந்த உபதேசத்திற்கு வியாதகீதை என்று பெயர். இதன் பின்பு கிழவராகிய தனது தாய் தந்தையரை கௌசிகனுக்குக்காட்டி அவர்களுக்குத் தவராது தொண்டு செய்வதாலும், தனது வேடத் தொழிலை நன்றாய்ப்பார்த்தலாலும் தனக்கு ஞான திருஷ்டி முதலிய அரியகுணங்கள் உண்டாயின என்று சொல்லிமுடித்தான். கௌசிகன் கர்வம் முழுவதும் அடங்கத் தபஸுக்குச்சென்றான். இதனால் ஒருவன் தர்மம் தாழ்ந்ததாயிருந்தாலும் அதனால் அவனுக்குத்தாழ்வு இல்லை. அதை அவன் விடாது அனுஷ்டிக்கவேண்டும். எந்த தர்மத்தை யாலும் நன்றாய் நடத்தாமல் விட்டால்தான் தாழ்வு. ஸ்வதர்மத்தை செய்வதால்சிறந்த குணங்கள் எவனுக்கும் உண்டாகாமல் போகாது என்பது விளங்கும்.

* * *

மானஸபூஜையின் சிறப்பு:—ஓர் அரசன் ஒரு அழகியதும் சிறந்ததுமான ஒரு கோயிலைக்கட்டி அதை விஷ்ணுவிற்கு அற்பிதம்செய்து பகவான் விக்கிரஹத்தை அங்கு பிரதிஷ்டைசெய்ய நாளும் ஏற்படுத்திவிட்டான். கும்பாபிஷேகத்திற்காக அளவிடமுடியாத பணத்தைச் செலவிடுவதாக எண்ணி அவன் ஏற்பாடு முதலியனவைகளையும் செய்து தன் ஸ்நேகிதரான அடுத்த ஊர் அரசர் முதலியோருக்கு இந்த ஸங்கதியைத் தெரிவித்து அவர்களையும் கும்பாபிஷேகத்திற்கு அழைப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது இரவில் பகவான் அரசன் கனவில் தோன்றி, 'ஓர் ஏழைக்குயவன் தன் மனதில் எனக்காக ஓர் கோயில் தயார்செய்திருக்கிறான். அவனும் எனக்கு அதை அற்பிதம் செய்ய நீ பார்த்திருக்கும் வேளையையே பார்த்திருக்கிறான். நான் அவனிடம் அன்று இருக்கவேண்டும். ஆகையால் நீ வேறுநாள் பார்த்துக்கொள்' என்று சொல்லிமறைந்தார். மறுநாள் எழுந்ததும் அரசன் 'ஆ! என் கோயிலைவிட பகவானுக்குக் குயவன்கோயில் எவ்வளவு பெரிதாகப் போய்விட்டது. நான் என்னமோ அபிப்பிராயமாக கர்வப்பட்டு சீர் அழிந்தேனே! பணம் முதலியவைகளைவிட நிஜபக்தி எவ்வளவு சிறந்தது!' என்று எண்ணமிட்டுக்கொண்டு அந்த குயவசிரேஷ்டனைத் தேடிப்பிடித்து அவனுக்கு சிஷ்யனானான்,

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸாவித்ரி ஸத்தியவான்

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது. என் கணவன் அருளன்றி என்னால் எதுவும் செய்யமுடியாது. அவன் ஆட்டிவைப்பதுபோல் நானாடுகிறேன். என் கணவனே எனக்கு சரணாகதி. ஆபத்துக்காலங்களில் எனக்கு ஆனந்தமுண்டாக்குகிறவன் அவனே. அவனுக்கு யான் வணங்குகின்றேன்"—இதுதான் பத்தினிப்பெண்ணின் நித்திய ஸ்தோத்திரம்.

* * *

அன்பு அன்பு என்று எல்லோரும் அலக்ஷியமாய்ப் பேசிவிடுகிறார்கள். அன்பென்பது வீண்பேச்சா? யார்மேல் அன்பு செலுத்தப்படுகிறதோ அவர் பொருட்டு உன் ஹ்ருதயத்தில் கவலை உண்டாகிறதா? அவருக்காக உன் ஸுபத்தைவிட்டுவிட்டு உழைக்கவேண்டுமென்று தெரிகிறதா? அவர்க்காக உன் உயிரையுமளிக்க சித்தமாயிருக்கிறாயா? அது நிச்சயமானால் தான் அவர்மேல் உனக்கு அன்பு இருக்கிறதென்று நிச்சயம். மனைவியும் தன் கணவன்மேல் அன்புடையவள் ஆகையால் அவனுக்காக தன்னுயிரையுங் கொடுக்க சித்தமாயிருந்தால் தான் பதிவிரதை ஆகிறாள்.

* * *

அசுவபதி என்றொரு அரசன் இருந்தான். அவன் அநேகநாள் தவஞ்செய்து ஓர் பெண்குழந்தையைப் பெற்றான். அவள்தான் ஸாவித்ரி. அவ

ளுக்கு பதினாறுவயதும் கடந்தது. அரசர்கள் எத்தனையோ பேர்களை மணக்கமாட்டேன் என்று விட்டாள். கடைசியாக தெருவில் போய்க்கொண்டிருந்த யௌவன புருஷனொருவனை மணக்க மனங்கொண்டாள்; அவன்தான் ஸத்தியவான்.

* * *

அசுவபதிக்கு மனக்கவலை உண்டாய்விட்டது. நாரதர், ஸாவித்ரி பிறந்த காலத்து, சொல்லிய மொழிகள் அவன் மனதைப் புண்படுத்தின "குழந்தாய்! ஸத்தியவானுக்காயுள் இருபது வருஷந்தான். இனி அவனுக்கிருக்கும் நாளோ பன்னிரண்டு மாதங்கள்தான். அவனைவிட்டு வேறு யாரையாவது மணந்தால் எனக்கு சம்மதம்" என்றான். உடனே ஸாவித்ரி "என் மனம் எப்பொழுதவர்மேல் சென்றதோ அப்பொழுதே யான் மணந்துவிட்டேன். இனி மற்றொருவரை மணப்பது பாதிவிரத்யமாகாது. ஆகையினால் இப்பொழுதே அவர் இறக்க நேரிட்டால்கூட நான் அவரையே மணப்பேன்" என்று மறுத்துவிட்டாள். அரசனுக்கு மனக்கவலையினால் என்ன பிரயோசனம்?

* * *

அரசன் மகளாய்த்தான் இருந்தாலென்ன? அன்றி, ஏழைப்பெண்ணாகப் பிறந்தால்தான் என்ன? அவ்வவர்களுக்கு அவர்கள் நாயகன் வீடுதானே சொந்தமாகிறது. பிறந்தவீடு ஸ்திரமாகுமா? தாய் வீட்டாசையை ஒழித்தவள்தான் பெண். அவ்வாசை இருந்தால் தன் கணவன் வீட்டிலிருப்பதற்கு கொஞ்சம் அருவருப்பு உண்டானாலும் உண்டாகலாம். ஆனதினால் அதை விட்டுவிடுவதே பெண்களுக்கு முதல் வேலை.

* * *

காட்டில் ஸாவித்ரி ஆசிரமத்தில் வசித்துக்கொண்டிருக்கிறாள். மாமி மாமன்மார்களுக்கு நித்யம் செய்யவேண்டியவைகளை செய்துவிட்டு, தனது நாயகனுக்குத் தக்கமாதிரி நடந்துகொண்டுவருகிறாள். கலியாணமாய் பன்னிரண்டுமாதம் ஆய்விட்டது. ஸத்தியவானுக்கு ஆயுள்காலம் முடிவடைய இன்னம் ஒருநாள்தான் இருக்கிறது. மஹா கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாள். சூரியனும் உதயமாய்விட்டது. மனம் துடிக்கிறாள். முகம் கழுவிக்கொண்டு மாமி மாமன்மார்களுக்கு நமஸ்கரித்தாள். தீர்க்கஸுமங்கலீ பவ என்றார்கள். அவளுக்குள்ளம் சற்றுகுளிர்ந்தது.

* * *

பெண் தனது கணவன் சொல்லியப் பிரகாரம் நடக்கவேண்டியது மூல தர்மமாகும். கணவனுக்கு தன் தாய் தந்தை குரு இவர்கள் கூறியவண்ணம் நடக்கவேண்டியது அத்யாவச்யகம். ஆனதினால் பெண் எதையேனு விரும்பிடில், கணவன் தன் மேலோர் அநுக்ரஹமின்றி செய்யக்கூடாது. இது தான் நமது தர்மம்.

"ஆர்ய! நான் இதுவரைக்கும் உம்மை ஒன்றும் கேட்டதில்லை. இன்று எனக்கொரு அபீஷ்டமிருக்கின்றது. அது ஸித்திக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றாள் சாவித்ரி. "அது என்ன"? என்றான் சத்தியவான். "நான் தங்களோடு நீங்கள் ஸமித்து முதலானவைகளைக் கொண்டுவரப்போகும் பொழுது, கூடவர எனக்காசையாய் இருக்கிறது. இவ்விடம் வந்து பன்னிரண்டுமாத காலமாய் வாசற்படி கடவாமலிருக்கிறேன். எனக்கு காடு முதலிய இடங்களைப் பார்க்க ஆவலாய் இருக்கிறது. தடை செய்யாமல் ஆகட்டும் என்று சொல்லவேண்டு"மென்று கெஞ்சினாள். "ஆஹா! அதற்கென்ன, என் தாய் தகப்பன்மார் உத்தரவு பெற்றுக்கொள்; உன்னை அழைத்துக்கொண்டுபோகிறேன்" என்றான்.

* * *

மனைவிக்கு ஸஹதர்மிணி என்று பெயர். அதாவது அவள் தன் நாயகன்செய்யும் தர்மத்தையே தானும் நடத்தல். இதைச் செய்வதில் அவள் தன் மாமி மாமன் முதலியோருக்கு கோபம் வாராமலிருக்கும்படி செய்வதுதான் அவள் நடத்தைக் கழகு.

* * *

சாவித்ரி, மாமி மாமன்களுக்கு நமஸ்கரித்தாள். அவர் "தீர்க்க ஸுமங்கலீ பவ" என்றார். "அம்மா! இதுவரைக்கும் என் கணவன் காட்டிற்குப்போய் மிக கஷ்டப்பட்டு விறகுமுதலியவை கொண்டுவந்தார். புத்திதெரியாமல் சும்மா இருந்துவிட்டேன். என் கடமையை மறந்துவிட்டேன். இன்று முதல் நான் என் கணவனுடன் சென்று அவர்க்கு வேண்டியதைச் செய்ய ஆவல்கொண்டேன். என்னைத் தடுக்காமல், போய்வாவென்று ஆசீர்வதியுங்கள், அம்மா!" என்றாள், நமஸ்கரித்தாள். "குழந்தாய்! நீயோ சிறியவள். உன்னால் அங்குபோக முடியாது, வேண்டாமம்மா" என்றாள் மாமி. "அம்மா, அப்படி சொல்லாதேயுங்கள், உமக்குத் தெரியாததொன்றுமில்லை, நான் ஸகதர்மிணி, என் கணவன் செய்வதை நானும் செய்யவேண்டும். தயவுசெய்து என் தருமத்தினின்று என்னைத் தடுக்காதேயுங்கள்" என்று வேண்டிக்கொண்டாள். "ஆனால் ஸரி ஜாக்ரதை: சத்தியவானுடனே செல். வேறெங்கும் போகாதே" என்றாள் மாமி. "மாமி, என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள்" என்று நமஸ்கரித்தாள். "தீர்க்க ஸுமங்கலீ பவ."

* * *

"பரமாத்மா! உன்மேல் எனக்கேனிவ்வளவு ஆசை. நீர் ஜகன்மோஹனனாய் இருக்கிறீர். என் ஹ்ருதயகமலத்தில் நாட்டியஞ் செய்துக்கொண்டிருகிறீர். உம்மைப்புகழ்ந்து பாடுவதென்றால் எவ்வளவு ஆநந்தமாக இருக்கிறது. உமக்காக சிரமம் கொள்வதுகூட ஆநந்தமாகவே இருக்கிறது. நீர் இருக்க எனக்குக் கஷ்டம் எது? கஷ்டமென்பது எனக்கு இன்னதென்று தெரியவில்லை. எல்லாரும் கஷ்டம் கஷ்டம் என்கிறார்கள். கஷ்டம் என்று

அவர் சொல்வதெல்லாம் எனக் கானந்தமாகத்தான் இருக்கிறது" என்று நினைந்து நினைந்து தன் கணவனுக்காக தன்னுயிரையும் தியாகஞ் செய்ய ஸர்வ ஸித்தமாயிருப்பவளே பெண்களில் பெரியபெண். அவளுக் கென்றும் புகழே கவச மாய்விடுகிறது.

* * *

அவனிடம் மயங்கிய ஆத்மா அவனேயன்றி வேறாகுமா? அவனெங்கெங் கிருக்கின்றானோ அங்கங் கேநிற்கும். அவன் ஸுஷுப்தியிலிருந்தால் அதுவும் ஸுஷுப்தியிலிருக்கும். அவன் யோகத்திலிருந்தால் அதுவும் யோகத்திலிருக்கும். அவன் ஜாக்ரதையிலிருந்தால் அதுவும் ஜாக்ரதையிலேயேயிருக்கும். இது வேதாந்தமதம் என்றும் பொய்யாப் பெரும்பொருள். மனைவியும் தன் கணவன் இடத்தில் ஐக்கியம் ஆய்விட்டால் அவன் எங்கோ அவளும் அங்கே. அவன் இங்கிருந்தால் இங்கிருப்பாள். அங்கிருந்தாலங்கிருப்பாள். இது அவள் ஒற்றுமை ஆகும். இது அவள் லக்ஷணத்தின் லக்ஷியமாகும்.

* * *

காட்டில் களைத்து அயர்ந்து ஸாவித்ரி மடியில் ஸத்தியவான் தூங்குகிறான். விறகுமூட்டை எல்லாம் கட்டி ஆய்விட்டது. சமித்தும் தர்ப்பமும் எடுத்தாய்விட்டது. "ஆ! அதென்ன கருமேகம்போல் வருகிறதே" என்றலறினாள் ஸாவித்ரி. "அம்மா நான்தான் காலபுருஷன். என்னை இவ்வுலகத்தில் யமன்என்று சொல்வார்கள். தங்கள் கணவர்க்குக் காலம் ஆய்விட்டது. இனி நீங்கள் அவரை என்னிடம் ஒப்புவித்துவிட்டு உங்கள் வீட்டுக்குப்போங்கள். அவரவர்களுடைய செயல்களுக்குத் தகுந்தமாதிரி அவரவர்கள் அனுபவிக்கவேண்டும். நீங்கள் மயங்குவதில் பிரயோஜனமில்லை" என்று வணக்கமாக காலநேமி சொன்னான். "உன்னிடம் என் தலைவனை ஒப்பிவிக்கவாவேண்டும்! உனக்கும் அவர்க்கும் அவ்வளவு பாத்யதை?" என்று சீறினாள் ஸாவித்ரி. "தாங்கள் கோபிப்பதில் என்னபிரயோஜனம்? அவரவர் வந்தவழியைத் தேடவேண்டியதுதான். இவ்வளவுதான் உமக்குமவர்க்கு மிசைந்தபொருத்தம். தாங்கள் பதிவிரதை ஆனதினால் உம்மிடத்தி லிவ்வளவு வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். தடங்கல் செய்யாதேயுங்கள். பின்பு நான் வேறு விதம் ஸத்தியவானைக் கொண்டு செல்லப் பிரயத்தினப்படுவே" னென்றான் யமன். பதில் ஒன்றுமில்லை.

* * *

யமன் சொல்லியதொன்றும் ஸாவித்ரி காதில் விழவில்லை. அவள்மனம் அங்கு இல்லை. கணவனிடம் மயங்கிவிட்டது. கணவனே தானாய்க் கலந்துவிட்டது. யமன் பார்த்தான். காத்திருந்தான் சற்றுநேரம். கோபமதிகரித்தது. பாசத்தை வீசினான். ஸத்தியவான் உயிரைக் கவர்ந்தான். கடந்துபோனான். ஸாவித்ரியும் பின்னே சென்றாள். அவன் எந்தரூபம் எடுத்தாலும் ஞானேந்திரியத்தால் ஸாவித்ரி அறிந்துவிடுகிறாள். பின்பிதைப் பார்த்து "ஸாவித்ரி என் வீணாக அலைச்சல்படுகிறாய். பிரயோஜனமில்லாமல் ஏன் கஷ்டப்படுகிறாய். வீட்டிற்குத் திரும்பிப்போ" என்றான் யமன். "எனக்கு வீடு நாடு ஒன்றுங்கிடையாது. என்கணவனே எனக்கு ஊரும் நாடும் உத்தமதெய்வமும்; அவரெங்கிருக்கிறாரோ அங்கிருத்தலே எனக்கு தர்மமும். நான் ஸகதர்மணி, என்கணவன் தொழிலே எனது தொழில்; அவர் போகுமிடத்துக்கு நானும் வருவேன்" என்றாள் ஸாவித்ரி.

* * *

"காரணமில்லாமல் காரியமிராது. வாசனையில்லாமல் மலருமிராது. காற்றிலாமல் உயுருமிராது. பக்தி இன்றி பூசையுமிராது. அன்பிலாம லானந்தமிராது. நாயகன் இன்றி நாயகியுமிருக்கமுடியாது" இதுவே ஸாவித்ரியின் கொள்கை.

* * *

யமன் என்ன செய்வான்? விழிக்கிறான்; என்ன செய்தாலும் ஸாவித்ரி விடுபவளாகக் காணவில்லை. மாயமாய் போகலாமென்றாலும் முடியவில்லை. அவளிடத்து மாயம் பலிக்குமா? ஞானம்வந்தால் பின் மாயையும் நிற்குமா? கடைசியாக "ஸாவித்ரி உனக்கீக நான் மெச்சினேன். ஆனாலும் உன்கணவனை உனக்குக் கொடுக்கமுடியாது. வேறு ஏதேனும் வரன் கேள் கொடுப்பேன்" என்றான், "ஆனால் சரி என்மாமனார் சந்தோஷமாக தன் பேரனைப்பார்த்துக் களிப்பாக விளையாடி முத்தமிடும்படியாக ஈதோர் வரம் தா" என்றாள் ஸாவித்ரி. "கொடுத்தேன்" என்றான் யமனும். "இனியாவது என் கணவனைத்தராமல் தடுக்கமுடியாது. வீண்கஷ்டம் உண்டாக்குவதில் பிரயோஜனமில்லை. உம்முடைய வாக்கைக் காப்பாற்றும்" என்றாள் ஸாவித்ரி.

* * *

"நீயே பதிவிரதை, நீயே பெண்ணுள் பெரியவள். உன்னைக்கண்டு மெச்சினேன். உன் நாயகனை எடுத்துப்போ" என்று மாயமானான் யமன். ஸத்தியவான் தூங்கி எழுந்தவன்போல் எழுந்தான். இருவரும் ஆச்ரமம் சென்றார். சுகமே வாழ்ந்தனர்:—என்பது நமது புராணகதை.

* * *

"ஸாவித்ரீ! உன்னாலல்லவோ உலகம் பெருமை அடைகிறது. உன்னாலல்லவோ எமனும் வெல்லப்பட்டான். உன்னாலல்லவா விதியும் அன்பினால் ஜயிக்கப்பட்டது. உன்னைப்போல் நடப்பதல்லவா பெண்களுக்குப் பெருமை. உன்னை ஸ்துதிக்கிறோம். நீ யமனை ஜயித்ததை வருஷந்தோறும் * கொண்டாடுவோம். 'அதற்கே காரடையான் நோம்பு என்று பெரியோர் பெயர்வைத்தார்கள். உன்போல் நடந்து, உன்னைப்போற்றி' எம் கணவருக் கிணங்க உறுதியாய் நடப்போம். இதோ ஸத்தியஞ் செய்கிறோம்" என்று சொல்பவர்தான் பதிவிரதைகள்.

* இதற்கு பொருள் யமன் (கணவன்) கிட்ட வராத விரதம். இதை ஜனங்கள் காரடியா நோம்பென்று வழங்குகிறார்கள்.

வா. சேஷகிரி சாஸ்திரி.

விசேஷவர்த்தமானங்கள்

GENERAL NEWS

சமாசார பத்திரிகை:—பிராஞ்சு தேசத்திலுள்ள கணக்காளி ஒருவர் உலகத்தில் 82,000 சனங்களுக்கொரு சமாசாரபத்திரிகை உளதாகக் கணக்கிட்டிருக்கிறார். ஐரோப்பாக் கண்டத்தில் ஜர்மனி தேசம் இவ்விஷயத்தில் முதலாயிருக்கின்றது. அங்கே 5500 பத்திரிகைகள் உள்ளன; அவற்றில் 800 தின பத்திரிகைகள். அடுத்து நிற்பது ஆங்கில தேசம். அங்கு 3000 பத்திரிகைகளுள்ளன; அவற்றுள் 809 தினந்தோறும் பிரசரமாவன. மூன்றாவதாயுள்ளது பிராஞ்சு தேசம். அங்கு 2819 பத்திரிகைகளுள்ளன. அவற்றுள் நாலிலொரு பங்குதான் தினமும், அல்லது வாரத்துக்கு மும்முறை, அல்லது இரு முறை பிரசரிக்கப்படுவன. ஐரோப்பாக்கண்டத்தில் எல்லாமாக 20,000 பத்திரிகைகள் உள்ளன. அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணங்களில் 12,300 பத்திரிகைகள் உள்ளன; அவற்றுள் 1000 தின பத்திரிகைகள்; 120 கரிய நீகிரோச் சாதியாரால் பிரசரம் செய்யப் படுவன. ஆசியாக் கண்டத்தில் 3000 பத்திரிகைகள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலன இந்தியாவிலும் ஜப்பான் தேசத்திலும் பிரசரமாவன. ஜப்பான் தேசத்திலுள்ள பத்திரிகைகளின் தொகை மாத்திரம் 1500. ஆபிரிக்காக் கண்டத்தில் ஆக 200 பத்திரிகைகளே உள்ளன. அவற்றுள் முப்பது எகிப்து தேசத்திலும் மற்றையவை நேட்டால், கேப் கலனி முதலிய ஐரோப்பியர் வாழுநாடுகளிலுந் தோன்றுவன.

***

மோடார் வண்டியும் தேக ஸௌக்கியமும்:—மோடார் வண்டியிலே போவதால் நமது தோலுக்கு ஒரு தளதளப்பும், ரக்தபுஷ்டியும், மூச்சுவிடும் சக்தியும், நரம்புகளின் நல்ல நிலையும் உண்டாகின்றனவாம். ஆகையால் ரிக்தசோஷம், தூக்கம் இன்மை, பசி மந்தித்துப்போதல் முதலிய ஸாதாரணவியாதிகளுக்கு மோடார் வண்டியில் தக்கவேகமாகப்போய் வருதல் அவசியம் என்று ஒருவைத்தியர் அபிப்பிராயப்படுகிறார். இதையும் அவரே பரீக்ஷித்துப்பார்த்திருக்கிறாராம். ஒருவருஷத்தில் அநேக ருதுக்களில் மோடார் வண்டியில் ஏறிச்சென்று முடிவில் தன்தேகத்தில் ரக்தபுஷ்டி உண்டானதை அவரே கண்டறிந்திருக்கிறாராம். சுமார் 4,000 அல்லது 5,000 அடி உயரத்தில் மலைப்பிரதேசங்களிலிருந்தால் நமக்கு எவ்வளவு தேகஸௌக்கியம் உண்டாகுமோ அவ்வளவு ஸௌக்கியம் மோடார் வண்டி ஸவாரியால் உண்டாகின்றதாம்.

க்ஷயரோகம் பரவும் விதம்:--இதுவரையில் எல்லோரும் ஒருக்ஷயரோகி உமிழும் எச்சிலிலிருந்து வரும் நீராவியையாவது அல்லது அவன் இருமுங்கால் உண்டாகும் எச்சில்திவலைகளையாவது மற்றையவர் தாம் இழுக்கும் மூச்சோடுசேர்த்து சுவாஸம் இழுப்பதால் க்ஷயம் விருத்தியாகிப் பரவுகின்றது என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இக்காலத்திய சில வைத்யர்கள் சுவாஸயந்திரத்தின் மூலமாக இந்த வியாதி பரவுவதில்லை என்றும், இவ்யாதிக்குரிய புழுக்கள் நமது குடலுக்குள் பிரவேசித்து அதன் மூலமாக சுவாஸ யந்திரத்தருகில் போனால் மாத்திரந்தான் இவ்யாதி உண்டாகும் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். க்ஷயரோகமுள்ள பசுவின்பாலைக் குடித்தால் அநேகம் குழந்தைகளுக்குக் குடல் மூலமாக இவ்யாதி உண்டாயிருப்பதே இதற்குப்போதுமான ஸாக்ஷியாகும். இனிச்செய்யப்படும் பரிசோதனைகளால் முடிவில் க்ஷயரோகம் சுவாஸமூலமாக உண்டாவதல்ல என்று ஸ்தாபிக்க இடமுண்டாகலாம். இதோடு க்ஷயரோகமுடைய பசுக்களே இல்லாத சீனதேசத்திலே இவ்யாதி விருத்தியாகிப் பரவக்காரணம் இன்னது என்பதும் வெளிவரலாம்.

***

வலக்கையின் உபயோகம் புத்தித்தெளிவைக் குறித்தும்:— இடக்கையைப்போல வலக்கையையும் உபயோகிக்கப் பழகவேண்டும் என்ற விஷயத்தை அனேகர் அங்கீகரிக்கின்றார்கள். ஆனால் ஒரு பெரியவர் அவ்வாறு செய்வது அஸாத்தியம் என்றும், நல்லதல்ல என்றும் ஆக்ஷேபிக்கிறார். நமது வலது கை மிகுந்த உபயோகமாக இருப்பது நமது ஸொந்த முயற்சியால் அல்ல, மனுஷ்ய தேகக்கட்டின் ஸ்வபாவத்தைப் பொருத்தது. முன்புறத்திலிருக்கும் மூன்றாவது மூளை மடிப்பைப்பற்றிச் செய்த ஆராய்ச்சியில் அதன் இடது பக்கத்திற்கு ஏதாவது கெடுதி வந்தால் வலக்கையை அதிகமாக உபயோகிக்கும் ஒருவனுக்கு பேசும் சக்திபோய்விடும் என்றும் இடது கையையே அதிகமாக உபயோகிக்கும் ஒருவனுக்கு அவ்வாறாகாது என்றும் தெரியவருகிறது. ஆகையால் வலது கையையே அதிகமாக உபயோகிக்கும் ஒருவனுக்கு மூளையின் இடது பாகத்தில் பேசும் சக்தியும் மற்றைய ஒழுங்கும் அதிகமாக இருத்தல் வேண்டுமென்பது விளங்கும். வலதுகையை எல்லோரும் வெகுகாலமாக உபயோகித்து வருகிறார்கள். சிற்சில வேலைகளில் இருகைகளையும் ஒரே சக்தியுடன் உபயோகிக்கும் சக்தி அவசியமாக இருக்கலாம். ஆனால் எல்லோரும் அந்த சக்தியை உடைத்தாய் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவது அனர்த்தமாகமுடியும். மூளையின்பாகங்களுக்கு அனாவசியமாக அதிக வேலை உண்டாக அவை தளர்ச்சி அடையும். இது பைத்தியம் உண்டாவதற்குத் தக்க லக்ஷணம் என்பதை யாவரும் அறிந்த விஷயமே.

பூமியில் மனிதர்கள் முதலில் வஸித்த இடம்:— சென்ற நூற்றாண்டுகளில் பெரியோர்கள், பொதுவாக மனிதர்கள் முதலில் மத்திய ஆசியாவில் இருந்தார்கள் என்றும் அங்கிருந்து உலகெங்கும் அவர்கள் மேற்கே ஐரோப்பாவை நோக்கியும் தெற்கேகும் பரதகண்டத்தை நோக்கியும் போனார்கள் என்றும் அபிப்பிராயப்பட்டார்கள். அதன் பின்பு மனிதர்களின் ஆதி இருப்பிடம் ஐரோப்பாவில் லாப்லந்து தேசம் என்று அபிப்பிராயப்பட்டார்கள். பாலகங்காதர திலகர் என்பவர் தாம் எழுதிய 'வேதங்கள் பிறப்பிடம் வடக்குதுருவம்' என்ற கிரந்தத்தில் ஆதியில் ஆரியர்கள் பூமியின் வடக்கு துருவபாகத்தில்தான் இருந்திருக்கவேண்டும் என்று ருக்வேதமுதலியவைகளில் காணப்படும் ஸூர்ய உதயம், பகல் இரவு முதலியவைகளின் வர்ணனைகளை எடுத்துக்காட்டி நன்றாக ஸ்தாபித்தார். மேலும் அவர் பூதத்வ சாஸ்திரப்படி ஆதிகாலத்தில் மனிதர்களுக்கு உலகம் வாஸயோக்யமானபொழுது பூமியின் வடக்குத் துருவம் இப்பொழுதிருப்பதைப்போல அவ்வளவு குளிர்ச்சியாய் இல்லை என்றும், அக்காலத்தில் அங்கு ரமணீயமான, சீதோஷ்ண நிலை இருந்ததென்றும் ஸ்தாபித்து தமது அபிப்பிராயத்தைத் திடப்படுத்தினார். அதற்குப்பின்னால் கொஞ்சகாலத்திற்கெல்லாம் ஸெர்வீஸ் என்ற மஹாபண்டிதர் ஒருவர் பைபிலில் காட்டி இருக்கிறபடி ஆதி ஸ்திரீபுருஷர்களாகிய ஆதாம் ஏவாள் வஸித்த ஸ்வர்க்கத்தோட்டமானது துர்க்கிதேசத்திலிருக்கும் ஆர்மீனியாவில் இல்லை என்றும், அது பூமியின் வடக்குத்துருவத்திலிருக்கவேண்டும் என்றும் வடக்குத்துருவத்தின் அருகாமையில் கப்பல்யாத்திரை செய்தவர்கள் கண்டகாட்சிகள், பூதத்தவசாஸ்திரக்கோட்பாடுகள் ஆகிய இவைகள்மூலமாக அங்கு முற்காலத்தில் ஜந்துக்கள் வஸித்து பயிறு பச்சைகள் செழித்திருக்கவேண்டும். என்றும் ஐயந்திரிபுஅற ஸ்தாபித்திருக்கிறார். ஆகவே முன் எடுத்துக் காட்டியுள்ள முகாந்திரங்களிலிருந்து ஆதியில் மனிதர்கள் பூமியின் வடக்குத்துருவத்தில்தான் வாஸஞ் செய்துகொண்டிருந்தார்கள் என்று வெளியாகின்றது.

∴

க்ஷயரோகமும் நேத்திர பரீக்ஷையும்:--கண்ணுக்கு அதிகவேலை ஏற்பட்டால் அதனால் ஜீர்ணயந்திரங்களுக்குப்போகும் நரம்புகள் தளர்ந்து அதன் மூலமாக அவ்யந்திரங்களில் கெடுதி உண்டாகும். இவ்வாறு உண்டாயிருக்கும் ஒருவனுக்கு க்ஷயரோகம் வந்தால் குணத்துக்கு வருவது மிகக் கடினமாம். மேலும் இவ்வாறு நரம்புகள் தளர்ச்சி அடைவதே க்ஷயரோகத்தை கொண்டு விடும் காரணமாகவும் இருக்கலாம். ஆகையால் க்ஷயரோகம் இருக்கிறதா இல்லையா என்று சோதிக்கப் புகுந்த இடங்களில் முக்கியமாக முதலில் கண்ணைப் பரிசோதித்தல் அவசியம் என்று ஒரு சிறந்த வைத்யர் அபிப்பிராயப் படுகிறார்.

சீட்டாட்டத்தால் உண்டாகும் தீங்கு:— சீட்டாட்டத்தில் அதிகமாக மூழ்கிக்கிடப்பவர்களது முகத்தில் ஓர்விதக்கோணல் நாளடைவில் உண்டாகிவிடும். அநேகர் சீட்டிலிருக்கும் பைத்தியத்தால் நடுநிசிவரையில் ஆடிக்கொண்டிருப்பார்கள். சிலர் நடுப்பகல் தொடங்கி ஸூர்யாஸ்தமனம் வரையில் ஓயாது ஆடுவார்கள். இம்மாதிரியான நீடித்த ஆட்டத்திற்கு உட்காரும் முன் ஒருவன் முகம் தளதளப்பாயும் அழகாயும் இருந்தபோதிலும், அதன் முடிவில் அவன் முகம் வெளுத்து, நீண்டு கோரமாக, அவனுக்கு எளிதில் கிழத்தனக்குறிகள் உண்டாகின்றன. இதை ஒவ்வொருவரும் ஆட்டம் முடிந்ததும் கண்ணாடி பார்த்தலால் அறிந்துகொள்ளலாம். சீட்டாட்டத்தில் மனோநிரோதசக்தி, சித்தஸமாதானம், பணம் முதலியவைகளை இழக்காமலிருப்பதற்கு ஒருவனுக்கு மிகுந்த ஸாமர்த்தியமும், மனோதிடமும் இருத்தல்வேண்டும். முன்னுள்ள இரண்டையும் இழந்தால் பின்னதும் போய்விடும், பின்னது போய்விட்டால் முன்னுள்ள இரண்டும் தாமேபோய்விடும். இம் மூன்றையும் இழக்காது சீட்டாட்டம் ஆடுபவர்களுக்கு அதனால் தேகம் குரூபமாகமாட்டாது. இம்மாதிரி முன் கூறியவை இழக்காது சீட்டாடவல்லவர் இல்லவே இல்லை என்றே சொல்லலாம். அப்படிப்பட்டவர்கள் யாராவது இருந்தால் அவர்களைத்தவிர மிகுதியான பெரும்பாலரது கதி என்ன? சீட்டு அதிகமாக ஆடுபவர்களுக்கு கண்ணின் தூரதிருஷ்டி சக்தி வரவரகுறைந்துபோக அவர்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் கவலையைக்குறிப்பிக்கும் பார்வை எளிதில் உண்டாய் விடுகின்றது.

∴

மீன்களில் காணப்படும் ஓர்வித உணர்ச்சி:--சென்ற 50 வருஷமாக மீன்களில் இருபாகத்திலும் காணப்படும் சதைக்கிளர்ச்சிகள் அவைகளின் ஏதோ ஒரு நரம்போடு ஸம்பந்தப் பட்டவை என்று எல்லோரும் எண்ணி இருந்தார்கள். ஆனால் அவைகளால் மீன்களுக்கு என்ன உபயோகம் என்பதை ஒருவரும் உள்ளபடி அறிந்தார்கள் இல்லை. ஒரு பிரகிருதிதத்வ சாஸ்திரியின் பரிசோதனையால் இப்பொழுதுதான் அவைகளால் நீரோட்டங்களையும் அவைகளின் போக்குகளையும் உணரும் சக்தி மீன்களுக்கு உண்டாகின்றது என்று தெரியவருகிறது. அவைகளால் தான் குளத்தில் காணப்படும் மீன்கள் உள்ளே இருக்கும் கற்களில் மோதிக்கொள்ளாது தப்பி ஸஞ்சரிக்கின்றன. ஒரு கல்லின் அருகில் வருகையில் பக்கத்திலிருக்கும் சதைக்கிளர்ச்சி மூலமாக அவைகளுக்கு கல்லிருக்கிறது என்ற உணர்ச்சி உண்டாக உடனே அவை திரும்பி வேறுமார்க்கத்தில் செல்கின்றன. இதுபோலவே தூரிஞ்சில்களும் வேகமாகபறக்கும் பொழுது தமது இறகுகளின் மூலமாக சுவர் முதலியவைகள் இருப்பதை அறிந்து அவைகளில் மோதிக் கொள்ளாது கோயில் முதலிய கல்கட்டிடங்களில் ஸாதாரணமாக பறக்கின்றன.

இந்துலேகை

(ஒரு மலையாள நாவல்)

இரண்டாவது அத்தியாயம்

(55-வது பக்கத்தின் தொடர்ச்சி)

இந்துலேகையின் கல்வித் திறமையும் சுகுணச் சிறப்பும் அவளது மேனியின் அழகுக்கு எவ்விதத்திலும் பின்வாங்கினவையாயில்லை.

அவள் மேனியழகுடன் கல்வியழகும் குணவழகும் பொருந்தப்பெற்று 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்பதற்கிலக்கியமாய் விளங்கினாள். அவள் கிளிமானூர் ஜாகீர்தார்களில் ஒருவருடைய மகள்; அவளுக்கு மூன்றுவயது நிறைவதற்குமுன்னமே தந்தை காலகதியடைந்தார். அவளது பாட்டனாராகிய பஞ்சுமேனவனின் மூத்த குமாரரும், அப்போது மாதமொன்றுக்கு 800 ரூபா சம்பளமுள்ள திவான் பேஷ்கார் உத்தியோகம் செய்துவந்தவரும் அவளது அம்மானுமாகிய கொச்சு கிருஷ்ண மேனவன் என்பவர் அவளைத் தாம் உத்தியோகமாயிருக்கும் இடத்துக்கு அழைத்துச்சென்றார்; அவளும் தனக்குப் பதினாறு வயதாகிறவரையில் அங்கேயே படித்துக்கொண்டிருந்துவந்தாள். கிருஷ்ண மேனவனே இங்கிலீஷ் ஸம்ஸ்கிருத பாஷைகளிலும் சங்கீதமுதலிய கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தபடியால், இந்துலேகையையும் இங்கிலீஷ் இலக்கண இலக்கியங்களில் நன்றாய்ப் பயிற்றுவித்தார்; ஸம்ஸ்கிருதத்திலே நாடகாந்தம் விற்பத்தி உண்டாக்குவித்தார். சங்கீதத்திலே அவள் சரளிபயின்றது மாத்திரமல்லாமல் பியானோ, பிடில், வீணை என்னும் வாத்தியங்களை வாசிப்பதிலும் வல்லவளானாள். அதோடுகூட, ஐரோப்பியப்பெண்கள் பழகப்பெறுகிற தையல்வேலை, சித்திரமெழுதுதல் முதலிய கலைகளிலும் தம் செல்வமருகிக்குச் சிக்ஷை சொல்லுவிப்பதில் அவளது அம்மான் அசிரத்தையாயில்லை. ஓர் ஐரோப்பியக் குலமகளுக்கிருக்கவேண்டிய கல்விவல்லமையும் நாகரிகமான மனத்தேர்ச்சியும் இந்துலேகைக்கிருக்கவேண்டுமென்பதே உண்மையில் அவரது மனோரதமாயிருந்தது. அந்தக் கோரிக்கைக்குத் தகுந்தபடியே, அப்படிப்பட்ட உதாரமனதும் ஸ்திரசங்கல்பமுமுள்ள அவர் ஆரம்பித்தகாரியமானது அவளது பதினாறுவது வயதுக்குள் எம்மட்டிலும் நிறைவேறக்கூடுமோ அவ்வளவுமட்டிலே அவள் விஷயத்திலே அவர்செய்த பிரயத்னங்களெல்லாம் சித்திபெற்றன. ஆனால் பூரண சந்தோஷ மனுபவிக்கும்படியான பாக்கியத்தை விதியானது ஒருவருக்கும் அளிப்பதில்லையாகையால், இந்துலேகைக்குப் பதினாறும்வயது தொடங்கிக்கொண்டிருக்கையிலேயே, கிருஷ்ண மேனவன் பரகதியடைந்தார். அது முதல் இந்துலேகை பூவரங்கிலுள்ள தன் பாட்டனார் வீடு போய்ச்சேர்ந்து அங்கே அவருடனும் தன் தாயாருடனும் வசித்துவரலானாள்.

பஞ்சுமேனவனுக்கு இந்துலேகை பேத்தியானபடியாலும் அவருக்குக் கண்மணிபோலிருந்துவந்த அவரது மகன் கிருஷ்ணமேனவன் அவளை அன்பாய் வளர்த்துவந்தபடியாலும் அவளும் இனிய நற்குணம் நிறைந்த நங்கையாயிருந்தபடியாலும் அவளிடத்தில் அவர் வைத்திருந்த ஆசைப் பெருக்கம் இவ்வள வவ்வளவென்று சொல்ல முடியாதபடியிருந்தது. அவ்வாசையை அவர் இப்போது பற்பல விதங்களில் காட்டிவந்தார். அவள் பிரத்தியேகமாய் வசிப்பதற்கென்றே இரண்டு நிலையுள்ள ஒரு மாடி வீட்டை ஏற்படுத்தி அதை ஆங்கிலேயர் வசிக்கும் பங்களாவைப்போல் சகலவித சாமான்களைக் கொண்டும் ஒழுங்காயும் நேர்த்தியாயும் ஜோடித்துவைக்கும்படிக் கட்டளையிட்டார். அவர் ஒவ்வொரு விஷயத்திலும் இந்துலேகையின் இஷ்டம் இன்னதென்று அவளை யோசனை கேட்டு வந்ததல்லாமல், கிருஷ்ண மேனவன் அகாலத்தில் மரித்துப்போனதால் அவளுடைய வாழ்க்கைப்பாங்குக்கும் சுகத்துக்கும் யாதொருகுறைவும் உண்டாகக் கூடாதென்று ஏற்பாடு செய்தான்.

இந்துலேகையின் அம்மான் விவேகபூர்வமாய்எற்படுத்தியிருந்த முறையை அநுசரித்து அவள்படித்து அறிவடைந்திருந்தபடியால், அவளது இயற்கையான சுபாவம் எவ்வளவு மனோகரமாயிருந்ததோ அவ்வளவு அவள் தினந்தோறும் செய்துவந்த காரியங்களும் கிருத்தியங்களும் பிரயோஜனமுள்ளவைகளாயிருந்தன. அவள் தான் இங்கிலிஷ் படித்துவிட்டகாரணத்தால் இறுமாந்து, தான் ஒரு மலையாள ஸ்திரீ என்பதைக் கொஞ்சமாகிலும் மறந்தாளில்லை. சிலர் குறைப்படிப்பு படித்துவிட்டு மற்றவர்களையெல்லாம் மகா மூடர்களென்று இழிவாய் நோக்குகிறார்களல்லவா? அப்படிப்பட்ட துர்க்குணம் நம் இந்துலேகையினிடம் ஒரு சிறிதும் கிடையாது. அவள் முறைதவறாமல் ஜாதியாசாரங்களை அநுஷ்டிப்பதையும், அவளுடைய வஸ்திராலங்காரத்தையும் சம்பாஷணையழகையும், அவள் தன் தாயாருக்கும் பாட்டியாருக்கும், பாட்டனாருக்கும், அம்மானுக்கும் காட்டிவந்த வணக்கத்தையும், அவளது பக்தி சிரத்தைகளையும், இங்கிலிஷ் தெரியாத சிநேகிதர்களிடத்திலும் பந்துக்களிடத்திலும் அவள் நிஷ்கபடமாய்ப் பழகிவந்ததையும், அவளுடைய மரியாதையான நடவடிக்கையையும், அவளது பேச்சிலும் காரியங்களிலும் காணப்பட்ட அழகையும், அவளது கர்வமற்ற தன்மையையும் ஆடம்பரமற்ற விநயத்தையும் கண்டு அவளது மித்திரர்கள் ஓயாமல் வியந்து கொண்டாடிய வண்ணமாயிருந்தார்கள்.

இதைக் கவனித்து வந்த விவேகிகளெல்லோரும் இதுவே சிறுமிகளைப்பயிற்ற வேண்டிய சிறந்த வழியென்று அபிப்பிராயப் படலானார்கள். இந்துலேகையும் அதற்குத் தக்கபடியே மகா விவேகியும் சற்குணசம்பன்னனுமாகிய கிருஷ்ண மேனவனுடைய பெயர் பெருமையும் பிர்க்கியாதியும் பெற்று விளங்கும்படி சிலாக்கியமாய் நடந்து வந்தாள்.

புத்தகவரவு
BOOKS RECEIVED

1. யசோதரகாவ்யம்.—இது தமிழில் சிறந்த ஐந்து காவியங்களில் முதலாவது. ஜயினமுனிவர் பாடியது. ம-ா-ா-ஸ்ரீ, பண்டித வெங்கிடரமய்யங்கார் அவர்கள் இயற்றியது. ... விலை அணா 8.

2. பீமலா.—அல்லது திவான்மகள். (அக்பர் சக்கரவர்த்தி காலத்தில் நடந்த ஓர் சரிதை. ம-ா-ா-ஸ்ரீ, R.P. குலந்தசாமி B.A., L.T., அவர்களால் இயற்றப்பட்டது. ... ... விலை அணா 6.

3. 1908-ம் வருஷ பூஸ்திதிகளைப்பற்றிய 1-வது அக்.—இது மெஸர்ஸ் ஜி. வி. லோகனாதம் அண்டு பிரதர்ஸ் அவர்களால் மிகவும் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 6.

குறிப்பு.—இவைகளைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் விரிவாய் எழுதுவோம்.

"விவேக போதினி"

ஓர் அருமையான மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்களாவன

1. ஜாதிமதாசார ஸம்பந்தமானவை
2. உலக ஒழுக்கங்கள்
3. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்
4. வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம்
5. தக்கவர்களைக் கொண்டு எழுதப்பட்டுவரும் நாவல்களும் நாடகங்களும்
6. சிறுவர்க்கான நன்னெறிக் கதைகள்
7. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதகங்கள்
8. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர், மிகவும் பிரஸித்தி பெற்றவர்களும், உலக அனுபவமுள்ளவர்களும். மிகவும் இனிய செந்தமிழ் நடையில், சிறுவர்கள் சிறுமிகள்கூட படிக்கக்கூடியவண்ணம் எழுதப்படுகிறது.

"விவேகபோதினி" பிரதிமாதம் 25உ ஒழுங்காகப் பிரசுரமாகும்.

சந்தாவின் விபரம்

தபால்கூலியுள்பட வருஷசந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ...	3	0	0
பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால், வகைரா இடங்களுக்கு ...	4	8	0
தனிப்பிரதி	0	5	0

மற்றை விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
"விவேக போதினி,"
மைலாப்பூர், சென்னை.

ஸுஜாதா

இது பண்டிதை விசாலாக்ஷியம்மாளால் எழுதப்பட்ட அருமையான தமிழ்க்கதை. மனோல்லாஸத்தை விளைவிக்கும் ம்ருதுரஸம் செறிந்த இந்தக் கிரந்தம் நவரஸங்களமையப் பெற்று ஆச்சரியமான விஷயங்களை விவரித்துக்காட்டுகிறது. இதில் தர்மம், ஹாஸ்யம், ஸந்தோஷம், ஸமயோசித வார்த்தைகள், பலவித உபாயம், சாதுர்ய வசனங்கள், ஸுகாதாரம், வியவசாயம், தெய்வபக்தி, பதிபக்தி, குருபக்தி, சகோதர வாஞ்சை பிரேமமயமான ஸம்பாஷணை, தாம்பத்யாநந்தம் இவைகள் நிறைந்திருக்கின்றன. கதாநாயகியான ஸுஜாதாவின் ஸாஹஸ், தைர்ய, சமத்காரங்களும், கோஷவதியின் விவேக ஆலோசனை அதிசயோக்திகளும் விஸ்தாரமாய் விவரிக்கப்பட்டுள. ஸ்திரீ புருஷர்களிருவருக்கும் அத்யாவச்யமான கிரந்தமாகும். மனிதர்களுக்கு விசால புத்தியும், மதியூகமும், லௌகிக ஸாமர்த்தியமும் உண்டாக வேண்டுமானால் "ஸுஜாதா" வென்னும் அருமையான கிரந்தத்தைப் படிப்பது அவசியம். கிரி, துர்க்க வர்ணனைகளும், ஸத்யத்தின் பலனும், தர்மத்தின் பிரயோஜனமும் வெகு அழகாய் வரையப்பட்டிருக்கின்றன. எளிய செந்தமிழ் நடையில் ஒருவாக்யமேனும் பழுதாயிராமல் ரஸமுள்ளதாய் ஜ்வலிக்கும் இக்கிரந்தத்தை பிரதி யொருவரும் அவசியம் வாங்கிப்படிக்க வேண்டு மென்பதே எமது கோரிக்கையாகும். இதன் விலை 8 அணா. வேண்டியவர்கள் தங்கள் பெயர், ஊர், விலாசங்களை அடியிற்கண்டவர்களுக் கெழுதித் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளவும்.

PANDIT VISALAKSHI AMMAL.
Tamil Novelist,
'Devi Vilasam,' Madras.

WORLD-KNOWN
DEPILATORY.

ROYAL WONDER SOAPS

Remove superfluous hair at once : give no pain to the skin.

Re. 1-0-0 per box of three
Rs. 3-12-0 per Dozen soaps
Rs. 4-2-0 per Dozen post free

The Royal Agency,
P. O. Nadiad, Bombay.